# இப்படி ஒரு காலம்



கருணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Direc
Lehara
Educational
87,Kan
Kilin

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கருணாகரன்**

இலங்கையின் வடக்கே இயக்கச்சியில் பிறந்தவர் கருணாகரன். "ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல்", "ஒரு பயணியின் நிகழ்காலக்குறிப்புகள்", "பலியாடு", "எதுவுமல்ல எதுவும்" "ஒரு பயணியின்போர்க்காலக் குறிப்புகள்", "நெருப்பின் உதிரம்" என இதுவரையில் ஆறு கவிதை நூல்களும் "வேட்டைத்தோப்பு" என்ற சிறுகதைத் தொகுதியும் வெளியாகியுள்ளன.

சுயாதீன ஊடகவியலாளராகவும் சமூகச் செயற்பாட்டாளராகவும் இயங்கி வருகிறார்.

இவருடைய கவிதைகள் சிங்களம், ஆங்கிலம், மலையாளம், கன்னடம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன.

தந்தை கந்தையா சிவராஜா, தாய் - சிவராஜா சிவபாக்கியம்
மனைவி வசந்தி, பிள்ளைகள் - ஹேமந்த், மகிழ்

மின்னஞ்சல் poompoom2007@gmail.com

rary
rce Centre
kulam
inochchi.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படி ஒரு காலம்

கருணாகரன்

கரைச்சி கலாசாரப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இப்படி ஒரு காலம்**
(கட்டுரைகள்)
**கருணாகரன்**
**பதிப்புரிமை**
வசந்தி கருணாகரன்
**முதற்பதிப்பு**
ஏப்ரல், 2014
**வெளியீடு**
கலாசாரப்பேரவை, கரைச்சி, கிளிநொச்சி
**நூல் வடிவமைப்பு**
தானா விஷ்ணு
**அச்சுப்பதிப்பு**
ஆகாயம் பதிப்பகம்
இமையாணன், உடுப்பிட்டி, யாழ்ப்பாணம்.

**வெளியீட்டு எண் - 03**

**ippadi oru kaalam**
karunagaran
**copy right**
vasanthy karunagaran
**first edition**
april, 2014
published by kalacharapperavai of karaichchi, kilinochchi
**design**
thaana Vishnu
**printed at aakayam pathippagam**
imaiyanan, uduppiddy, Jaffna

**Rs 250.00**

**ISBN 978-955-4900-06-6**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணோடும் மனிதர்களோடும் வாழப்பிணைத்த
ஆச்சி (அம்மாவின் அம்மா)
**கதிராசிப்பிள்ளை (பொன்னு) க்கும்**

மண்ணின் கதைகளையும்
மக்களின் வாழ்க்கையையும் சொல்லும்
**தாமரைச்செல்விக்கும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

இந்தக் கட்டுரைகளைத் தொகுப்பதில் உதவிய ப. தயாளன் மற்றும் இதற்கான முன்னுரையை எழுதியிருக்கும் பிரியத்திற்குரிய தம்பி சு.சிறிகுமரன் (இயல்வாணன்), இவற்றை நூலாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்த கவிஞரும் கலாசார உத்தியோகத்தருமான கு.றஜீபன், வடிவமைத்த நண்பர் கவிஞர் தானா.விஷ்ணு ஆகியோருக்கும் வெளியிடும் கரைச்சி கலாசாரப் பேரவைக்கும் அதன் தலைவரும் பிரதேச செயலருமான கோ. நாகேஸ்வரன் மற்றும் எழுத்துத்துறையை நம்பி வாழும் என்னுடைய நிலையை அனுசரித்து இணைந்து பயணிக்கும் வசந்திக்கும்

இந்தக் கட்டுரைகளைப் பிரசுரித்த கரை எழில், புதிய வன்னி, எதுவரை, வீரகேசரி, noel nadesn.blogspot.com மற்றும் பொங்குதமிழ், தினமுரசு ஆகியவற்றிற்கும் அவற்றின் ஆசிரியர்களுக்கும்

வாசிக்கும் ஆர்வத்தைச் சிறுவயதில் ஊட்டி ஊக்குவித்து எப்போதும் என்னில் மாறா அன்பு கொண்டிருந்த பெருமாள் இரத்தினசிங்கம் அவர்களுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீள நினைந்திடும் வாழ்வு

ஒவ்வொரு மனிதனுக்கும் தனது வேர் பதிந்த கிராமங்களின் மீதும், அதன் இயற்கையான சூழமைவு மீதும், அங்கு வாழும் உயிர்ப்பான மனிதர்கள் மீதும் தீராக் காதலும், கடந்த கால வாழ்வின் கழிவிரக்கமும் உண்டு. அதுவே படைப்பாளிகளிடம் பகைப்புலமாகவும், வர்ணனை களாகவும், கதாமாந்தர்களாகவும் புலக்காட்சி பெற்று தரிசனமடைகிறது. கருணாகரன் முக்கியமான கவிஞர், சிறுகதையாசிரியர், கட்டுரையாளர், பத்திரிகையாளர் எனப் பன்முகம் கொண்டவர். இந்தப் பன்முகங் களுக்கும் அப்பால் அவர் கிராம வாழ்வை ஆழமாக நேசித்து, அதற்குள் ஊடாடி வருபவர். நகர வாழ்வு, அறிவும், அதிகாரமும் செல்வாக்கும் பெற்ற மனிதர்களின் நட்பு என்ற எல்லைகளுக்கு அப்பால் கிராமிய மனிதர்களுடன், அவர்களில் வயது வேறுபாடோ, தொழில் வேறுபாடோ, வேறெந்த வேறுபாடோ கருதாமல் மெய்யன்போடு உறவாடுபவர். கருணாகரன் என்ற மனிதன் கிராமத்தின் வேரறா மனிதன். போலித்தனமல்லாத கிராமிய மனிதக் கோட்டுரு. அவருள் இருந்து கிராமத்தின் ஜீவனைப் பிரிக்க முடியாது. அதுவே அவரது படைப்புக்க ளான போதும் கிராமங்களை அதன் உயிர்ப்போடு தரிசித்த ஒரு மனிதன் அந்தக் கிராமங்களை வரலாறு, பண்பாடு, அரசியல், (போர்) பொருளாதார அம்சங்கள் பாதித்த வலிகளை, உருமாற்றங்களை கழிவிரக்கத்தோடு நோக்குவதாக இந்நூல் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்கள் என்பது முன்னைய உயிர்ப்போடு இல்லை. இயற்கையின் சீதளத்தோடு ஒன்றித்த வாழ்வு மெல்ல மெல்லச் சிதைந்து விட்டது. வெண்மையாய் மலர்ந்து மணம் பரப்பும் முல்லைப் பூவைப் போல, கஞ்சல் கருக்கல்களோடு பிரவகித்தோடும் காட்டாற்றைப் போல இயற்கையின் மெய்ம்மை குன்றாது, தம்மியல்பு அழியாது வாழ்ந்த கள்ளங்கபடமற்ற மனித வாழ்வு இன்றில்லை. கூட்டுக் குடும்பங்களாய் ஒன்றாய்க் கூடி விருந்துண்டு, சேர்ந்துழைத்து, ஓய்வின் போது கூத்தும் பாட்டுமாய் குதூகலித்து வாழ்ந்த வாழ்க்கை நம்மிடமில்லை. வேலிகளும் மதில்களும் எமது காணிகளை மட்டுமல்ல மனங்களையும் இறுகக் குறுக்கி எமக்குள்ளேயே பூட்டுக்களைப் போட்டு விட்டன. வஞ்சத்தையும் சூதையும் தினசரி தொலைக்காட்சிகள் மண்டைக்குள் ஓங்கி அறைகின்றன. முகமிழந்த, மனமழிந்த மனிதர்களாக நாம் மாற நமது வாழ்வு நமக்குக் கற்பிக்கிறது.

இரண்டு தலைமுறைக்கு நீடித்த அமைதியின்மை நமது வாழ்வை எங்கோ கொண்டு சென்று விட்டது. அது சாதகமானதும் பாதக மானதுந்தான். ஆனால் நமது இயற்கையை, அதனோடியைந்த அழகிய வாழ்வை, நம்முள் ஊறிய நல்ல அம்சங்களை எல்லாம் யுத்தம் நம்மிடமிருந்து பிடுங்கி விட்டது. அந்நிய தேசங்களிலிருந்து வரும் பணம் எங்கள் சிலரது குடிசைகளை மாடமாளிகைகளாக்கியிருக்கிறது. மாடமாளிகைக் கனவுகளில் மூழ்கி ஏனைய குடிசைவாசிகள் பெரும் பிரயத்தனப்படுகின்றனர். லீசிங், லோன், அடகு, சீட்டு என்று எங்களவர் பலரது வாழ்வு அலைக்கழிகிறது. முடிவு மரணமாகவோ, சிறையாகவோ மாறுகிறது. விளம்பரங்களுள் அள்ளுண்டு அந்தரிக்கும் வாழ்வையே காலம் நமக்குப் பரிசளித்திருக்கிறது. அது அரசியலிலுந்தான்.

கருணாகரனுடைய இந்தக் கட்டுரைகளைப் படித்து முடித்ததும் கடந்த காலத்தைய கழிவிரக்கம் மனதைப் பிசைகிறது. அது மட்டுமன்றி வரலாற்றுப் பரிணாமத்தில் நடந்து முடிந்தவைகள் மனதை நெருடு கின்றன. கிளிநொச்சி பற்றிய முதற் கட்டுரை ஒரு கவிதை போல நகர்கிறது. ஒரு காடாக இருந்த அந்த நகரம் ஒரு குழந்தையைப் போல எழுந்து எழுந்து விழுந்து விழுந்து மீண்டும் எழுந்த கதை கவிதையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தலைமுறைக் கேள்விகளைக் கடந்து அது எழுந்த கதை சுவாரஸ்யங்குன்றாமல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது போலவே இரவில் உயிர் பெற்றுப் பகலில் உறங்கிய "கிளாலிக் கதை" உலகத்தவர் நம்ப மறுக்கும் உண்மைக் கதை. அது உயிரோட்டத்தோடு தத்ரூபமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. விசுவமடு, கண்டாவளை, அக்கராயன், செம்மணி, நந்திக்கடல் என்று நீளும் இந்த இடங்களின் கதைகள் வெறுங்கதைகள் அல்ல. இவை மனிதர்களின் பாடுகளைச் சொல்லும் கதைகள். முள்முடி குத்திச் சிலுவை சுமந்த வரலாற்றைப் பேசுகின்றன. தெளிந்த சிற்றோடைகள் திடீரெனக் காட்டாறாகி உன்மத்தம் கொண்டழித்த காலங்களின் துயரை எடுத்துரைக்கின்றன.

இவை மற்றவர்களின் கூற்றுக்களை வைத்து எழுதப்பட்டவைகள் அல்ல. இந்தக் கிராமங்களில் வாழ்ந்து, புழுதி வாசத்தைச் சுகித்து, பாடுகளை அனுபவித்து, அந்த வாழ்வை விமர்சனபூர்வமாக அணுகி, புறநிலை உண்மைகளையும் உட்புகுத்தி கருணாகரன் இந்தக் கட்டுரைகளை எழுதியுள்ளார். ஒரு கவிஞனிடத்தில் இருந்து வெளிப்படும் சொற்களில் இருக்கும் கவித்துவம் இந்தக் கட்டுரைகள் முழுமையும் வெளித் தெரிகின்றன. நாமே அறியாத நம்மைப் பற்றிய வாழ்வை நமது கிராமங்களிலிருந்து தரிசனங் கொள்ள வைக்கின்றன. இந்தக் கட்டுரைகள். நீள நினைந்திடும் வாழ்வை இவற்றினூடாக கருணாகரன் நம்முள் உட்பொதிக்கிறார். இது காலத்தினால் செய்த உதவி. அதற்காக அவருக்கு தலைமுறைகளின் நன்றி என்றுமிருக்கும்.

இயல்வாணன் வலயக் கல்வி அலுவலகம்,
(சு.ஸ்ரீகுமரன்) கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லியே தீர வேணும்

இது சில ஊர்களையும் அதில் நம் கடந்த காலம் எப்படி இருந்தது என்பதையும் பற்றிய என்னுடைய கட்டுரைகளின் தொகுதி. இந்தக் கட்டுரைகளை எழுதுவதற்குத் தூண்டியவர் கு. றஜீபன். கரைச்சிப் பிரதேச செயலகம் ஆண்டுதோறும் வெளியிடுகின்ற "கரை எழில்" என்ற மலருக்காக எழுதித்தருமாறு கேட்டபோது இந்த மாதிரியான கட்டுரைகளை எழுதலாம் என்று தோன்றியது. இதன்படி "கிளிநொச்சி எப்படியிருக்கிறது, அங்கே என்ன நடக்கிறது", "அக்கராயன்" என்ற இரண்டு கட்டுரைகளை எழுதினேன். தொடர்ந்து ஏனைய ஊர்களைப் பற்றியும் எழுதலாம் என்று எண்ணியதன் விளைவே ஏனையவை. இப்படி எழுதுவதற்கு ஊக்கப்படுத்தியவர்களில் இன்னொருவர் சிவரஞ்சித். நடேசனும் இதிலுள்ள சில கட்டுரைகளைத் தன்னுடைய தளத்தில் பிரசுரித்திருந்தார். இன்னொரு கட்டுரை வேட்டை. இதை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர் அருட்செல்வன் மாவட்டத்தின் வேட்டைக் கலையைப்பற்றி பதிவு செய்ய வேணும் என்று கேட்டதற்கிணங்க எழுதினேன். ஆனால், இது வேட்டையைப் பற்றிய இன்றைய நிலைப்பட்ட ஒரு பொதுவான பதிவே.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த போதும், யுத்தம் முடிந்த பிறகும் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு இடங்களில் வாழவேண்டியிருந்தது. அப்படி வாழும்போது ஊடாடிய பகுதிகளில் பெற்ற அனுபவங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதிருந்த நிலைமைகளையும் பதிந்து கொள்ளும் முயற்சி இது.இந்தப் பதிவுகள் எழுதப்பட்ட காலத்திற்கும் இப்பொழுது நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கிற காலத்திற்குமிடையில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. வெவ்வேறு அதிகாரத் தரப்புகள் செல்வாக்குச் செலுத்திய அல்லது அதிகாரம் செலுத்திய காலங்களின் நிகழ்ச்சிகளும் போக்குகளும் நிலைமைகளும் இங்கே பதிவு பெற்றுள்ளன. இந்த நிகழ்ச்சிகள் இன்றில்லை. நாளை இன்னொரு நிலைமையே இருக்கும். என்றாலும் இந்த மாற்றங்கள் முக்கியமானவை. ஆனால், நமது தமிழ்ச் சூழல் எத்தகைய மாற்றங்களையும் வரவேற்பதும் குறைவுளூ நம்புவதும் குறைவு. இதற்குக் காரணம் மாற்றங்களைக் குறித்த எண்ணப்பாடு நமது சமூகத்திடம் பெரும்போக்காக இல்லை. சிறு அளவில்தான் உள்ளது. எனினும் யதார்த்தத்தில் பல மாற்றங்கள் எல்லாவற்றையும் கடந்து நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. இந்த வகையில் யுத்தம் முடிவுக்கு வந்தது தொடக்கம் ஏராளம் மாற்றங்களை நாம் காணமுடியும். இந்த மாற்றங்கள்தான் நம் முக்கிய கவனத்திற்குரியன. ஏனெனில் நாம் எதிர்பாராத நம்ப முடியாத நிகழ்ச்சிகளின் மத்தியிலேயே எங்களின் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் உணர்வதற்காக. இன்னும் அது அப்படித்தான் நிகழும். இந்த நிலையில் நமது எதிர்பார்ப்புகளும் மதிப்பீடுகளும் எப்படியெல்லாம் பொருளற்றுச் சரிவடைந்தன என்பதை நாம் புரிந்து கொள்வதுடன் எதிர்பாராத புதிய நிலைமைகள் எப்படித் தோற்றம் பெற்றுள்ளன என்தை அறிந்து கொள்வதற்குமான படிப்பினையை இவை தருகின்றன. ஆகவே, இவை கடந்து போன காலத்தின் நினைவு மீட்டல்கள் அல்ல. இந்தப் பதிவுகளில் விமர்சனத்துக்கும் கவனப்படுத்தலுக்கும் உள்ளாக்கப்படும் தரப்புகளுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் அப்பால் இவை கவனிக்க வேண்டிய உண்மையைச் சொல்ல வேண்டும் என்ற நோக்கமுண்டு.

இப்படி எழுதியவற்றை அவ்வப்போது இணைய இதழ்களும் பிற ஏடுகளும் பிரசுரித்திருந்தன. இதழ்களின் தன்மை கருதி சுருக்கமான அளவில் இந்தப் பதிவுகள் அமைந்தன. உண்மையில் இது போதாது. நமது கடந்த காலம் வேறு எந்தக் காலத்தையும் விட நம் வாழ்வையும் அதன் அடையாளங்களையும் சூழலையும் மிக வேகமாக உருமாற்றம் செய்தது. ஒன்று, உலக அளவில் அறிமுகமாகிய வணிகமயமாக்கமும் மின்னியல் தொழில்நுட்பமும் விஞ்ஞான வளர்ச்சியும் இணைந்தும் தனித்தனியாகவும் ஏற்படுத்திய விளைவுகள். இதனால், மாற்றமடைந்த -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சிகள். மற்றது யுத்தத்தினால் ஏற்பட்ட சிதைவும் அழிவும் உண்டாக்கிய மாற்றங்கள். இவற்றினால் சடுதியாகவே நம் வாழ்க்கையும் சூழலும் மாற்றமடைந்தன. ஏன் நம் மனது கூட அப்படிக் கணத்தில் மாறிவிடுகிறது.

ஆகவே இயல்பான வளர்ச்சியின்றி, தலைமுறைகளின் தொடர்ச்சியில் உருவாகும் படிமுறையான வழியின்றி, சடுதியாக மாற்றமடைந்த வாழ்க்கையையும் சூழலையும் அதன் உயிர்ப்போடு பதிவு செய்வதற்கு அருமையான சாதனம் சினிமாதான். ஆனால், எங்களுடைய சூழலில் அதற்கான வாய்ப்புகள் இல்லை. அதைப் பற்றிய சிந்தனையும் கிடையாது. புலம்பெயர்ந்திருப்போர் பெருமளவு பணத்தைக் கொட்டி இந்திய "மசாலா"ச் சினிமாவைத் தயாரிக்கின்றனர். இவர்களின் கண்ணும் கருத்தும் இங்கே சொந்த நிலம் மீது படிவதில்லை. அடுத்ததாக, குறும்படங்களும் ஆவணப்படங்களும் இதில் கணிசமான பங்களிப்பைச் செய்யலாம். ஆனால், அதற்கான அக்கறைகளும் குறைவு. அக்கறைப்படுவோருக்கு உதவிகள் கிடைப்பதில்லை.

இதற்கப்பால், இத்தகைய அடையாளங்களையும் நினைவுகளையும் பதிவதற்கும் மீட்பதற்கும் வாய்பானது இலக்கியமே. அதிலும் புனைவிலக்கியமே சிறந்தது. நாவல் இதில் உச்சம். இதைத் தவிர்த்தால் முறையான ஆவணப்படுத்தல்கள் நல்லது. இதற்குப் பொருத்தமான ஒளிப்படங்களையும் சேர்த்துக் கொண்டால் மிகச் சிறப்பு. களஆய்வு, வரலாற்றாய்வு, பண்பாட்டாய்வு என்ற வகையில் ஏதாவது செய்தும் இதைச் சாத்தியமாக்கலாம். இவை இன்று கண்டிப்பாகச் செய்யப்பட வேண்டியவை. இந்தத் தலைமுறைக்கே இந்த வாய்ப்பு உண்டு. இந்தத் தலைமுறையே சொந்த ஊர்களைப் பற்றி ஓரளவுக்கேனும் முறையாக அறிந்தது. இளைய தலைமுறையினருக்கு சொந்த ஊர் நினைவுகள் என்று சரியாக எதுவும் இல்லை. அவர்களுடைய சிறு வயது இடம்பெயர்வுகளால் - தற்காலிகங்களால் நிரம்பியது. ஆகவே அவர் களால் எதையும் முறையாக அந்தச் சூழலோடு இணைத்து நினைவு கொள்ளவோ, அவற்றின் அடிப்படையான இயல்புகளை விளங்கிக் கொள்ளவோ முடியாது. இது அவர்களுக்கு ஏற்பட்ட ஒரு அநீதி. இழப்பு. கொடுமை. துயரம். ஆகவே, தாங்களுடைய நினைவின் வழியாக கடந்த காலத்தைப் பதிவு செய்யக் கூடியவர்கள் அதைச் செய்ய வேண்டும். இதில் புலம்பெயர்ந்திருப்போரும் அடங்குவர். நான்கூட இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையாகச் செய்யவில்லை. இந்த வருத்தமும் குற்றவுணர்ச்சியும் எனக்குண்டு. என்றபோதும் இந்த அளவிலாவது முதற்கட்டத்தில் சில பதிவுகள் எழுதப்பட்டுள்ளன என்பது சிறு ஆறுதல். இதையும் இதைப் போன்ற காரியங்களையும் பண்பாடு, அடையாளப்பேணுகை மற்றும் தனித்துவங்களைப் பற்றிப் பேசுவோரும் இந்தத் துறைகளில் செயற்படுவோரும் ஆதரிக்கவேண்டும்.

ஆனால், பெரும்பாலானவர்கள் இத்தகைய முயற்சிகளுக்கு ஆதர வளிப்பதில்லை. இது ஒரு நிரந்தரத் துக்கமே. எனினும் இந்தத் துக்கத்தை மேவிச் செயற்படும் ஆட்கள் அவ்வப்போது அங்குமிங்குமாக உருவாகி விடுவதும் உண்டு. கு.றஜீபன் அப்படியான ஒருவர். கலாசார உத்தி யோகத்தராகக் கடமையாற்றக் கிடைத்த வாய்ப்பை, சரியாகப் புரிந்து கொண்டு செயற்படுகிறார். எழுத்து, பதிப்பு முயற்சி, ஒளிப்படக் காட்சி (புகைப்படக்காட்சி) நாடகம் மற்றும் பிற கலைத்துறைக் காண்பித்தல்கள், இசைத்துறைப் பயிற்சிகள் என பல வழிகளிலும் தன்னாலான சாத்தியங்களைச் செயற்படுத்துகிறார். இதற்கு இசைவாக நல்ல புரிந்துணர்வோடும் பரிவோடும் ஒத்துழைப்புகளையும் ஆதர வையும் அளித்து வருகிறார் கோ. நாகேஸ்வரன். ஊடகத்துறை மற்றும் எழுத்துத்துறை என்பவற்றில் அனுபவமும் ஈடுபாடும் உடையவர் என்பதால், ஒரு பிரதேச செயலராக இருக்கும்போது கிடைக்கக் கூடிய அனுகூலங்களை எல்லாம் இத்தகைய முயற்சிகளுக்கு வழங்கி வருகிறார். இதன் மூலம் பல நல்ல காரியங்கள் நடந்து வருகின்றன. இத்தகைய பண்புடைய இருவருக்கும் என் அன்பும் நன்றிகளும்.

இந்த நூல் குறித்த அபிப்பிராயங்கள் பல வகையானதாக இருக்கும். கடுமையான விமர்சனங்களும் இதற்கு ஏற்படலாம் என்று எதிர்பார்க்கி றேன். சொந்த ஊரின் மீதான பிடிப்பு தாய்மீதான பற்றுக்கு நிகரானது. ஆகவே ஒவ்வொரு ஊர்வாசியும் இந்தப் பதிவுகளைக் குறித்து சாதகபாதகமான கருத்துகளை முன்வைக்கும் நிலை நிச்சயம் உண்டு. என்னளவில் நான் அறிந்த, கண்டுணர்ந்த விடயங்களை எழுதியி ருக்கிறேன். ஒவ்வொரு ஊரைப் பற்றியும் அந்த ஊர்களின் அடையாளங் களைப் பற்றியும் ஏராளமாகச் சொல்வதற்குண்டு. அதை வேறு வழிகளில் – வகையில் சொல்லலாம் என்று எண்ணியுள்ளேன்.

வழமையாக என்னுடைய புத்தகங்களுக்கும் எழுத்துகளுக்கும் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவையும் விமர்சனங்களையும் இதற்கும் எதிர்பார்க்கிறேன்.

இந்த நூலினை என்னுடைய அம்மாவின் தாயாரான ஆச்சி சின்னையா கதிராசிப்பிள்ளைக்கும் (என்னுடைய பாட்டிக்கும்) சாதாரண சனங்களின் கதைகளை எழுதும் என் பிரியத்துக்குரிய தாமரைச்செல்விக்கும் சமர்ப்பணம் செய்திருக்கிறேன். ஊரைப் பற்றியும் மனிதர்களைப் பற்றியும் அழியாத சித்திரங்களை என்மனதில் உருவாக்கியவர் ஆச்சி. மிகப் பெரிய ஆளுமை அவர். சுற்று வட்டாரத்திலேயே அவரை அறியாத வர்கள் அன்றில்லை. அவருடைய சொல்லுக்குக் கட்டுப்படாதவர்களும் இல்லை. இவ்வளவுக்கும் இளவயதிலேயே கணவரை இழந்திருந்த போதும் அந்த நாட்களில் (1940 களிலிருந்து 1970 களின் பிற்கூறுவரை) தனியாக நின்று ஊரின் நன்மை, தீமைகளிலும் பிணக்குகள் - முரண் பாடுகள் போன்றவற்றைத் தீர்த்து வைப்பதிலும் ஆளுமையாகச் செயற்பட்டவர். அவர் ஊட்டிய விதைகள் ஆயிரமல்லக் கோடி, அதற்குமப்பால். இந்தச் சந்தர்ப்பத்தில் ஆச்சியின் நினைவுகள் மேலெழு கின்றன. அடுத்தவர் தாமரைச்செல்வி. சாதாரண சனங்களைப் பற்றிய எளிய எழுத்துகளின் ஊடாக அறிமுகமான தாமரைச்செல்வி, அன்பினாலும் உதவும் மனப்பாங்கினாலும் மற்றவர்களைப் புரிந்து கொண்டு நடக்கும் உயரிய பண்பின் இயல்பினாலும் மதிப்பானவர். ஆச்சியைப் போன்ற இன்னொருவர். இருவருக்கும் இச்சிறு காணிக்கை.

என் இணை வசந்தியின் ஒத்துழைப்பும் ஊக்கமுமே இது.

அன்புடன்,
கருணாகரன்.

754, கனகராசா வீதி,
திருநகர் வடக்கு, கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படி ஒரு காலம்


1. கிளிநொச்சி எப்படியிருக்கு? அங்கே என்ன நடக்கிறது? 17-37

2. அழிப்பின் கொடுமை 38-48

3. கிளாலி 49-59

4. வன்னியின் தாய்வீடுகள் 60-66

5. “வெளிக்கிடடி விசுவமடுவுக்கு” 67-74

6. கண்டாவளை 75-82

7. அக்கராயன் 83-98

8. செம்மணி 99-107

9. நந்திக்கடல் 108-117

10. இயக்கச்சி 118-133

11. பூநகரி 134-145

12. வேட்டை 146-156




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருணாகரனின் பிற நூல்கள்**

**கவிதைகள்**

1. ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல் (1999) மகிழ்
2. ஒரு பயணியின் நிகழ்காலக்குறிப்புகள் (2003) மகிழ்
3. பலியாடு (2009) வடலி
4. எதுவுமல்ல எதுவும் (2010) மகிழ்
5. ஒரு பயணியின் போர்க்காலக்குறிப்புகள் (2012) கருப்புப்பிரதிகள், உயிர்மெய்
6. நெருப்பின் உதிரம் (2014) மகிழ்

**சிறுகதைகள்**

வேட்டைத்தோப்பு (2014) கயல்கவின்

**நேர்காணல்**

புகைப்படக்காரன் பொய்சொல்ல வேண்டியதில்லை (அச்சில்)

**கட்டுரைகள்**

ஆநிரை சிங்கம் புலி (அச்சில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி எப்படியிருக்கு? அங்கே என்ன நடக்கிறது?

## திரும்பிப் பார்க்க முடியாத நகரத்தின் காலம்

நேரில் காணும்போதும் தொலைபேசியில் பேசும்போதும் அநேகமான வெளியூர் நண்பர்கள் முதலில் கேட்பது கிளிநொச்சி எப்படி இருக்கு? அங்கே என்ன நடக்குது? என்ற கேள்விகளையே. இந்த மாதிரியான கேள்விகளை அவர்கள் இன்று நேற்று மட்டும் கேட்கவில்லை. கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த நூற்றாண்டின் அறுபதுகளில் கிளிநொச்சி ஒரு நகரமாக வளரத்தொடங்கியபோது இந்தக் கேள்விகளைக் கேட்டார் கள். அப்பொழுது காடாக இருந்த கிளிநொச்சி மெல்ல மெல்ல சிறிய ஊர்களாகவும் சிறு பட்டினமாகவும் வளரத் தொடங்கியிருந்தது. பாம்புகளோடும் பன்றிகளோடும் போராடிக் கொண்டிருந்த குடியேறிகள் மெல்ல மெல்ல ஊர்களிலிருந்து தங்களுடைய பட்டணத்தை, தங்களுக்கான பட்டினத்தைக் கட்டியெழுப்பிக் கொண்டிருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் பெருகிக் கொண்டிருந்த சனத்தொகைக்கு ஏற்றமாதிரி நிலமும் தொழிலும் அங்கே போதாமல் இருந்ததால் அங்கிருந்தவர்களை கிளிநொச்சியில் குடியேற்றி னார்கள். கிளிநொச்சி என்பது, இரணைமடுக்குளத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமாக வைத்த ஒரு குடியேற்றமாக ஆரம்பிக்கப்பட்டு, பிறகு அக்கராயன்குளம், கல்மடுக்குளம், வன்னேரிக்குளம், முறிப்புக்குளம், முழங்காவில் குளம், கரியாலை நாகபடுவான் குளம் என்று குளங்களோடான குடியிருப்புகளாக உருவாக்கப்பட்ட ஒரு மையம். அப்படி யாழ்ப்பாணத் திலிருந்து கிளிநொச்சிப் பகுதிகளுக்குக் குடியேறப் போனவர்களின் நிலையைப் பற்றி அறிவதற்காக முதல் தலை முறைக் கேள்விகள் எழுந்தன

கிளிநொச்சி எப்படியிருக்கு? அங்கே என்ன நடக்கிறது?

பிறகு, வன்செயல்களின் காரணமாக தென்பகுதியிலிருந்து கிளிநொச்சிக்கு அகதிகள் வந்தனர். குறிப்பாக மலையகப் பகுதிகளிலிருந்து வந்தவர்கள் அத்தனைபேரும் விவசாயக் கூலிகளானார்கள். அவர்களுக்கு விவசாய நிலங்கள் கிடைக்கவில்லை. அதை யாரும் வழங்கவும் இல்லை. அவர்கள் கிளிநொச்சியின் மேற்குப் பகுதிக் காடுகளில் குடியேறினர். அது முறைப்படுத்தப்பட்ட குடியேற்றம் அல்ல. அதனால், அவர்கள் கூலிகளாக இருப்பதைத் தவிர வேறு வழியிருக்க வில்லை. கிளிநொச்சியின் விவசாயச் செய்கைக்குத் தேவையான கூலிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த வன்முறை அகதிகள் கிளிநொச்சிக்கு வந்தது உதவியாக அமைந்தது பெரும் விவசாயிகளுக்கு.

அதுவரையிலும் யாழ்ப்பாணத்திலிருந்தே கூலிகளை அழைத்து வரவேண்டியிருந்தது. அறுவடைக்கு கிழக்கி லிருந்து முஸ்லிம்கள் வந்தார்கள். அப்படி வெளியே இருந்து வருவோருக்குத் தங்குமிடம், சாப்பாடு என்ற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தது. மலையகக் கூலிகளுக்கு இதெல்லாம் வேண்டியிருக்கவில்லை. கூலியும் குறைவாகவே கொடுக்கக் கூடியதாக இருந்தது.

ஆனால், இவர்கள் மலையகத்தில் இருந்தபோதும் கூலிகள். இங்கே வந்தும் கூலிகள் என்ற நிலைதான் பரிதாபகரமாக இருந்தது. போதாக்குறைக்கு யானைக்கும் நுளம்புக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்புக்கும் தங்களைக் கொடுத்தே அங்கே வாழ்ந்தார்கள்.

அப்படி அகதிகளாக வந்த சனங்கள் என்ன செய்கிறார்கள்? எங்கே இருக்கிறார்கள்? என்று அறிவதற்காக கிளிநொச்சி எப்படியிருக்கு? அங்கே என்ன நடக்கிறது? என்ற இரண்டாம் தலைமுறைக் கேள்விகள் எழுந்தன. என்றபோதும் அந்தக் கேள்விகளுக்குப் பதில்களைக் காண யாரும் விரும்பவில்லை.

ஆனால், எல்லாச் சனங்களையும் தன்னுள் வைத்துக் கொண்டு கிளிநொச்சி மெல்ல மெல்ல ஒரு பட்டினமாகியது. அப்படியே அது வடக்கின் முக்கிய தொடர்பாடல் களமாக, ஒரு வணிக மையமாக வளர்ந்து கொண்டிருந்தது. இப்பொழுது தெற்கிலே இருக்கும் "தம்புள்ள மாக்கெற்" என்ற மிகப் பெரிய விவசாயச் சந்தையைப் போல அப்பொழுது கிளிநொச்சி இருந்தது. பகல் போதாமல் இரவும் வேணும் என்று அது தவித்துக் கொண்டிருந்தது.

வடக்கின் உற்பத்திப் பொருட்களையெல்லாம் தெற்கிலுள்ளவர்கள் கிளிநொச்சிக்கு வந்தே வாங்கினார்கள். தெற்கின் பொருட்களை அவர்கள் கிளிநொச்சியில் வைத்தே வடக்கிற்கு விற்றார்கள். யாழ்ப்பாணக் குடாநாடும் வன்னியும் கிளிநொச்சியில் கூடியது. இப்படியொரு சந்தை கூடினால் அது சும்மா இருக்குமா? கொண்டாட்டமும் கலகலப்பும் களைகட்டியது. கலசம் பாலாவும் மிளகாய் நாதனும் கிளிநொச்சியைக் களை கட்டவைத்தார்கள். அந்த நாள்களில் (1970 களில்) கிளிநொச்சிக்கு புகழ்பெற்ற சினிமாக்காரர்கள் தமிழ்நாட்டிலிருந்து வந்தனர். கொழும்பிலிருந்து நாடகக்காரரர் வந்தனர். அன்று நட்சத்திர அந்தஸ்தில் இலங்கை வானொலியின் அறிவிப்பாளர்களாக இருந்த கே.எஸ். ராஜாவும் யோக்கின் பெர்ணாண்டோவும் வந்தார்கள். ரி.எம். சவுந்தரராஜன், எல்.ஆர். ஈஸ்வரி, கே.ஜே.ஜேசுதாஸ், மலேசியா வாசுதேவன் எல்லோரும் றொட்ரிக்கோ மைதானத்தில் பாட்டுக் கச்சேரி வைத்தனர். ட்ரம்ஸ் மணி (சிவமணி) சனங்களைப் பித்துப் பிடித்து ஆட வைத்தார். போதாக் குறைக்கு வீரசிங்கம், திருச்செல்வம், சத்தியமூர்த்தி, தியாகு என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாரும் சேர்ந்து உள்ளூர் நாடகங்களைப் போட்டார்கள். இப்பொழுது சர்வதேச விளையாட்டு மைதானமாக மாறிக் கொண்டிருக்கும் மைதானமே அன்று றொட்ரிக்கோ மைதானமாக இருந்தது. காலம் மாறும்போது இப்படிப் பெயர்களும் வடிவங்களும் மாறிக்கொண்டிருக்கின்றன. இந்த றொட்ரிக்கோ மைதானத்தில்தான் மரைக்கார் ராமதாசும் அப்புக்குட்டி ராஜகோபாலும் உபாலி செல்வசேகரனும் "கோமாளிகளா"கிக் கலக்கினார்கள். கோமாளிகளைப் பார்த்துச்சிரித்துக்களைத்தது சனம்.

மைதானம் நிறையக் கூட்டம். நாலு திக்கிலும் இருந்து அள்ளு கொள்ளையாகத் திரண்டு வந்தது சனம். பகலெல்லாம் வயலிலும் தோட்டத்திலும் கடையிலும் தொழிற்சாலை களிலும் உழைத்துக் களைத்தவர்களுக்கு இந்த ஆட்டமும் பாட்டமும் பெரும் களிப்பாயின. வெளியூர் ஆட்களுக்கோ ஆச்சரியத்திலும் ஆச்சரியம். ஆக முப்பது ஆண்டுகால வாழ்வையும் வரலாற்றையும் கொண்ட ஒரு இடத்தில் எப்படி இந்தளவுக்குக் கொண்டாட்டமும் கலகலப்பும் என்று. வேறொன்றுமில்லை, பயிர் விளையும்போது ஊரும் விளையுமல்லவா? அதுதான் நடந்தது.

கிளிநொச்சியின் வரலாறு ஒன்றும் பழையதல்ல. மிகப் புதியது. 1900 த்தின் தொடக்கத்தில் சேர்.பொன். இராமநாதனின் காலத்திலிருந்தே அது தொடங்குகிறது. இன்னும் குறிப்பிட்டுச்சொன்னால், இராமநாதன் கட்டுவித்த இரணைமடுக்குளத்தை மையப்படுத்தியே இந்த வரலாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்றுதான் சொல்லமுடியும். இரணைமடுக்குளம் விரிய விரிய கிளிநொச்சியும் விரிந்து வளர்ந்தது. என்றாலும் 1950 க்குப் பிறகே அது எழுச்சியடைந்தது. 50 இலிருந்து 70 களுக்குள்ளான இருபது ஆண்டுகளுக்குள் அது புகழடைந்தது. இலங்கையின் மிக இளைய பட்டினங்களில் ஒன்றாக கிளிநொச்சியை வரலாறு குறிப்பிட்டது. இதுதான் பலருக்கும் ஆச்சரியம். இதனால், அவர்கள் தங்களுடைய மூன்றாம் தலைமுறைக் கேள்விகளைக் கேட்டார்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி எப்படியிருக்கு? அங்கே என்ன நடக்கிறது?

ஏனென்றால் கிளிநொச்சியை நோக்கி வெளியூர்களிலிருந் தெல்லாம் பலரும் வரத்தொடங்கியிருந்தார்கள். கிளி நொச்சியில் பிழைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் எங்கும் வலுத்தது.

விளையாட்டுப் போட்டிகள், பொங்கல் விழாக்கள், நாடக அரங்குகள், இசை நிகழ்ச்சிகள், காணிவெல், கவியரங்கு என்று ஏதாவது நகரத்தில் நடந்து கொண்டேயிருந்தது. போதாக்குறைக்கு நகரின் மையத்தில் இருந்தது கந்தசாமி கோவில். அதற்குப் பக்கத்தில் (முன்பு ஆஸ்பத்திரி இருந்த இடத்திற்கு அருகில்) புனித தெரேசா தேவாலயம். சற்றுத் தொலைவில் இரணைமடுக்குளத்தின் மேற்குப் பக்கத்தில் கனகாம்பிகை அம்மன் கோவில். இங்கெல்லாம் திருவிழாக்கள் நடந்தன. இப்படியே மாறி மாறிக் கொண்டாட்டங்களுக்குக் குறைவேயில்லை. சனங்களால் நிறையத் தொடங்கின தெருக்கள்.

குளங்கள் நிரம்பின. வாய்க்கால் நீளம் தண்ணீர் பாய்ந்தது. வெளியிலும் வீடுகளைச் சுற்றியும் பயிரும் பச்சையும். பொன்னாய் அள்ளிக் கொட்டியது புதிய மண். கடையும் தெருவும் பொலிந்தன. நகரம் கிசுகிசுவென்று வளர்ந்தது. கூலிகள் உழைத்துத் தள்ளினர். முதலாளிகள் செழித்தனர். முதலாளிகள் வளர்ந்தால் என்னதான் நடக்காது? அவர்களுக்கு ஏக்கர் கணக்காக நிலம் இருந்தது. நூற்றுக்கணக்காகக் கூலிகளும் இருந்தனர். கூலிகள் எல்லாவற்றுக்காகவும் உழைத்துத் தள்ளினார்கள். முதலாளிகள் கொண்டாடினர். அவர்கள் கொண்டாடுவதற்கு ஏராளம் விசயங்களும் இருந்தன.

இன்னொரு பக்கத்தில் "அருவி" என்றும் "களனி" என்றும் இதழ்களை நடத்தினார்கள். கவியரங்குகள் நிகழ்ந்தன. முதலாளிமாரை மேடைகளிலே தாக்கித் தொழிலாளிகளைத் தூக்கினார்கள் கவிஞர்கள். வாழ்க்கையிலே அவர்களை யாரும் தூக்க முடியாவிட்டாலும் கவிதையிலாவது இப்படித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்குகிறார்களே, என்று நினைத்தேன். "வடக்கின் நெற்களஞ்சியம் கிளிநொச்சி" என்று யாரோ புகழைச் சூடினார்கள். அப்படிச் சொன்னதற்கு ஏற்றமாதிரி கிளிநொச்சியின் வயல்களும் விளைந்து தள்ளின. நெல்லைக் குற்றி அரிசியாக்கும் ஆலைகள் எங்கும் முளைத்தன. எங்கும் எதிலும் நெல்வாசனை பூத்துப் பொலிந்தது.

நகரில் இருந்தன மூன்று தியேட்டர்கள். இரணைமடு பெரிய வாய்காலின் ஓரத்தில், கரடிப்போக்குச் சந்தியில் இருந்தது, ஈஸ்வரன் தியேட்டர். படித்தால் மட்டும்போதுமா தொடக்கம் நீயா வரை இதில் பல படங்களைப் பார்த்திருக்கிறேன். கரடிப்போக்கு மூன்றாம் வாய்க்கால் தெருவில் இருந்தது பராசக்தி தியேட்டர். இதில்தான் நான் எம்.ஜி.ஆரின் நம்நாடு, பெரிய இடத்துப்பெண் படங்களையெல்லாம் பார்த்தேன். கரடிப்போக்குச் சந்திக்கும் கந்தசாமி கோயிலடிக்கும் இடையில் மேற்குப் புறத்தில் இருந்தது, சண்முகாத் தியேட்டர். இங்கெல்லாம் யாருடைய படங்கள் வந்தாலும் எம்.ஜி.ஆர் படங்களுக்கே கூட்டம் அலைமோதியது. நான்கூட எம்.ஜி.ஆர் படங்களைத்தான் அதிகமாகப் பார்த்துக் களித்தேன். இரண்டு போக வேளாண்மையிலும் உழைத்த காசை சனங்கள் என்னதான் செய்வது? வயலில் இருந்து வெளிக்கிட்டு ட்ரக்ரரில் ஏறினால், தியேட்டருக்கு வருவார்கள். அல்லது சந்தைப் பக்கம் போவார்கள். தங்களுடைய இளைய பட்டினத்தில் அவர்கள் இப்படித்தான் ஆடியும் பாடியும் களித்தார்கள். நகரத்துக்கு அப்பால் சிறு வீடுகளிலும் குடிசைகளிலும் வாழ்ந்து தொலைத்தார்கள். போதாக்குறைக்குக் குடித்துத் தீர்த்தார்கள். கூலிகளுக்கு இதை விட வேறு எப்படித்தான் பெரிய கொண்டாட்டங்கள் வாய்க்கும்?

இப்படியெல்லாம் கொண்டாடிக் களித்துக் கொண்டிருந்த போதுதான் வந்தது யுத்தம்.

யுத்தத்தை அங்கே யார் அழைத்து வந்தது? யார் அனுமதித்தது என்று தெரியவில்லை. ஆனால், அன்று படையினரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிந்தனர். இயக்கப்பெடியளும் திரிந்தார்கள். இரண்டு பகையாளிகள் ஒரு மையத்தில் சந்தித்தால் என்ன நடக்குமோ அதெல்லாம் நடந்தது. விரும்பத்தகாதன எல்லாம் நடந்தன. எதிர்பார்க்காதன எல்லாம் நடந்தன. தமிழ்ப்பகுதிகள் எங்கும் நடந்ததைப் போல, இலங்கை முழுவதிலும் நடந்ததைப்போல, வரலாற்றில் நடந்ததைப் போல, ஒருவரை ஒருவர் தோற்கடிக்க முயன்றனர். ஒருவரை ஒருவர் வெல்ல முயற்சித்தனர். இந்த அமளிக்குள் வெற்றிக்கும் தோல்விக்கும் இடையில் சிக்கிச் சிதறியது நகரம். நகரம் மட்டுமல்ல ஊர்களுந்தான். "யானைகள் மோதும்போது செடிகளுக்கே நாசம்" என்பார்கள். நகரம் சிக்கி, நகரத்துக்கு அமர்மித்திருந்த கிராமங்களும் சிக்கியபோது எல்லாமே நாசமாகியது. சனங்களும் நாசமாகினர். அவர்களுடைய வாழ்க்கையும் நாசமாகியது.

புதிய பொலிவோடு எழுந்து வந்த சின்னஞ்சிறிய பச்சை நகரம், மிக இளைய பட்டினம் அப்படியே பாழடைந்து போனது. பாழடைந்த நகரத்தில் புற்களும் காய்ந்து போயின. அல்லது கருகிக்கிடந்தன. பிறகு, காடு மண்டிப் புதர் வளர்ந்து, வயலெல்லாம் பிணங்கள் மலியத் தொடங்கியபோது சனங்கள் கிளிநொச்சியை விட்டு நீங்கி அயற்கிராமங்களில் பதுங்கினர். அவர்களுடைய சந்தையும் போனது. கடைகளும் தெருக்களும் போய்த்தொலைந்தன.

யுத்தம் எல்லாவற்றையும் தீண்டியது. ஒரு பென்னாம் பெரிய விசப்பாம்பு தீண்டியதைப் போல புதிசாக முளைத்த நகரம் செத்து மடிந்தது. இறைக்காமல் விட்ட கீரையைப் போல அது வாடிச் சோர்ந்தது.

அப்போதும் கேட்டார்கள் கிளிநொச்சி எப்படியிருக்கு? அங்கே என்ன நடக்குது? என்று. இது நான்காம் தலைமுறைக் கேள்விகள்.

பிறகு இதுதான் தொடர்கதை. இடையில் மழைக்குத் துளிர்க்கும் காட்டுச் செடிகளைப் போல யுத்த ஓய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களில் அல்லது அரசியல் மாற்றம் நிகழும்போது அல்லது அரசியல் விளைவுகளுக்கு ஏற்ற மாதிரி கிளிநொச்சி காய்வதும் துளிர்ப்பதுமாக இருந்தது.

அப்பொழுதும் இப்படித்தான் யாராவது கேட்பார்கள் கிளிநொச்சி எப்பிடி இருக்கு? அங்க என்ன நடக்குது? என்று.

தலைமுறைக் கேள்விகள் தொடர்ந்து கொண்டேயிருந்தன.

தொடர்ந்து ஒவ்வொரு போதிலும் ஒவ்வொரு தரப்பின் கைகள் மேலோங்கும். ஒருவரை ஒருவர் தோற்கடிக்க முயற்சிக்கும் போது யாரோ ஒருவரின் கைகள் மேலோங்கின. அழிவதும் துளிர்ப்பதுமாக இருந்த நகரம் பொலிவை இழந்து இறுதியில் அப்படியே தன்னுடைய முழு வலிமையையும் இழந்து விட்டது.

என்றாலும் அதனுடைய உயிர்ப்பு மறையவில்லை. அது வெளியே அழிந்ததாகத் தோற்றம் காட்டினாலும் அறுகம்புல்லைப்போல ஒரு துளி ஈரத்தைக் கண்டதும் சட்டெனத் துளிர்க்கத் தொடங்கி விடும். ஒரு கட்ட யுத்தத்தின் பின்பு அது சடுதியாக எழும். பிறகு அடுத்த கட்ட யுத்தத்தில் அவ்வளவும் பாழாகிவிடும். மாரியும் கோடையும்போலத்தான் கிளிநொச்சியின் வரலாறும் ஆயிற்று.

இதைப் பார்ப்போருக்கு வேடிக்கையாக இருக்கும். ஆச்சரிய மாகவும் இருக்கும். இந்த ஆச்சரியத்திலிருந்தே அவர்களிடம் கேள்விகள் பிறக்கின்றன.

கிளிநொச்சி எப்படி இருக்கு? அங்கே என்ன நடக்கிறது?

பாரம்பரியமெதையும் வலுவாகக் கொண்டிராத கிளி நொச்சியில் எப்படித்தான் வேர்கள் பாதிப்படையாமல் இருக்கின்றன என சிலர் கேட்டதுமுண்டு. நான் நினைக்கிறேன், கிளிநொச்சிக்கு வாய்த்த நீரும் நிலமும் உழைக்கக் கூடிய சனங்களின் திரட்சியும்தான் அதை உயிர்ப்போடு வைத்தி ருந்தன என்று. அதுதான் அதனுடைய பாராம்பரியமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைத்தவிர அதற்கு வேறு எந்த வழியுமில்லை.

## 02

இதைச் சற்று விரிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

யுத்த அரங்கு மூடப்படாத - யுத்தத்தின் கொதிநிலை மாறாத ஒரு மையமாக கிளிநொச்சி தொடர்ந்தும் இருந்தது. ஒரு பக்கம் ஆனையிறவு என்ற இராணுவக் கேந்திரம். இன்னொரு பக்கத்தில் கொக்காவில் என்ற இணைக் கேந்திரம். இடையில் நகரத்துக்கென உருவான பரந்தன், கிளிநொச்சி மத்தி என்ற துணைக்கேந்திரங்கள். இதெல்லாம் கிளிநொச்சியை யுத்த வலயமாக்கின.

முதலில் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தாக்குதலுக்குப் பிறகு அது பொலிஸ் இராணுவக் கூட்டுப்படை முகாமாகியது. பிறகு புலிகள் தாக்கினார்கள். கூடவே புளொட், தமிழ், ஈரோஸ், ரெலோ என்று ஒவ்வொரு இயக்கங்களும் தங்கள் தங்கள் பங்குக்கு முகாமைத் தாக்கிப் பலப்படுத்தின. முகாமையும் அங்கேயிருந்த படைகளையும் தாக்க அழிக்க முற்பட்டபோதெல்லாம் முகாம் பலமாகியது. படைகளும் அதிகமாகின. (இதுதான் இறுதியில் ஈழப்போராட்டத்தின் கதையுமாகியது).

எனவே, இதனால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், அழிவுகள் எல்லாவற்றுக்குள்ளும் கிளிநொச்சி சிக்கிச் சிதறிக் கொண்டேயிருந்தது. தொடர்ந்து காயங்களும் வடுக்களும் வலிகளும் நிரம்பிய நகரமாக அது மாறியது.

இதில் மிக மோசமான அழிவுகள் கிளிநொச்சியை விட்டுச் சனங்கள் முழுதாக வெளியேறிய காலத்தில் ஏற்பட்டன. 1996 சந்திரிகா ஆட்சிக்காலத்தில் சத்ஜெய 01, சத்ஜெய 02 என்ற மிகப்பெரிய இராணுவ நடவடிக்கைகள் நடந்தன. கிளிநொச்சி துடைத்து அழிக்கப்பட்டது. படைகள் கிளிநொச்சியைக் கைப்பற்றியபோது, அங்கே ஒரேயொரு நாய் மட்டுமே மிஞ்சியிருந்தது. அதைக் காட்டி மகிழ்ந்தது இலங்கைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சியான ரூபவாஹினி. கிளிநொச்சியைப் படையினர் கைப்பற்றியபோது அப்போதைய பாதுகாப்புப் பிரதியமைச்சர் அனுருத்த ரத்வத்த காலை இழுத்து இழுத்து வந்து கொடியை ஏற்றினார். ஒரேயொரு நாய் மட்டும் எஞ்சியிருந்த நகரத்தில் இலங்கையின் தேசியக் கொடி பறந்தது. அதைத்தொடர்ந்து நான்கு ஆண்டுகள் சனங்களில்லாத கிளிநொச்சியில் படையினர் மட்டுமேயிருந்தனர். பிறகு 2000 த்தில் படையிரின் மீது புலிகள் "ஓயாத அலைகள்" என்ற பெயரில் தாக்குதலைத் தொடுத்து தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்கள். தொடர்ந்து புலிகளின் கட்டுப் பாட்டிலும் நிர்வாகத்திலும் 2008 வரை எட்டு ஆண்டுகள் கிளிநொச்சியில் புலிக்கொடி பறந்தது. பிறகு 2009 தைமாதத்தில் மீண்டும் படைகள் வசமாகி எட்டு மாதங்கள் கிளிநொச்சி சனங்களில்லாத நகராக படையினரின் நகராக இருந்தது. 2009 செப்ரெம்பரில் மீண்டும் சனங்கள் மீளக் குடியமரத் தொடங்கினார்கள். சனங்கள் வரவர நகரமும் ஊரும் மெல்ல மெல்ல மாறத்தொடங்கின.

ஆனால், என்னதான் மாறினாலும் இன்றும் கூடக் கிளிநொச்சி யுத்த வடுக்களின், யுத்த வலிகளின், யுத்தக் காயங்களின் காட்சிக்கூடமாகவே உள்ளது. இந்தக் காயங்கள் சனங்களின் காயங்களே! இந்த வலி அவர்களுடைய வாழ்க்கையின் வலியே! எனவே கிளிநொச்சிக்கு வருவோரிற் பலரும் கிளிநொச்சியின் காயங்களையும் வடுக்களையும் காணவே வருகிறார்கள். சிலர் துக்கத்தோடு பார்க்கிறார்கள். சிலர் மகிழ்ச்சியோடு பார்க்கிறார்கள். பிரமாண்டமான காயங்கள் சிலருக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது போலும். இந்த மகிழ்ச்சி என்ன மனநிலையில் உருவாகிறது? வெற்றிக் களிப்பின் விளைவில் உருவாகிறது. நாடு இனரீதியாகப் பிளவுண்டு சிந்திக்கும்போது காயங்களும் வலிகளும் ஒருவருக்கு வேதனையாகவும் இன்னொருவருக்கு மகிழ்ச்சியாகவும் மாறிவிடுகிறன.

ஆகவே, இதைப் பற்றிய பிரக்ஞை எவருக்கும் இருக்கிறதோ இல்லையோ கிளிநொச்சியை வந்து பார்த்துச் செல்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்கைப் போலச் சம்பிரதாயமாக எல்லாமே படமெடுக் கப்படுகின்றன. அந்தப் படங்களை வைத்துக் கொண்டாடு கிறார்களா, குற்றவுணர்ச்சிக்கு ஆட்படுகிறார்களா என்று தெரியவில்லை. ஆனால் படங்கள் மட்டும் தாரளமாக எடுக்கப்படுகின்றன.

சிலருக்கு யுத்த அழிவும் காட்சிப் பொருள்தான். யுத்த வெற்றியும் காட்சிப் பொருள்தான். யுத்தத்தின் பின்னரான நிலைமைகளும், முன்னேற்றங்களும் முன்னேற்றமின்மைகளும் காட்சிப் பொருள்களேதான். சனங்களின் கண்ணீரும் துயரமும் காட்சிப் பண்டங்களே. வேடிக்கை, வியாபாரம் என்றெல்லாம் வந்து விட்டால் எதன் மதிப்பும் இறங்கி. பரிமாணங்கள் கெட்டு விடுகிறது. அவர்களுடைய நோக்கத்தைத் தவிர, வேறு பார்வைகளும் உணர்கைகளும் கிடையாது.

என்ன செய்வது, உலகம் அப்படி மாறிவிட்டது. கண்ணீரையும் இரத்தத்தையும் மலிவாகவே விற்பதற்குத் துணிந்த பிறகு எதைப் பற்றித்தான் என்ன கூச்சம் யாருக்கும் வேண்டியிருக்கு? கெட்டிக்காரன் எதையும் விற்றுச் சரக்காக்கி விடுகிறான். வியாபார உலகத்தில் நீதியும் நியாயமும் மனச்சாட்சியும் மதிப்பிழந்து போகின்றன. அல்லது மௌனத்திற் குடி கொள்கின்றன.

போகட்டும் இது. நாம் மீதியைச் சொல்லிச் செல்வோம்.

போரில் சிக்கியிருந்த போதும் கிளிநொச்சியில் பலவும் நடந்தன. தியேட்டர்களும் படங்களும் படுத்தாலும் வயல்களில் ஆட்கள் நின்றார்கள். றொட்ரிக்கோ மைதானத்தில் ஆட்களுக்குப்பதிலாக துப்பாக்கிகள் முளைத்திருந்தபோதும் தெருக்களில் சனங்கள் போய் வந்தார்கள். அப்படிப் போய் வரமுடியாத போது அவர்கள் சற்றுத் தள்ளியிருந்து கொண்டு அங்கே சிறிய சிறிய பட்டணத்தைக் கட்டினார்கள். மைதானத்தில் மாடுகள் படுத்துறங்கின. சந்தைக்கு வடக்கிலி ருந்தும் ஆட்கள் வருவதில்லை. தெற்கிலிருந்தும் ஆட்கள் வருவதில்லை. வெளியாட்கள் வருவதற்கான வாசல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றாகவே மூடப்பட்டன. அதனால் அங்கே உள்ளூர்ச் சனங்கள் மட்டுமே கூடினர். பட்டணம் இடம் பெயர்ந்த போதெல்லாம் சனங்கள் தங்களோடு கடைகளையும் சந்தையையும் கூடக் காவிச் சென்றார்கள்.

அப்போதும் கேட்டார்கள், கிளிநொச்சியில் என்ன நடக்கிறது? அது எப்படியிருக்கிறது? என்று. இது ஆறாம் தலைமுறைக் கேள்விகள்.

இதற்கிடையில் நான் இன்னொன்றையும் சொல்ல வேணும்.

கிளிநொச்சிக்கு என்று சில காலங்களைச் சொல்வார்கள். இரணைமடுக்குளம் கட்டிய காலம், கிளிநொச்சியின் குடியேற்ற காலம், அதனுடைய எழுச்சிக் காலம், கிளிநொச்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து, அதைத் தனி மாவட்டமாக்குவதற்காகப் பாடுபட்ட ஆனந்தசங்கரியின் காலம், கிளிநொச்சியை வளப்படுத்த முயற்சித்த குமாரசூரியர் காலம், பிறகு இலங்கை இராணுவத்தின் காலம், இந்திய இராணுவக் காலம், புலிகளின் காலம், இப்ப போர் முடிந்த பின்னர் மீள்குடியேற்றக் காலம், சந்திரகுமாரின் காலம் என இந்தக் காலப்பட்டியல் வளர்ந்து செல்லும்.

இந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுச்சியும் வீழ்ச்சியும் தன்னியல்பாகவும் அந்தந்தத் தரப்பின் செயற்பாடுகளுக்கு அமையவும் ஏற்பட்டன.

இதில் முக்கியமானவை 80 களுக்கு முந்திய காலமும் புலிகளின் காலமும் தற்போதைய யுத்தத்திற்குப் பின்னரான காலகட்டமுமே.

ஆனால், கிளிநொச்சியின் பொற்காலம் என்பது அறுபது களுக்கும் எண்பதுகளுக்கும் இடைப்பட்ட காலம்தான். பதற்றமும் மகிழ்ச்சியும் நிறைந்திருந்தது இந்தக் காலம். இந்தக் காலத்தில்தான் கிளிநொச்சி என்ற ஒரு மையத்தின் அடையாளம் துலங்கத் தொடங்கியது. கலையும் கல்வியும் பொருளாதார அடிப்படைகளும் இதையெல்லாம் இணைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையும் இந்தக் காலத்திலிருந்துதான் கிளிநொச்சிக்கென உருவாகின. "மண்ணின் மைந்தர்களும்" இந்தக் காலத்தில்தான் முளைத்தார்கள்.

கிளிநொச்சியின் மேற்குப் பகுதியில் கணேசபுரம் ஜெயந்தி நகரில் அப்பு என்ற கதிரவேலு "குருகுலம்" என்று ஒரு விடுதியை அமைத்தார். அன்று யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு குடியேற வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஏழைகளும் நலிந்தவர்களுமே. இவர்களுடைய பிள்ளைகள் ஒழுங்காகப் படிக்கச் செல்வதில்லை. தோட்டவேலை, வீட்டு வேலை, வயலுக்குப் போவது, மாடு மேய்க்கச் செல்வது என்று இடையில் பள்ளிப் படிப்பை விட்டு விடுவார்கள். இவர்களை யெல்லாம் படிப்பிக்க வேணும் என்று அப்பு விரும்பினார். அதற்காகவே அவர் குருகுலம் என்ற சிறார் விடுதியை ஆரம்பித்தார். அதுதான் காலப்போக்கில் இன்றைய இந்துக்கல்லூரியாக மாறியது.

இன்னொன்று இரணைமடுக்குளமும் அதிலிருந்து பாயும் தண்ணீரை வைத்துச் செய்யப்படும் விவசாயமும். ஏறக்குறைய 12 ஆயிரம் ஏக்கர் வரையில் சிறுபோகச் செய்கையும் மேட்டுப் பயிர்ச்செய்கையும் நடந்தது. இன்னொரு பக்கத்தில் கிளி நொச்சிக்கு அண்மையாக இருக்கும் பரந்தனில் அமைக்கப் பட்ட இரசாயனத் தொழிற்சாலை பலருக்கும் தொழிலை வழங்கியது. கல்வியும் பொருளாதாரமும் மேம்பட மேம்பட பலதும் உருவாகின.

இதெல்லாம் இணைந்தும் கலந்தும் விளைந்த கிளிநொச்சியின் இரண்டாவது சிறப்பான காலகட்டம் 2000 க்குப் பின்னரானது.

2002 இல் புலிகளுக்கும் ரணில் அரசுக்கும் ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை கிளிநொச்சியை உலக அரங்கில் ஒரு கவர்ச்சி மையமாக்கியது. விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விமானத்தில் வந்து இரணை மடுக்குளத்தில் இறங்கினார். அதைத் தொடர்ந்து புலிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் மற்றும் அடுத்த கட்டப்போராட்டம் பற்றியும் புலிகளின் தீர்மானங்களைப் பற்றியும் பிரபாகரன் பத்திரிகை யாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். போரிலே புலிகளின் கை ஓங்கியிருந்ததை பிரபாகரன் வெளியுலகத்திற்கு வெளிப்படுத்த விரும்பியதன் வெளிப்பாடே இந்தப் பத்திரிகையாளர் மாநாடு.

தொடர்ந்து பிரபாகரன் ஹக்கீம் உடன்படிக்கை, பிரபாகரன் நோர்வேத்தூதுவர் எரிக் சூல்கெய்ம், யப்பானியத்தூதுவர் யசூஸி அகாஷி மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்களின் சந்திப்புகள் என முக்கியமான நிகழ்ச்சிகள் கிளிநொச்சியில் நடந்தேறின. புலிகளுக்கு எதிர்த்திசையில் இயங்கிய பல தமிழ்க்கட்சிகள், இயக்கங்களின் தலைவர்கள் எல்லோரையும் கிளிநொச்சிக்கு அழைத்துப் பிரபாகரன் சந்தித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அதிகார பூர்வமாக பிரபாகரன் அங்கீகரித்ததும் கிளிநொச்சியில்தான். இப்படியெல்லாம் நடந்த நிகழ்ச்சிகளின் விளைவாக, அரசியல் அரங்காக, அமைதிப் பேச்சுகளின் அரங்காக, ஒரு போராட்ட அமைப்பின் தலைநகராக கிளிநொச்சி மாறியது. அப்படியே அது எதிர்பாராத அளவுக்கு எழுச்சியடைந்தது. உலகத்தின் நான்கு திசைகளும் நான்கென்ன எட்டுத்திசைகளும் கிளிநொச்சியில் கூடின. இலங்கையில் இரண்டு தீர்மான மையங்கள் உள்ளன என்று விமர்சகர்கள் அந்த நாள்களில் குறிப்பிட்டார்கள். அதில் ஒன்று என்று சொல்லும் அளவுக்கு புகழ்பெற்று விளங்கியது கிளிநொச்சி. ஆய்வாளர்களும் அரசியலாளர்களும் ஊடகவியலாளரும் கிளிநொச்சியில் தங்கள் கவனத்தைக் குவித்தார்கள். அப்படிக் குவிக்கவே வேண்டியிருந்தது. தொடர்ந்து வெள்ளையர்களும் வெளியாட்களும் உதவிப் பணிகளுக்கும் அரசியல் விவகாரங்களுக்குமாக வந்திறங்கி யிருந்தனர். வெளியேற்றப்பட்டிருந்த முஸ்லிம்களின் தரப்பிலிருந்து ஹக்கீமும் அவருடைய தோழர்களும் கூடத் தொடர்ந்து வந்தனர்.

அந்த நாள்களில் கொழும்புக்கும் கிளிநொச்சிக்குமாகப் பறந்தன வானூர்திகளும் வெளிநாட்டு ராஜதந்திரிகளின் வாகனங்களும். பல திசைகளில் இருந்தும் தலைவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜதந்திரிகளும் கிளிநொச்சிக்கு வந்து சென்றார்கள். புலம்பெயர்ந்து போயிருந்த தூரதேசத்துப் பறவைகள் எல்லாம் கிளிநொச்சிக்கு வந்தன. இரணைமடுக்குளம் தண்ணீரால் நிரம்பியதோ இல்லையோ கிளிநொச்சி சனங்களாலும் விருந்தாளிகளாலும் நிரம்பியது. கண்ணாடி மாளிகைகள் எங்கும் முளைத்தன. எல்லோருக்கும் ஆச்சரியத்திலும் ஆச்சரியம். இந்த ஆச்சரியம் எழுப்பியது மீண்டும் கேள்விகளை. ஆமாம், ஏழாந்தலைமுறைக் கேள்விகளை.

*கிளிநொச்சி எப்படியிருக்கு? அங்கே என்ன நடக்குது?*

கிளிநொச்சியைப் புலிகளின் தலைநகரம் என்றும் சமாதான முயற்சிகளுக்கான நகரம் என்றும் குறிப்பிட்டனர் விமர்சகர்கள். யார் யாரெல்லாமோ வந்தார்கள். தினமும் கை குலுக்கல்கள் நடந்தன. றொட்ரிக்கோ மைதானம் கிளிநொச்சி மத்திய மைதானம் என்று அழைக்கப்பட்டது. அந்த மைதானத்தில் விளையாட்டு வீர்களுக்குப் பதிலாக, ஹெலிகொப்ரர்களே வந்திறங்கின. முன்னர் மலேசியா வாசுதேவனையும் ரி.எம். சவுந்தரராஜனையும் எல்.ஆர்.ஈஸ்வரி யையும் கண்டு களித்த சனங்கள் பெயர்களை உச்சரிக்கக் கடினமான விருந்தாளிகளைப் பார்த்துக் கையசைத்தனர். இறுதியில் மரைக்கார் ராமதாஸின் கோமாளிகளையும் விட தாங்களே கோமாளிகள் என அவர்கள் உணர்ந்தபோது யுத்தம் அவர்களுடைய தலைக்கு மேலும் காலடியிலும் வந்திறங் கியிருந்தது. தங்கள் பிள்ளைகளையும் கணவர்களையும் காப்பாற்றவே முடியாது என்ற நிலையையும் அது அழைத்து வந்து அவர்களின் தலையில் சுமத்தியது.

*பிறகென்ன?*

மறுபடியும் "யானைகளின் மோதல்". செடிகளின் அழிவு. நகரத்தின் வேர்களைக் கிளப்பிக்கொண்டும் அல்லது பிடுங்கிக் கொண்டும் சனங்கள் பெயர்ந்தனர். பெயர்ந்தவர்கள் அயல் ஊர்களை நோக்கி, காடுகளை நோக்கிச் சென்றனர். காடுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்பது எப்படியிருக்கும்? அது காட்டுத்தன்மையை ஒத்ததாக, வேடர்களின் வாழ்க்கையை ஒத்ததாக இருக்கும். அப்படித்தான் நமது வாழ்க்கை இருந்தது.

எல்லா யுத்தத்திற்கும் முடிவாக அந்த யுத்தம் இருந்தது. எல்லா முயற்சிகளுக்கும் முடிவான யுத்தமாகவும் அது இருந்தது. எல்லாத் தவறுகளுக்கும் முடிவாகவும் எல்லாக் கனவு களுக்கான முடிவாகவும் அதிருந்தது. அது பெரும் யுத்தம். என்பதால், அது எல்லாவற்றையும் அள்ளிக் கொண்டு போனது. பெரும் சூறாவளியைப்போல, கொடும்புயலையும் மிஞ்சியதாக அது மாறி எல்லாவற்றையும் அடித்துச் சிதைத்தது. சிதைத்து நொறுக்கியது. நொறுக்கிக் காற்றிலே தூவியது.

நாங்கள் கூரைகளையும் கழற்றிக் கொண்டு வேறிடங்களை நோக்கிச் சென்றோம். இறுதியில் காடுகளை, கடலை நோக்கிச் சென்றோம். போகும்போது கூரையை மட்டுமா கழற்றினோம். வளர்த்த பிராணிகளை, சேர்த்த பொருட்களை, வாங்கிய பண்டங்களை, படித்த புத்தகங்களை என எல்லாவற்றையும் எடுத்துச் சென்றோம். எங்களுக்கு முன்னும் பின்னும் எங்களோடு சேர்ந்தும் சிந்தச் சிந்த ஒரு அரசைப் புலிகளும் காவிக் கொண்டு வந்தனர். அவர்கள் உருவாக்கிய அரசே அவர்களுக்கு அப்போது பாரமாகியது. ஆனாலும் என்ன செய்ய முடியும்?

எதையும் விட யாரும் தயாராக இல்லை. சிறுகச் சிறுக உருவாக்கிய அரசையும் அதன் வளங்களையும் இழப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை. நலன்களைச் சுவைத்துப் பழகினால் அதை லேசில் யாராலும் விட்டு விட முடியாது. எதையும் இழந்தும் இழப்பதற்குத் தயாராக இருந்தும் உருவாக்கிய, பெற்ற அனைத்துமே எதையும் இழக்க மாட் டோம் என்ன எண்ணத்தின் வழியாகச் சுமையாகின.

இந்த ஆசையினால் நாங்களே எங்களின் வீட்டுக் கூரையைக் கழற்றிச் சென்றோம். பெயர்த்த வீட்டை ஒரு துயர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட்டையைப்போலச் சுமந்து சென்றோம் என்றால், அதன் நிலையை எப்படிச் சொல்வது? சரியோ பிழையோ அதைத் தவிர எங்களுக்கு வேறு தெரிவுகளிருக்கவில்லை.

விதி வேறு முகத்தோடு வந்து பல்லை இளித்துக் கொண்டு முன்னே நின்றது.

கிளிநொச்சியின் முழு நகரமுமே பெயர்க்கப்பட்டு இப்படிக் கொண்டு செல்லப்பட்டது. கொண்டு செல்லப்பட்ட நகரம் ஒவ்வொரு இடத்திலும் வைக்கப்பட்டது. அப்படி வைத்து, வைத்துக் காவிச் செல்லப்பட்ட நகரம் இறுதியில் கரைந்து காணாமலே போய்விட்டது. அந்த நாள்களில் ஒரு விமானமும் கிளிநொச்சியில் தரையிறங்கவில்லை. தரையிறங்காத விமானங்கள் தலைகளின் மேலே சுற்றின. குண்டுகளையே இறக்கின. அந்தப் பொழுதுகளில் உலகத்தின் எந்தத் தலைவரும் எந்தத் தூதுவரும் கிளிநொச்சிக்கு வரவில்லை. துளிர்த்து வந்த சமாதான நகரம் அப்படியே போரின் குருதியில் குளித்தது. அது மூட்டிய தீயில் எரிந்தது. தாங்க முடியாத வெம்மையில் வெடித்துச் சிதறியது.

அப்போதும் கேட்டார்கள் கிளிநொச்சி எப்படி இருக்கு? அங்கே என்ன நடக்கிறது? எட்டாந்தலைமுறைக்கேள்விகள் இவை.

"அங்கே ஒரு நாய் மட்டும் நின்றது" என்று யாரோ ஒரு பத்திரிகையாளன் ஒரு தடவை எழுதியிருந்தான் என்று சொன்னேன் அல்லவா? ஆட்களற்றிருந்த 1996 இன் கிளிநொச்சியைப் பற்றிய சித்திரம் அது. அதையே நானும் திருப்பிச்சொன்னேன். ஒரேயொரு நாய் மட்டுமே நின்ற நகரத்திற்கு அகதிகளாகச் சென்ற சனங்கள் மீள்குடியேறிகளாகி வந்தனர். வந்தவர்கள் கூரையில்லாத தங்களுடைய நகரத்தைக் கண்டனர். தெருக்களில்லாத ஊர்கள். ஆட்களில்லாத வளவுகள்.

பிறகு, பாழடைந்த நகரத்தை மீண்டும் அவர்கள் கட்டியெழுப்பத் தொடங்கினர். வாழ்வென்பதை எங்கிருந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிலிருந்து,எப்படித் தொடங்குவது என்று தெரியாமலி ருந்தது எல்லோருக்கும்.

அப்போதும் கேள்விகள் கேட்கப்பட்டன. கிளிநொச்சி எப்படியிருக்கு? அங்கே என்ன நடக்கிறது? ஒன்பதாம் தலைமுறைக் கேள்விகள் இவை.

நான் சொன்னேன்.

"ஒரு இடிந்த சுவருக்கு நான்காவது தடவையாகவும் கூரைகளைப் போடும் மனிதர்கள் இருக்கிறார்கள் இந்த நகரத்தில்" என்று. "கால்கள் இல்லாவர்களின் நகரமாக, பிள்ளைகளைத் தொலைத்தோரின் நகரமாக, பிள்ளைகளைத் தேடுவோரின் நகரமாக, என்றைக்கோ ஒரு நாள் உங்கள் அப்பா வருவார் அது வரை காத்திருங்கள் என்று தம் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொண்டிருக்கும் பெண்களின் நகரமாக... கால்களே இல்லாமல் ஊர்ந்து செல்வோரின் நகரமாக, கண்களை இழந்த பின்னும் வாழவேண்டுமே என்ற தவிப்போடு அலைவோரின் நகரமாக, பெற்றோரைப் போரில் இழந்த பிள்ளைகளின் நகரமாக, வீடுமில்லை வாழ்வுமில்லை என்று அந்தரிப்போரின் நகரமாக, பள்ளிக்கூடங்களும் கோவில்களும் கூடச் சிதைந்து போன நகரமாக, காணுமிடமெல்லாம் பாதுகாப்புத் தரப்பினரின் அடையாளங்களே தெரியும் நகரமாக, கடனாளிகளின் நகரமாக கிளிநொச்சி இருக்கிறது" என்று. "இதுதான் கிளிநொச்சி. இப்படித்தான் கிளிநொச்சி இருக்கிறது"என்று.

பிறகு மெல்ல மெல்லக் கிளிநொச்சி துளிர்க்கத் தொடங்கியது. யுத்தம் ஓய்ந்த இடங்களில் வழமையாக வந்து சேரும் அனைத்தும் கிளிநொச்சிக்கும் வந்தன. தொண்டு நிறுவனங்களோடு தொண்டுப் பணியாளர்கள் வந்திறங்கினர். வங்கிகள் வந்தன. லீஸிங் கம்பனிகள் வந்திறங்கின. கடன் தாராளமாக வழங்கப்பட்டது. அதுவும் தாரளமாக. கேட்கக் கேட்கக் கொடுத்தன எல்லா நிதி நிறுவனங்களும். கடன் வழங்கப்பட்டது என்பதை விட கடன்பட்டனர் சனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்வதே சரி. கையிலே காசில்லாவர்கள் கடன் படுவதைத் தவிர வேறு என்னதான் செய்ய முடியும்? காசில்லாதவரின் நிலையைப் பயன்படுத்தின ஏராளம் வட்டி வசூலிக்கும் நிறுவனங்கள். நகரில் ஏனைய கடைகளை விட நிதி நிறுவனங்களே அதிகமாக முளைத்தன. நகரம் கிசு கிசு என்று வளரத் தொடங்கியது. அரச பிரதிநிதிகள் வந்தனர். அமைச்சர்கள் வந்தனர். ஜனாதிபதி வந்தார். அமைச்சரவை கூடியது. திட்டங்கள் வந்தன. கொடிகள் பறந்தன. புழுதியும் பறந்தது.

சனங்கள் மீள்குடியேறிகளாக இருந்தபோதும் அகதி நிலையில் இருந்து மாறுவதற்கு காலம் தாமதித்தது. இன்னும் அந்தத் தாமதம் உண்டு. படைகள் குறைந்தாலும் அமைதி வளர்ந்தாலும் யுத்தக் காயங்கள் இன்னும் ஆறவில்லை. நெருப்புத் தணிந்தாலும் சூடு ஆறவில்லை என்பார்களே அதுமாதிரித்தான் இன்னும் நிலைமை. வெளிநாடுகளில் இருந்து வருவோர் தங்கள் காணிகளுக்குப் பாதுகாப்பாக இதுவரை வைத்திருந்த சனங்களை வெளியே தூக்கிப் போடுகிறார்கள். அல்லது வெளியே போக மறுப்போரைப் பொலிசில் கதைத்து உள்ளே தூக்கிப் போடுகிறார்கள். அநேகமாக இப்படிப் பாதிக்கப்படுவோர் இந்திய வம்ச வழியினராகவே (மலையகத்திலிருந்து கிளிநொச்சிக்கு வந்தவர்களாகவே) உள்ளனர். அவர்கள் போரின்போதும் சமாதானத்தின் போதும் இந்தக் காணிகளுக்குக் காவல் இருந்தார்கள். காடுகளை அழித்துப் பயிர்களை வளர்த்திருந் தார்கள். மூன்று நான்கு தலைமுறைக் காலத்தை இந்தக் காணிகளைக் கழித்திருந்தார்கள். என்றாலும் என்ன? சட்டமும் பணமும் ஆவணமும் இவர்களுக்குச் சார்பாக இல்லையே!

வயல்கள் விளைகின்றன. வாய்க்காலில் நீரும் ஓடுகிறது. குளங்களைத் திருத்திக் கட்டுகிறார்கள். வீதிகள் செம்மையாகின்றன. நகரத்தை ஊடறுத்துப் போகும் ஏ 9 என்ற கண்டி-யாழ்ப்பாணம் பழைய ராசதானிகளுக்கான வீதி பிரமாண்டமாக அகலிக்கப்பட்டுள்ளது. வீடுகளிற் பலவும் புதிதாய் முளைத்துள்ளன. தெருவிலும் விளக்குகள் ஒளிரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியுள்ளது. போதாக்குறைக்கு நகரத்தில் "சுப்பர் மாக்கற்" மற்றும் தேசியக் கொம்பனிகள், பல்தேசியக் கொம்பனிகள் எல்லாம் நிறைந்து கொண்டிருக்கிறது. நியான் விளக்குகளின் ஒளி கண்ணையும் கருத்தையும் பறிக்கிறது. வண்டிகள் குறுக்கும் மறுக்குமாக விரைந்து பறக்கின்றன. எல்லாமே மாயமாக இருக்கிறது. பல்கலைக்கழகத்தின் விவசாய பீடமும் பொறியியற் பீடமும் இயங்கத் தொடங்கியிருக்கின்றன. இரண்டு வருசத்துக்கு முன்பு இங்கேதான் யுத்தம் நடந்தது என்று நகரத்தைப் பார்த்தால் யாருமே நம்பமாட்டார்கள். சத்தியம் செய்தாலும் நம்பக்கடினம்தான்.

மீண்டும் கிளிநொச்சியில் ஹெலிகொப்ரர்கள் வந்திறங்கு கின்றன. வெள்ளை, கறுப்பு, செம்மஞ்சள் என்று பல வர்ணங்களில் மனிதர்கள் வந்து போகிறார்கள். ஆனால், சனங்கள் எதையும் பெரிதாகப் பொருட்படுத்துவதில்லை. றொட்ரிக்கோ மைதானம், சர்வதேச மைதானமாக மாறிக்கொண்டிருக்கிறது. சனங்கள் உள்ளூரில் வயலோடும் வாய்க்காலோடும் கிடந்த மாய்கிறார்கள். பலருக்கு வீடும் இல்லை. வயலும் இல்லை. வாய்க்காலும் இல்லை. முன்னரைப் போல இல்லாமல் இதையெல்லாம் வழங்கி மக்களை ஈடேற்றுவதற்காக யாரோ சிலர் இரவும் ஓடிக்கொண்டும் உழைத்துக் கொண்டும்தானிருக்கிறார்கள். சனங்களை நேசிப்பவர்கள் எப்படியோ ஒவ்வொரு காலத்திலும் இருக்கிறார்கள். வரலாறு என்பது எல்லாவற்றினதும் கலவை என்பது சரியாகத்தான் உள்ளது.

என்றபோதும் எல்லாவற்றையும் அவதானிக்கின்ற ஒரு நண்பர் கேட்கிறார், கிளிநொச்சி எப்படி இருக்கிறது? அங்கே என்ன நடக்கிறது? என்று. இவை பத்தாம் தலைமுறைக் கேள்விகள்.

இலங்கையின் மிக இளைய பட்டணங்களில் ஒன்று கிளிநொச்சி. ஆனால், மற்றைய இளைய பட்டணங்களையும் விட, புகழ்வாய்ந்த மூத்த பட்டணங்களையும் விடக் கிளிநொச்சிக்கு மதிப்புண்டு; புகழுண்டு. போரிலும் அதற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழுண்டு. சமாதான முயற்சிகளிலும் அதற்குப் புகழிருக்கு. போருக்குப் பிறகும் அது எழுச்சியாகவே உள்ளது.

எல்லாத் துயரங்களின் பின்னும் எப்படியோ ஒளியை வற்ற விடாமல் அது இருக்கிறது. அல்லது எப்படியோ சடுதியாக எழுந்து விடுகிறது. கிளிநொச்சியின் தாயூற்றாக இருக்கிற இரணைமடுக்குளம் கோடையில் வற்றி மாரியில் பொங்கிப் பிரவாகித்துப் பாய்வதைப் போல கிளிநொச்சியும் ஒரு போது அழிந்து இன்னொரு போதில் எழுந்து விடும் இயல்பைக் கொண்டது என்று சொன்னேன்.

ஆனால், உண்மையில் எனக்கும் தெரியவில்லை, அவருக்கும் தெரியவில்லை, கிளிநொச்சியில் என்னதான் நடக்கிறது என்று.

2012-நவம்பர்

*00*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிப்பின் கொடுமை

## கடிதங்களையும் விட்டு வைக்காத காலம்

இன்று புதுக்குடியிருப்புக்குப் போயிருந்தேன். மீண்டும் அழிவின் காட்டிடையே நின்றேன். துக்கத்தை மறுபடியும் காவி வந்துள்ளேன். போதாக்குறைக்கு தொலைந்து போன பொருளொன்றைத் துக்கம் பெருக்கியாகக் கிடைக்கப் பெற்றிருக்கிறேன். இதுதான் காலக் கொடுமை அல்லது விதியின் சதி என்பதா? அழிவுகளைப் பார்க்க விரும்பாமல் இதுவரையும் அங்கே போவதைத் தவிர்த்தேன். தொடர்ந்து இடிபாடுகளையும் சிதைவுகளையும் பார்த்து மனமும் சிதைந்து போய்விட்டது. இனியும் இவற்றைப் பார்க்க முடியாது. இந்த அழிவுகளைப் பார்க்க வேண்டியிருப்பதும் இவற்றினூடே வாழ வேண்டியிருப்பதும் தவிர்க்க முடியாத ஒரு யதார்த்தமே. என்றாலும் தொடர்ந்தும் இதையெல்லாம் தாங்கிக் கொள்ளக் கடினமாகவே உள்ளது. யுத்தம் முடிந்தாலும் இந்தக் கொடுமைகள் முடியவில்லை.

தொலைந்து போன பொருள் என்றேனே, அது என்ன என்று தெரிந்தால் சிலவேளை நீங்கள் சிரிக்கக் கூடும். காசு, நகை, வீட்டுப் பொருட்கள், இயந்திர சாதனங்கள் என எவ்வளவோ பெறுமதியான பொருட்கள் எல்லாம் நடந்த யுத்தத்தினால் தொலைந்து போயிருக்கின்றன. அதை விட பல ஆயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்கள். அதையெல்லாம் விட இந்தப் பொருளென்ன பெரிதா?

ஆனால், இதுவும் உயிருள்ள ஒன்றைப் போல மறக்க முடியாத ஒன்று. நினைவுகளில் ஆழப்பதிந்து நீங்க முடியாமல் ஒரு கூழாங்கல்லைப்போல படிகமாகியிருக்கிறது.

ஆமாம், தொலைந்தவையும் இன்று திரும்பத் துக்கம் பெருக்கியாகக் கிடைத்திருப்பவையும் கடிதங்களே. நண்பர்களின் கடிதங்கள், தோழர்களின் கடிதங்கள், அமைப்புகளின் கடிதங்கள், பத்திரிகை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் எனப்பலர் அவ்வப்போது எழுதிய கடிதங்கள். ஐயா, அம்மா என்று நெருங்கிய உறவினர்கள் எழுதிய கடிதங்கள். வெளிப்பார்வையில் இவை வெறும் கடிதங்களே. அதிகமான கடிதங்களில் உள்ளவை கடந்து போன காலமொன்றில் பேசப்பட்ட விசயங்கள். இப்பொழுது அந்த உரையாடல்களுக்கு என்ன அவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது? ஆனால், அடிப்படைகளின் விதி என்றும் மாறுவதேயில்லை. இரண்டும் இரண்டும் நான்குதான். அது எப்பொழுதும் மாறுவதில்லை. பீற்றருக்கும் அது நான்குதான். பியசேனாவுக்கும் அது நான்குதான். அரவிந்தனுக்கும் நான்குதான். வெள்ளையனுக்கும் கறுப்பனுக்கும் கன்னடனுக்கும் தெலுங்கனுக்கும் அரேபியனுக்கும் அது நான்குதான். அடிப்படைகளை உருவாக்கும் எந்தச் சொல்லுக்கும் கால முதிர்வு ஏற்படுவதில்லை. வாழ்வை அதன் சாரத்தில் நின்று உணர்ந்த எத்தகைய எழுத்தும் அத்தகைய பெறுமதியைப் பெறுவன.

எனவேதான் இவற்றைப் பற்றி எழுதும்போதே ஒருவிதமான வேறுபட்ட மன எழுச்சி நிகழ்கிறது. இந்தக் கடிதங்களை எழுதிய ஒவ்வொரு முகங்களும் மனதில் தோன்றுகின்றன. இவற்றை எழுதியவர்களிற் பலர் இன்றில்லை. சிலரை நான் வாழ்விலே நேரிற் பார்த்ததே இல்லை. தொலைபேசியிற் கூடப் பேசியதில்லை. அவர்களுடைய குரலைக் கேட்டதில்லை. அவர்களுடைய தொடர்பும் உறவும் கடிதங்களின் மூலமாக மட்டுமே இருந்தன. எழுதுகிற விசயம் மிகுந்த மன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடிக்குரியது என்றாலும் அதை எழுதும்போது ஏற்படும் உணர்வுகள் இன்றைய நிலையில் அசாதாரணமானவை.

"கடிதங்களின் யுகம் முடிந்து வருகிறதா?" என்று கேட்டிருந்தான் அண்மையில் சிவா. "தொலைபேசியும் மின்னஞ்சலும் கடித யுகத்திற்கு எதிரிகள்" என்று மேலும் சொன்னான். மின்னஞ்சல்கள் வந்த பிறகு பெரும்பாலும் தபாலில் வருகின்ற கடிதங்களின் யுகம் முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது. தொலைபேசியின் உச்சபாவனை, கைபேசியின் வருகை எல்லாம் அநேகமாகக் கடிதங்களின் அவசியத்தைக் குறைத்து விட்டன. ஆனால், தொலைபேசியில் பகிரப்படும் எல்லா வார்த்தைகளும் அந்தக் கணத்திலேயே காற்றிலே கரைந்து விடுகின்றன. அழுகை, சிரிப்பு, பரிவு, நேசம், தவிப்பு, தாகம், மோகம் என எத்தகைய உணர்ச்சிகளையும் நேரடியாகப் பரிமாறிக் கொள்வதற்கு தொலைபேசி உச்ச சாத்தியத்தை அளிக்கிறது என்பது உண்மைதான். ஒவ்வொரு குரல்களையும் அவற்றின் உயிர்ப்போடு அனுபவிக்க முடிவதும் உண்மை. என்றாலும் எல்லாம் அந்தக் கணம் வரையிற்தான். அதற்கப்பால், அவற்றுக்கு எந்த முகமும் இல்லை. அடையாளமும் இல்லை. பெறுமதியும் இல்லை. காற்றிலே கரைந்து, காணாமற் போய் விடுகின்றன அவ்வோசைகள்.

தொலைபேசிக்கு அடுத்தபடியாக கடிதத்திற்கு உள்ள இன்னொரு எதிரி மின்னஞ்சல். இதையும் சிவாதான் சொன்னான். என்னதான் மின்னஞ்சலில் வேகமாகக் கடிதப் பரிவர்த்தனையைச் செய்யக் கூடியதாக இருந்தாலும் அதில் எழுதப்படும் கடிதங்களுக்கென்ற தனியான முகங்கள் இருப்பது குறைவு. தனியான அடையாளங்கள் - அந்த அடையாளங்களின் வழியாக வருகின்ற உணர்வு! முக்கியமாக எழுத்துகள். மின்னஞ்சலில் எல்லா எழுத்துகளும் ஒரே மாதிரியானவை, அச்சில் வார்க்கப்படும் எழுத்துகளைப் போல. அச்சில் இருக்கின்ற எழுத்துகளுக்கு கையெழுத்துகளைப்போல தனியான அடையாளங்கள் இருப்பதில்லை. தனியான முகங்களை அவை காட்டுவதும் இல்லை. இது பெரியப்பாவின் எழுத்து, இது பாலுவின் எழுத்து, இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமணியின் எழுத்து, இது ரதியின் எழுத்து, இது அத்தையின் எழுத்து என்று எப்படி அவற்றை அறிந்து கொள்வது? எழுதப்படும் கடிதங்களில் ஏற்றப்படும் அவரவர்களின் உணர்வுகளின் தொனி வேறுபாட்டைத் தவிர, வேறெந்த வேறுபாடுகளும் தனித்துவங்களும் மின்னஞ்சல்களுக்குக் கிடையாது.

ஆனால், கடிதங்கள் அப்படியல்ல. அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான முகங்கள் உண்டு. அவரவரின் கையெழுத்து களில் இருந்தே இந்த முகச்சாயல் உருவாகியுள்ளது.

மனிதர்கள் வேகங்கொள்ளும் வாழ்க்கைக்குத் தாவும்போது இயல்பையும் அழகையும் அடையாளங்களையும் இழந்து விடுகிறார்கள். வேகங்கொள்ளும் வாழ்க்கைக்குப் பெரும் பாலும் இயந்திரங்களின் துணை அவசியம். இயந்திரங்களும் பொறிமுறைகளும் எப்பொழுதும் மனித சுபாவங்களுக்கும் தனித்த அடையாளங்களுக்கும் எதிரானவை. அவற்றை அவை நிராகரித்து, மனிதர்களையே இயந்திரமயமாக்கி விடுகின்றன. மனிதர்கள் சுலபமாக இயந்திரமயமாகி விடுகிறார்கள். ஆனால், இயந்திரங்கள் ஒருபோதும் மனித இயல்புக்கு வருவதில்லை. இப்போது கடிதங்களிலும் தங்களை இழந்து வருகிறார்கள் மனிதர்கள்.

எப்படியோ கடிதம் எழுதுவதை மனிதர்கள் வரவரக் குறைத்துக் கொண்டே வருகிறார்கள். கடிதங்களற்ற ஒரு வாழ்க்கையும் வந்து விடத்தான் போகிறது. அப்படிச் சில கடிதங்கள் வந்தாலும் அவை பெரும்பாலும் அலுவலக விவகாரங்கள் சம்மந்தப்பட்டவையாகத்தான் இருக்கும். அந்தக் கடிதங்களும் இயந்திரமயப்பட்டவையே. நியமங்கள், விதிகள், கட்டளைகள், அறிவுறுத்தல்கள், கோரிக்கைகள், அறிவிப்புகள் என்ற வரையறையில்தான் அலுவலகக் கடிதங்கள் இருக்கும். அலுவலக விதியே இயந்திரமயமானது தானே.

முன்னர், ஒரு தபால் அட்டை வரும்போதே எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்! அதைக் கொண்டு காக்கிச் சட்டை போட்ட தபால்காரர் வரும்போது ஒரு வகையான கிளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மையறியாமலே நமது உடலில் ஓடிப்பரவும். உறையோடு வரும் கடிதங்களில் இருக்கின்ற வெவ்வேறு வகையான அழகிய முத்திரைகள், முகவரியில் இருக்கும் விதவிதமான எழுத்துகள் எல்லாமே கடிதங்களுக்கு ஒரு தனிக்கவர்ச்சி. முகவரியை எழுதிய கையெழுத்தை வைத்தே இது யாருடைய கடிதம் என்று கண்டு பிடித்து விடும் அளவுக்கு மன இயக்கம் இருந்தது.

சின்னமாமாவின் எழுத்துகள் எப்போதும் சரிந்திருக்கும். அவற்றைப் பார்க்கையில், ஒரு அணியாக எழுத்துக் கூட்டம் நிற்பதைப் போலிருக்கும். பெரியப்பாவின் எழுத்துகள் அதிரடியாக எதையோ சொல்ல முயற்சிப்பதைப்போல அவசரகதியுடையவை. தாள் முழுவதும் ஏறக்குறைய ஒரு வகையான கிறுக்கல்கள். அவரும் அப்படியான ஆள்தான். எதற்கும் பராதிப்பட்டுக் கொண்டிருப்பார். சற்று ஆதிக்க மனோபவமும் அவரிடமுண்டு. ராணி அத்தையின் எழுத்துகள் நிதானமானவை. அவவின் எழுத்துகளும் அப்படித்தான், அவ எழுதும் விசயங்களும் அப்படித்தான், அவவும் அப்படித்தான். எப்படித்தான் அப்படியொரு நிதானமும் ஆற்றலும் அவவிடம் உள்ளன என்று யோசிக்க வைக்கும். அறிவுரை சொல்வதைப் போல அணைப்பும் இதமும் நெருக்கமும் கூடிய எழுத்துகள் எனக்கு அந்த எழுத்துகளே அதிகமாகப் பிடிக்கும். எதையோ சொல்லத் துடிப்பதைப்போல தவித்துக்கொண்டிருப்பன சறோ அத்தையின் எழுத்துகள். சரிந்து நிரல் கட்டியிருக்கும் பயிர்களைப் போல வரிகளிருக்கும்.

கிறுக்கல் சித்திரக்காரனின் கை வண்ணத்தைப்போல, என்ன ஏது என்றே தெரியாமல் எழுதிச் செல்வார் சோதியப்பு. அவருடைய கையெழுத்தும் தலையெழுத்தும் கடவுளுக் குத்தான் தெரியும் என்று சொல்வார் ஐயா. அந்த அளவுக்கு எதையோ கிறுக்கிச் செல்வார். ஆனால் அவருடைய எழுத்தைப் படித்துத்தான் அவரில் மையல் கொண்டாள் அந்த நாளில் ஒரு மலேசியப் பெண் என்று பெரிய மாமா சொல்வார். பொனிபஸ்ஸின் எழுத்துகளுக்கு என்றும் முதுமை வந்ததேயில்லை. அவன் கடையாக எழுதிய கடிதத்தில் நான் பார்த்தது முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் அவன் எழுதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே எழுத்தைத்தான். காலம் எவ்வளவு மாறினாலும் அவனுடைய கையெழுத்தில் அது ஊடுருவ முடியாமல் பின்தங்கி விட்டது. இவ்வளவுக்கும் அவன் தமிழைப் படிக்க வந்ததே அவனுடைய ஆறாவது வயதில்தான்.

போகட்டும், இப்படி எத்தனை வகையான எழுத்துகளை அடையாளம் கண்டு, அவற்றின் குணமறிந்து, அவற்றின் முகமறிந்து வைத்திருந்த வாழ்க்கையைக் கடிதங்கள் தந்தன. தாத்தாவின் கையெழுத்தை நீண்டகாலமாக அம்மா பத்திரப் படுத்தி வைத்திருந்தா. அநேகமானவையும் பெரும்பாலும் கடிதங்களில்தான். அதுவும் அவ்வளவு அலைக்கழிந்த வாழ்க்கைக்குப் பிறகும். ஒரு விவசாயியாக தாத்தா இருந்தபோதும் அம்மா படிக்கிற காலத்தில் வாரந்தவறாமல் அம்மாவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

நேரு தன்னுடைய மகளான பிரியதர்ஸினி (இந்திராவு)க்கு எழுதிய கடிதங்கள் அளவுக்கு, முக்கியமான கடிதங்களாக எங்கள் தாத்தாவின் கடிதங்கள் வரலாற்றுப் பிரசித்தியைப் பெறவில்லை என்றாலும் அம்மாவுக்கு அந்தக் கடிதங்கள் வரலாற்றுப் பொக்கிஷம். வாழ்க்கைப் பொக்கிஷம். நினைவுப் பொக்கிஷம். பின்னாளில் ஐயாவின் கடிதங்களையும் அப்படி அம்மா சேர்த்து வைத்திருந்தா. "இதெல்லாம் பாரதி, புதுமைப்பித்தன் கடிதங்கள் இல்லைத்தான். எண்டாலும் வைச்சிருக்கிறன்" என்று சொல்லிக் கொண்டு.

என்னிடம்கூட எத்தனையோ கடிதங்கள் இருந்தன. 25 ஆண்டுகளாகக் கடிதங்களைச் சேமித்திருக்கிறேன். நாடோடி யையும் விட ஓயாது அலைந்த போர்க்கால வாழ்க்கையில், உத்தரவாதங்கள் இல்லாதிருந்த இடம் பெயர்ந்து கொண்டிருந்த அந்தக் கொடிய வாழ்க்கையின் போது கூட ஏராளம் கடிதங்களைச் சேகரித்து வைத்திருந்தேன். ஆரம்பத்தில் சேகரித்த கடிதங்கள் கொஞ்சம் தொலைந்து விட்டன. அத்தனையும் முக்கியமான கடிதங்கள். மறக்க முடியாத கடிதங்கள், சிறப்பான கடிதங்கள் என்று சொல் வார்களே, அப்படிச் சில கடிதங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமிள், தஞ்சைப் பிரகாஷ், எம்.வி.வெங்கட்ராம், சுந்தர ராமசாமி, ஜெயமோகன், தங்கர் பச்சான், உதிரிப்பூக்கள் மகேந்திரன், அன்ரன் பாலசிங்கம், அ.இரவி, நிலாந்தன், வே.பாலகுமாரன், சோலைக்கிளி, சு.வி, நற்பிட்டிமுனை பளீல், எம்.எச்.எம். நவாஷ், புதுவை இரத்தினதுரை, சாந்தன், செம்பியன் செல்வன், வரதர், நந்தி, சோ.கிருஷ்ணராஜா, தணிகாசலம், அ.யேசுராசா, முருகையன், சண்முகம் சிவலிங்கம், டொமினிக் ஜீவா, சோ.பத்மநாதன், கா.சிவத்தம்பி, கந்தையா சிறிகணேசன், அழ.பகீரதன், கைலாஷ், பவானந்தன், நிர்மலன், தாமரைச்செல்வி, சு.மகேந்திரன், புகழேந்தி, குழந்தை ம. சண்முகலிங்கம், அ.மாற்கு, சின்னபாலா....

இதை விட பின்னாளில் அறிமுகமாகியிருந்த இளைய படைப்பாளிகளிற் பலருடைய கடிதங்களும் நண்பர்கள் பலருடைய கடிதங்களும் கூட இருந்தன.

முக்கியமான உரையாடல்கள் அடங்கிய கடிதங்களைத் தேர்ந்து அவற்றை, கடிதங்களை உறையிட்டுச் சேமிக்கும் கோவையொன்றில் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். எத்தனை விதமான கடிதங்கள்.! "எத்தகைய உணர்ச்சிகரமான அறிவெழுச்சியேற்பட்ட மனநிலையில் அவை எழுதப்பட்டிருந்தன. சில கடிதங்களைப் பல தடவை படித்திருக்கிறேன். கடிதங்களில் இருக்கின்ற வசதியே அதுதான். எத்தனை தடவையும் அவற்றை நாம் படிக்கலாம். மறுபடி மறுபடி வாசிக்கலாம். தஞ்சை பிரகாஷ், பிரமிள், எம்.வி.வி, சு.வி, பளீல், சு.ரா, செம்பியன் செல்வன் போன்றோர் இறந்த வேளையில் அவர்கள் எழுதிய கடிதங்களை மீளவும் எடுத்துப் படித்திருக்கிறேன். நேரிலே எழுந்து வந்து உரையாடுவதைப்போல ஒரு உணர்வு வரும். எஸ்போஸை யாரோ சுட்டுக் கொன்றதைப் பற்றிய சேதியறிந்த போதும் அவர் எழுதிய கவிதையையும் கடிதங்களையுமே படித்தது இன்னும் நினைவிலுண்டு.

காதற் கடிதங்களை அந்தப் பருவ நாடகத் தருணத்தில் எத்தனை தடவைகள் படித்திருப்போம் என்று நினைத்துப் பார்த்தால் இது இலகுவாகப் புரியும். இப்போது அதை நினைக்கும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே ஒரு வகையான கூச்சமெழுகிறது. நம்மையறியாமலே சிரிப்புக் கூட வருகிறது. படிக்கப்படிக்க மன எழுச்சியையும் இதத்தையும் தரும் கடிதங்கள் காதற் கடிதங்கள் மட்டுமல்ல, அரசியல் எழுச்சிகளை வலியுறுத்தும் கொள்கை விளக்கக் கடிதங்களுந்தான். எத்தகைய உணர்ச்சிச் சுழிப்புகளை அவை அந்த நாட்களில் ஏற்படுத்தியிருந்தன. அருளர், அன்னலிங்கம் ஐயா, நா.விசுவலிங்கம், டொமினிக் ஜீவா, பவானந்தன், சின்னபாலா, வே.பாலகுமாரன், சாந்தன் (ராம்), பரா, கைலாஸ் என்று எத்தனை பேர் இத்தகைய எழுத்துச் சித்திரங்களை வேட்கை ததும்ப எழுதினார்கள். இப்படி ஒவ்வொருவருக்கும் வேட்கைகளை எழுதுவதற்கென்று அந்த நாள்களில் பலர் இருந்தார்கள். காலம் எல்லாவற்றையும் அடித்துப் போயிற்று வெவ்வேறு திசைகளில்....

இன்னொரு வகையான மன எழுச்சிகளைத் தரும் கடிதங்களாக பிறகு இலக்கியம் சார்ந்த கடிதங்களிருந்தன. மனித இயக்கத்தையும் வாழ்வைப் பற்றிய தரிசனங்களையும் காண்பிக்கும் உணர்வும் அறிவும் சார்ந்த கடிதங்கள் அவை.

பிறகு ஒரு காலம்.

கண்ணீர்க் கதைகளையே தங்கள் எழுத்துகளாக்கினார்கள் பல தோழர்கள். அவர்களுடைய கடிதங்களைப் பார்ப்பதே அச்சத்துக்குரியது என்ற நிலை உருவாகியது. அந்தளவு கொடிய துயரங்களை அந்தக் கடிதங்கள் தாங்கி வந்தன. வழிகள் அழிந்தொடுங்கிய பிறகு, போக்கிடமற்ற தோழர்களின் குரல்கள் ஈனத்தில் ஒலித்தன. அந்த நாள்களில் தபாற்காரனைக் காண்பதற்கே மனம் அஞ்சியது. ஆனாலும் யதார்த்தத்தை எப்படிப் புறக்கணிப்பது? வரும் கடிங்களை வாசிக்காமல் இருக்க முடியுமா? வாசிப்பதற்கஞ்சி, மூடப்பட்ட நிலையில் இருக்கும் கடிதம் அல்லது பிரிப்பதற்காகக் காத்திருக்கும் கடிதத்தை மூடிய நிலையிலேயே வைத்திருக்கும்போது ஏற்படும் பதற்றம் சாதாரணமானதல்ல. என்னதான் அதிர்ச்சியைத் தரக்கூடிய கடிதமாக, மன நெருக்கடிகளைத் தரக்கூடிய கடிதமாக அது இருந்தாலும் அதை அறியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதற்கு மனம் இலகுவில் அனுமதிக்காது. பதற்றத்தை ஏற்படுத்திக்கொண்டேயிருக்கும் அது. பதற்றத்தை மட்டுமா, குற்றவுணர்வையும் ஏற்படுத்தும்.

ஆகவே, என்னதான் பாதகமான நிலையில் இருக்கின்ற போதும் வருகின்ற கடிதங்கள் வாசிக்கப்படுகின்றன. பதில் சொல்லமுடியாத கேள்விகளை அதில் பதிந்திருப்பார்கள் தோழர்கள். தெரிந்த விளக்கத்தையே மீண்டும் எழுதி விளக்குவார்கள். குற்றச்சாட்டுகள், துயரத்தைப் பகிர்தல், துயரேற்றல், கழிவிரக்கம், மறுப்பு, வசை, கையறு நிலை, உதவி கோருதல் என சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாத அளவுக்கு அவை இருக்கும். அந்தக் கடிதங்களை எதிர்கொள் வதிலேயே நான் அதிக சிரமப்பட்டிருக்கிறேன். ஆனால், என்ன செய்ய முடியும்? படிக்கத்தான்வேணும். பதில் சொல்லத்தான் வேணும். நட்பின் முன்னே, தோழமையின் முன்னே மௌனம் கொள்வது சாத்தியமே இல்லை. அது நியாயமும் இல்லை.

இப்படியே கடிதங்களுக்கும் எனக்குமான உறவு நீண்டது. அரசியல் விவாதங்கள், இலக்கிய விவகாரங்கள், நட்பும் தோழமையும் கலந்த பரிமாறல்கள் என ஏராளம் கடித வழி உரையாடல்கள் நடந்து கொண்டேயிருந்தன.

வன்னியில் தொலைபேசி வசதிகள், இணைய வசதிகள் மட்டுப்பாட்டுடன் இருந்ததால் கடிதங்களே பெரும்பாலும் தொடர்பு வழியாக இருந்தன. இது கடித உறவாடலுக்கு முக்கிய ஒன்றாகியது. இப்படி வந்த கடிதங்களில் தேர்வு செய்து, இரண்டு பெரிய தொகுதிக் கடிதங்களைத் தயாரித்து எடுத்தேன்.

கிளிநொச்சியை நோக்கி 2008 இறுதிக் காலப்பகுதியில் படையினர் படையெடுத்து வரும்போது எல்லாப் பொருட்களோடும் இடம்பெயர்ந்தேன். கடிதங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்பதற்காக, அவற்றை புதுக்குடியிருப்பிற்கு அனுப்பினேன். அங்கே நண்பர் முல்லைக்கோணேஸ் அவற்றை பொறுப்பெடுத்துத் தன்னுடைய வீட்டில் வைத்திருந்தார். இடப்பெயர்வு பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சங்கள் கோணேசுக்கும் இருந்தன. ஆனாலும் அதை விட எங்களுக்கு வேறு தெரிவுகள் இருக்கவில்லை. முடிந்தவரையில் அவற்றைப் பாதுகாப்போம் என்ற அளவில் செய்யக் கூடிய ஏற்பாடுகளைச் செய்து அவற்றைப் பாதுகாப்பாக வைத்தோம். ஆனால், எல்லாமே தலைகீழாகின. எதிர்பார்த்தபடியே படையெடுப்பு புதுக்குடியிருப்பை நோக்கியும் நடந்தது. இதனால், பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த அந்தக் கடிதங்கள் மீண்டும் சோதனையைச் சந்தித்தன. கோணேஸ் தன்னையும் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொள்வதற்கே பெரும்பாடுபட்டார். பிறகு, புதுமாத்தளன் பகுதியில் அகதியாகக் கோணேஸைச் சந்தித்தபோது, "உங்களுடைய கடிதங்களும் புத்தகங்களும் இதுவரையில் பக்குவமாக இருக்கு" என்றார்.

புதுக்குடியிருப்பில் அவருடைய வீட்டை விட்டு அவர் குடும்பத்தோடு வெளியேறியிருந்தாலும், அந்தப் பகுதியில் உக்கிரமான சண்டைகள் நடந்து கொண்டிருந்தாலும் எப்படியோ மனைவிக்கும் எறிகணைகளுக்கும் ரவைகளுக்கும் தண்ணி காட்டிக் கொண்டு புதுக்குடியிருப்பி லிருந்த தன்னுடைய வீட்டுக்குப் போய் வந்து கொண்டிருந்தார் கோணேஸ். ஆனால், அது "கரணம் தப்பினால் மரணம்" என்ற பயணம். ஒரு வகையில் அது ஒரு வீம்புச் செயல்தான். எப்போதும் வீம்புச் செயல்களைச் செய்வதிலேயே ஒரு விதமான விருப்பமுள்ளவர் கோணேஸ். அப்படிப் போய் வந்த கோணேஸ் வீட்டையும் பொருட்களையும் அவதானித்தார். அப்பொழுது என்னுடைய கடிதங்களும் பத்திரமாக இருப்பதைக் கண்டிருக்கிறார். அவருடைய புத்தகங்களும் அவர் சேகரித்திருந்த ஓவியங்களும் அவர் வரைந்திருந்த ஓவியங்களும் கூட தப்பிப் பிளைத்திருந்தன.

ஆனால், யுத்தம் முடிந்த பிறகு... என்ன மிஞ்சும்?

எங்கெல்லாமோ அலைந்து திரிந்த பிறகு, புதுக்குடியிருப்புப் பகுதியில் மீள்குடியேற்றத்துக்காகச் சனங்கள் சென்றனர். கோணேசும் போனார். போனவருக்கு பேரதிர்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூரையற்ற வீட்டையும் சிதைந்து அழிந்து போயிருந்த பொருட்களையும் பார்த்த கோணேஸ் அடுத்ததாக புத்தகங்களையும் ஓவியங்களையும் தேடினார். என்னுடைய புத்தகங்களும் கடிதக் கோவைகளும் இருந்த இடத்தைப் பார்த்தார்.

அங்கே? ஒன்றுமேயில்லை.

மிஞ்சியவை எரிந்தும் உக்கியும் போன நான்கைந்து புத்தகங்கள்.... கூடவே அந்தக் கடிதப் படிகங்கள். கோணேஸ் முந்திச் சென்று அவற்றையே எடுத்தார்.

என்ன கொடுமை, அவையெல்லாம் பெரும்பாலும் உருவழிந்து போய்விட்டன. ஆனால், எரியவில்லை. என்றாலும் பயன்படுத்த முடியாதவை ஆகிவிட்டன. எந்தக் கடிதத்தையும் சீராகப் படிக்க முடியாது. இனி அவற்றை என்றும் எங்கும் பெறவே முடியாது.

இதைத்தான் ரவிக்குமார் சொன்னாரா, "யாழ்ப்பாண நூலகம் எரியுண்டபோது அதைக் கண்டு குமுறியவர்கள் மீண்டும் அப்படியொரு நூலகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்று தமக்குள் உறுதியேற்றிருப்பார்கள். அந்த விருப்பம் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு ஈடேறியது. என்றாலும் இது எத்தனை நாளைக்கு? என்ற கேள்வி ஒவ்வொரு நெஞ்சிலும் எழாமல் இல்லை. நூல்கள் காகிதத்தால் தயாரிக்கப்படுகின்றன. காகிதம் நெருப்பின் உணவு. நெருப்போ ஆதிக்கவாதிகளின் கையிலிருக்கும் ஆயுதம்" (தீராநதி, மார்ச் 2012) என்று?

அந்த உருவழிந்த கடிதக்கோவையைக் கோணேஸ் தந்திருந்தார். அவற்றிற் கடிதங்கள் இருந்தன. ஆனால், அவை கடிதங்களாக இல்லை. உருவழிதல் என்பது இப்படியுமா? இந்த ரூபத்திலுமா?

2012-யூலை

00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளாலி

## கடந்து செல்ல முடியாமல் திணறிய பயணம்

இரவில் ஒரு காலம், பகலில் ஒரு காலம் என முற்றிலும் வேறுபட்ட இரண்டு காலங்களில் வாழ்ந்தது அநேகமாகக் கிளாலியில் தான். பகலில் கரையோரங்களிலுள்ள தென்னைகளின் கீழே தலையை மறைத்துக் கொண்டு படுத்திருப்பார்கள் எல்லோரும். குண்டு வீச்சு விமானங் களுக்கும் ஹெலிகொப்ரர்களுக்கும் தலைக்கறுப்புத் தெரியக் கூடாது.

எனவே வெள்ளாப்போடு, படகுகளை எல்லாம் தொடுவை அவிழ்க்கப்பட்டு அங்குமிங்குமாக கட்டிவிடுவார்கள். கடலில் துடைத்து விடப்பட்டதைப்போல மனிதப்பூச்சியின் நட மாட்டத்தைக் காணமுடியாது. கரைநீளம் முளைத்திருந்த கடைகளும் துறைகளும் மூடப்பட்டிருக்கும். போக்கு வரத்தோ சன நடமாட்டமோ கிடையாது. ஒரு படுசோம் பேறியைப் போல பகல் அப்பொழுது உறைந்து படுத்திருக்கும். அல்லது கள்ள மௌனம் காக்கும். அனற்பறக்கும் வெயிலில் அல்லது கொட்டும் மழையில் அல்லது மப்பும் மந்தாரமுமான நிலையில் என எதுவாக இருந்தாலும் கிளாலியின் பகல் என்பது அந்த நாள்களில் ஒரு பேசாமடந்தையே. தப்பித் தவறி பகலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்க வைத்தால் பகல் மட்டுமல்ல, இரவும் இரத்தம் சிந்தவேண்டி வரும்.

அது குண்டு வீச்சு விமானங்கள் வானிலே கோலோச்சிய காலம்.

ஆனால், இரவில் நிலைமை வேறு. பொழுது மறைய எல்லாமே துளிர்த்து விடும். இருள் கவியத்தொடங்க மெல்ல மெல்ல அங்கே பரபரப்பு ஏறும். வாகனங்கள் புழுதியைக் கிளப்பிக் கொண்டு அந்தச் சிறிய மணல் தெருக்களிலும் தென்னந் தோப்புகளினூடும் ஓடித்திரியும். சனங்கள் மூட்டை முடிச்சுகளோடும் கலவரமான நெஞ்சோடும் பறந்து திரிவார்கள். கிளாலியின் முன்னிரவு மாய நகரமொன்றைப் போல மெல்ல மெல்ல மாறும். பயணிகள், கொத்துரொட்டிக் கடைகள், வண்டி, வாகனங்களின் போக்குவரத்து நெரிசல், புலிகளின் வரி வசூலிப்பு, பண்டங்களை ஏற்றி இறக்குவது, படகுகளின் அணிவகுப்பு, துறைகளில் ஏற்படும் பரபரப்பு எல்லாமே இரவில்தான்.

ஒவ்வொரு இரவும் இப்படி நகராகத் துளிர்ப்பதும் பகலில் காய்ந்து கிடப்பதும் கிளாலியின் கதையாகி இருந்தது கொஞ்சக்காலம். அது 1990களின் நாள்கள். அந்த நாள்களில் கிளாலி ஒரு முக்கிய மையம். வடக்குத் தமிழருக்கு, அதிலும் யாழ்ப்பாணத்து ஆட்களுக்கு கிளாலியை விட்டால் வேறு கதியுமில்லை, வழியுமில்லை. யாழ்ப்பாண முற்றுகை யாழ்ப்பாணக் குடாவுக்கான பாதைகளை மூடியிருந்தது. கிழக்கே ஆனையிறவுப் பாதையையும் மேற்கே பூநகரித் துறையையும் படைகள் மூடியிருந்தன. இடையில் இருந்த கிளாலிக் கடலை மையமாக வைத்து, மறுகரையான பூநகரி நல்லூருக்கு கடல் வழியே படகுப் பயணத்தை புலிகள் ஆரம்பித்தனர். ஆக, மிஞ்சியது இந்தக் கடல்வழிதான். அதனால் அதுவரை கிளாலியைப் பற்றி அறிந்திராதவர்கள் எல்லாம் கிளாலிக்கு வந்தார்கள். அப்படி வராமல் இருக்க முடியாது. கிளாலிக்கு வராமலிருந்தால் யாழ்ப்பாணத்தில் வாழ முடியாது. வாழவேண்டுமென்றால், சாகவும் துணியவேணும் என்றிருந்த காலம் அது. கிளாலிப் பயணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது மரணவழியில் நடக்கும் ஒரு சாகஸமாகியது.

இந்தப் பயண நாடகத்தை கவிஞர் அஸ்வகோஸ் இப்படி எழுதினார்

**கிளாலி**

முன்னுரிமை பெற்றவர் முன்னால் நிற்க!
நலிந்தவர் பயந்தவர் ஒதுங்கி நிற்க!
ஓட்டிகள் மந்திரம் ஓதுக!
நுரைத்தெழும் ஜலமே வழிவிடு!
மூடுண்டு போனது யாழ்நாடு
வழியும் போனது
எழுந்தன அவலக் குரல்கள்!
வானம் கேட்டது
திசைகள் யாவும் கேட்டன!
காற்றும் மழையும் பனியும்
நிலவும் இருளும் கேட்டன
நீண்ட காலமாய்!

போகும் பாதையில் சுழிகள்
உண்டென வானம் உரைத்தது.
வானொலி உரைத்தது
உயிரும் பணமும் ஈர்க்கும்
கரும் பொருள் உண்டென!
உரப்பையும் பயணப் பொதியும்
அரைக்கால் சட்டையும்
நனைந்த கோலமாய்த் தேவர்கள்
கண்டங்களை இணைத்த கடல் வாசிகள்
பனிக்கண்டங்களில் உலவிய
ஆதிமனிதர்கள்.

வீடு வாசல் தோட்டம் துரவு
மா பலா அனைத்தும் ஒப்புக்
கொடுத்தோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணிகள்
பேச்சற்றுப் போனவர் கதைப்பவர்
வணிகர் குழந்தைகள்
பெற்றோர் எனத் தென்னை மரத்திடை
அடங்கிக் கிடந்தனர்.
கிளாலிக் கரை
கூவி விற்போர் வியாபாரம் செய்க!
கூடிக் கதைப்போர் ஒன்று சேர்க!
தனித்திருப்போர் கனவு காண்க!
இரவு வரட்டும்
இருளும் வரட்டும்
காற்றே அமைக!

போகுமுன் பெயர்களைப் பதிவு செய்க!
கடலிலே அலை மோதும்
வள்ளமெழுந்து வீழும்!
வரிசைகள் முக்கியம்
வள்ளங்களின் எண்களும் முக்கியம்
இருவராய் மூவராய் அறுவராய் எனினும்
வரிசைகள் முக்கியம்!
வீசும் கந்தகக் காற்றும்
நாறும் சேறும்
எரிச்சல் வயமாய்ப் பயணிகள்
வரிசைக்கு
வள்ளத்துக்கு
இடத்துக்கு
முந்துக
வரிசைகள் மீறுக!
ஒழுங்குகளைக் கலைத்திடுக!
காவல்துறை வரட்டும்!
அவரவர் உடைமைக்கு
அவரே பொறுப்பு!
உயிருக்கும் அவரே தான்!
நல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி ஒட்டிகள் வருக!
தெற்கே யமனின் திசையில்
பதினைந்து பதினைந்தாய்
அழைத்துச் செல்க!
நோய் தரும் ஜலத்தினை
வானம் ஈய்ந்தது.
வெற்றிடங்களை ஈய்ந்த பாரிய வெளி
போர் உலாப் போன பல மாரி காலங்கள்
பிஞ்சும் பூவுமாய்
சிசுக்களைக் காவு கொண்ட ஏரி.
மண் தின்ற கடலிடையே
பளிச்சிடும் ஒளிப்பிசாசுகள்
பயணம் நெடியதும் கொடியதும்
ஊதல் காற்றும்.
ஜலதாரை வீசும் கடலும்
குளிரும் பயமுமாய்ப் பயணம்.

...................................
...................................

எப்பொழுது படித்தாலும் ஆறாத சூட்டுடனிருக்கும் வார்த்தைகளிவை.

பத்துக் கிலோ மீற்றருக்கும் அதிகமான தொலைவுடைய கடற்பரப்பில், சின்னஞ்சிறிய படகுகளில் பயணம் செய்ய வேணும். தனிப்படகு கிடையாது. "தொடுவை" என ஆறு அல்லது எட்டு குதிரை வலுவுடைய ஒரு இயந்திரமுள்ள படகில் ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது படகுகளைப் பிணைத்து இழுத்துச் செல்வார்கள். கடலில் ஊரும் படகுகளை ஆமைகள் முந்திவிடும். அப்படி மெதுவாகப் போகும் படகுகளை விட்டுக் கடலில் குதித்து நீந்திச் சென்று விடலாம். ஆனால், அதற்கு வழியில்லை. என்னதான் எரிச்சல்பட்டாலும் அந்தத் தொடுவைகளில் கழிந்து செல்லக் கடினமான இரவு முழுதும் காத்திருக்க வேண்டியதுதான். இடையில் கடலில் காவல் நிற்கும் கடற்புலிகளுக்குத் தண்ணி காட்டிவிட்டு, அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை எதிர்த்து விட்டு கடற்படைப் படகுகள் வந்தால் கதை கந்தல். சாவு சுற்றிவளைத்துச் சன்னதமாடும். அப்படிக் கடலிலே மாண்டவர்கள் ஒன்றல்ல, இரண்டல்ல நூற்றுக் கணக்கில். கல்வி அதிகாரி, வெற்றிலை வியாபாரி, நோயாளி, முதிய பெண், சின்னஞ்சிறிய குழந்தை, அரச உத்தியோகத்தர், விவசாயி, மீனவர் என ஏராளம் பேர் கடலிலே மாண்டனர்.

ஆனாலும் மறுபடி மறுபடி பயணம் நடக்கும். மரணத்தின் வழியே பயணிப்பதைத் தவிர வேறு கதியில்லை. அது வாழ்வதற்காகச் சாகத்துணிய வேண்டியிருந்த காலமல்லவா!

ஆனையிறவில் புலிகளால் சுற்றி வளைத்து வைக்கப்பட்டிருந்த படையினரை மீட்பதற்காக 1991 இல் ஆனையிறவு மற்றும் வெற்றிலைக்கேணி, இயக்கச்சி உள்ளடங்கலான சமரைப் படையினர் தொடங்கினர். இதை எதிர்த்துப் புலிகள் முதலாவது மரபு வழிச் சமரை ஆகாய கடல் வெளிச் சமர் என்று பெயரிட்டு நடத்தினர். ஆனால், அதில் வெற்றி கிட்டவில்லை. விளைவு யாழ்ப்பாணக் குடாவுக்கும் பிற இடங்களுக்குமான பாதை மூடப்பட்டது. அதற்குப் பிறகே யாழ்ப்பாணத்துக்கும் அதற்கு வெளியே செல்வதற்குமான பாதை கிளாலியில் திறக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தை ஐரோப்பியர் முற்றுகையிட்ட போதும் கிளாலிக் கடலின் வழியேதான் திசைவீரசிங்கன் என்ற யாழ்ப்பாணத்துத் தமிழ்ப்பிரதானி தப்பிச் சென்றதாக வரலாற்றுக் கதைகள் உண்டு. இதைவிட, கோடைகாலங்களில் கடனீரேரியிலுள்ள மேடுகளின் வழியாக புலோப்பளை யிலிருந்தும் அல்லிப்பளையிலிருந்தும் பூநகரிக்கு போய் விவசாயம் செய்து வந்திருக்கிறார்கள். அங்கேயிருந்து மாடுகளைக் கூட சாய்த்து வந்திருக்கிறார்கள். கிளாலிக் கடல் பெரிய சமுத்திரமல்ல. கடல்வழிப்பயணத்துக்கு அது வியப்பளிக்கக் கூடிய ஒன்றுமல்ல. ஆனால், அந்த யுத்தகாலத்தில் அந்தச் சின்னஞ்சிறிய கடனீரேரி கொலைக் களமாக மாறியதால் அது அப்படி வியப்பாகியது. மற்றும்படி அந்தச் சின்னஞ்சிறிய கடலில் மீன்பிடித்தார்கள். அதற்காக ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய துறையும் கிளாலிக் கடற்கரையில் இருந்தது. சிறிய படகுகளும் தோணிகளும் அங்குமிங்குமாக மிதக்கும்.

சதுப்புக் கடற்கரை நீளத்துக்கும் உவர்ப்புற்களும் சிறு பற்றைகளும் கண்ணாக்காடுகளும் இருந்தன. சதுப்புக் கரையைக் கடந்து ஊருக்குள் நுழைந்தால் தென்னந் தோப்புகள். ஆயிரக்கணக்கான தென்னைகளின் நடுவே அங்குமிங்குமாக வீடுகள், தேவாலயங்கள், பென்னாம்பெரிய ஆலமரங்கள், கோவில்கள்... ஊரை வகுத்தும் பிரித்தும் செல்லும் சிறிய தெருக்கள். ஒரு தெரு முகமாலையிலிருந்து கிளாலிக்கு வரும். இன்னொன்று எழுதுமட்டுவாளிலிருந்து வரும். மற்றொன்று சாவகச்சேரி நகரிலிருந்து கச்சாய், கெற்பெலிக்கு ஊடாக வந்து கிளாலியை ஊடறுத்து அல்லிப்பளை, அறத்தி அம்மன்கோவிலடியால் போய், கறுக்காய், குறிஞ்சாத்தீவு ஆனையிறவில் சேரும். ஆனால், இந்தப் பாதையில் அறத்தி அம்மன்கோவிலுக்கு அப்பால் பெரிய அளவில் சனப்புழக்கமிருந்ததில்லை. யாராவது வேட்டைக்குப் போகும் ஆட்கள் இதில் போனால் உண்டு. அல்லது களவாகக் காட்டு மரம் கடத்துவோர் இந்தப் பாதையைப் பயன்படுத்துவார்கள்.

இந்தப் பாதையில் வரும் கறுக்காய் என்ற இடத்தில் மரமுந்திரிகைக் காடுண்டு. சித்திரை வைகாசி மாதங்களில் வரும் பருவகாலத்தில் அங்கே நாங்கள் சாக்குப் பைகளில் முந்திரியம் விதைகளைப் பொறுக்குவோம். தாத்தாவுக்குக் கறுக்காயில் இருந்த **250** ஏக்கரில் **100** ஏக்கரை எடுத்துத்தான் குறிஞ்சாத்தீவு உப்பளத்தை உருவாக்கினார்கள் என்று பெரிய மாமி சொல்லக் கேட்டிருக்கிறேன். கறுக்காயில் மிஞ்சியிருந்த நிலத்தில் மரமுந்திரிகைப்போகம் தள்ளி, பனம்விதைகளை ஏற்றுவோம். பனம் விதைகளை ஏற்றுவதற்காகவே இரண்டு மாட்டு வண்டிகள் ஐந்து ஆறு நாட்கள் பல நடை நடக்கும். நானும் சின்னண்ணாவும் வண்டி பழகியது அந்த வெளிகளில்தான். எந்தக் குழப்படி விடும் மாடுகளையும் அந்த வெளியில் மடக்கிப் பிடிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1993** இல் யாழ்ப்பாணம் மீதான படையெடுப்பை "யாழ்தேவி" என்ற பேரில் இந்தப் பாதையின் வழியாகவே ஆனையிறவில் இருந்த படையினர் தொடங்கினார்கள். குறிஞ்சாத்தீவு உப்பளம் தாண்டி, எங்களுடைய முந்திரிகைக் காடிருந்த கறுக்காய்த் தோப்புகளைக் கடந்து, பேராலை வெளியை ஊடறுத்து, அறத்தி அம்மன்கோவிலடியை நோக்கி நகர்ந்த படைகளை மறித்து புலிகளின் சமர் நடந்தது. அந்தச் சமரில்தான் புலிகளின் புகழ்பூத்த தளபதியாக இருந்த கேணல் பால்ராஜ் காலில் காயமடைந்தார்.

வந்த படையினரை புலிகள் எப்படியோ திருப்பி விட்டார்கள். அந்த "யாழ்தேவி" திரும்பியதால், கிளாலிப் படகுப் பயணம் நடந்தது. இல்லையென்றால், கிளாலிப்பாதையும் இல்லை. படகுப் பயணமும் இல்லை. இந்தக் கதையும் இல்லை.

**1995** ஒக்ரோபரில் யாழ்ப்பாணத்தை விட்டு பெரிய அளவில் சனங்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்தனர். அவ்வளவு சனமும் இந்தக் கடல் வழியாகத்தான் தங்கள் கண்டத்தைக் கடந்தது. பிறகு **1996** இல் "ஒப்பிரேஷன் றிவிரச" வினால் மீதியாக இருந்த சனங்களிலும் பெரும்பாலானவர்கள் இந்த வழியாகவே வன்னிக்குச் சென்றார்கள். அந்த நாட்களில் கிளாலியில் ஹெலிகொப்ரர்களும் குண்டு வீச்சு விமானங்களும் பெருந் தாண்டவமாடின.

கடைசியாக **1996** ஏப்ரல் **19** ஆம் திகதியுடன் கிளாலிப் பாதையும் மூடுண்டது. பிறகு யாழ்ப்பாணம் வேறாகவே துண்டிக்கப்பட்டது. அன்று கைவிடப்பட்ட படகுகளும் வத்தைகளும் நீண்டகாலமாகக் கடற்கரையிலேயே கிடந்து மக்கின.

கிளாலியில் பிறகு படைகளைத் தவிர வேறெவரும் இருக்க வில்லை. கிளாலித்துறையில் கடற்படை முகாமிட்டது. தேவாலயங்களில் சிலந்திவலை பின்னியது. கோவில்கள் பொங்கலை மறந்தன. காயோடு நின்ற தென்னைகள் தறித்து வீழ்த்தப்பட்டன. கடலுக்குப் போக வரவும் யாருமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவில்லை. 2000 இல் குடாரப்பில் புலிகள் தரையிறங் கினார்கள். ஏறக்குறைய ஒரு மாதத்தைக் கடந்த கடுமையான யுத்தத்திற்குப் பிறகு, ஆனையிறவுப் பாதை திறந்தது. ஆனால் கிளாலி வெட்ட வெளியாகியது. கிளாலி முழுதாகப் படையினர் வசமாகியது. மீன்பிடி இறங்கு துறையை பெரிய கடற்படைத்தளமாக்கினார்கள். யுத்தப் பிசாசுக்குத் தென்னந்தோப்புகள் தீனி. கடலோரம் நின்ற கண்ணாப் பற்றைகளும் சதுப்புப் புற்களும் கூட "பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை" யில் அழிக்கப் பட்டன.

இத்தாவில் யுத்தத்தில் எழுதுமட்டுவாள்வரையில் பின் வாங்கியிருந்த படையினர் பிறகு, அங்கிருந்து முன்னேறி, முகமாலையில் நிலைகொண்டனர். முன்னரங்கு கிளாலி தொடக்கம் நாகர்கோவில் வரையில் நீண்டது. கண்ணிவெடிகளையும் மிதிவெடிகளையும் இரண்டு தரப்பு களும் மாறி மாறி விதைத்தன. காப்பரண்களாகவும் பதுங்ககழிகளாகவும் மாறின காடுகளும் தென்னந் தோப்பு களும் வளவுகளும் சதுப்புக் கடற்கரையும். மிகப் பெரிய சூனியப்பிரதேசம் உருவானது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாகச் சனங்கள் வாழ்ந்து வந்த ஒரு பிரதேசத்தில் தலைகீழ்மாற்றங்கள் நடந்தன.

ஊரில் சனங்கள் இருந்தால் எதையாவது ஆக்கிக் கொண்டேயிருப்பார்கள். தென்னைகளை நடுவர். வீடுகளைக் கட்டுவர். பயிர்களை நாட்டுவர். கடலில் மீன்பிடிக்கப்போவர். முற்றங்களையும் வீதிகளையும் பெருக்குவர். கடைகளையும் சந்தைகளையும் இயக்குவர். பள்ளிகள் இயங்கும். கோவில்களில் விளக்கேறும். இப்படி ஊர் வளர்ந்து கொண்டே போகும். இதற்கு மாறாகச் சனங்களில்லாத ஊர்களில் துவக்குகள் எல்லாவற்றையும் அழித்துக் கொண்டேயிருந்தன.

2011 வரையில் கிளாலியில் சனங்களில்லை. பூசையுமில்லைத் தேவாரமுமில்லை என்ற நிலையில் கடவுளரும் கைவிடப் பட்டிருந்தனர். முள்முடியை ஊரே சூடியிருந்தது. 2011 இல் ஒரு மாலை நேரம், பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரகுமாரோடு சனங்கள் கிளாலிக்குப் போன போது, அங்கே, வியாகூல மாதா தேவாலயத்தில் மாதாவிடம் மண்டியிட்டழுதனர். ஓ... என்று கதறினர். குப்பையும் கூளமுமாக இருந்த மாதாவின் திருவடியைக் கைகளால் துப்புரவாக்கி சின்னஞ்சிறிய மெழுகுவர்த்திகளை ஏற்றினர். தங்கள் ஊரை அவர்கள் காடாகக் கண்டு வெந்தனர். எதையும் அறியாத மாதிரி, எதற்கும் தாங்கள் பொறுப்பில்லை என்ற மாதிரி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர் படையினர்.

அங்கே இருந்த வீடுகளில்லை. தென்னந்தோப்புகளில்லை. வளவுகளில் வேலிகளில்லை. பள்ளிக்கூடமில்லை. தேவாலயங்களில் கூரையில்லை. தோட்டங்களும் பயிரு மில்லை. மொத்தத்தில் ஊரே இல்லை. ஆனாலும் அங்கே வரவேணும் என்று சனங்கள் கதறினார்கள். பிடிவாதமாக அதையே சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால், மிதி வெடி அபாயமிருப்பதால் மீள்குடியேறுவது உடனடிச் சாத்திய மில்லை என்றார் படை அதிகாரி ஒருவர். ஊரை இழந்த வலி அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. என்ன செய்வது, காலம் பல்லிழித்துக் கொண்டு பலருடைய சப்பாத்துகளின் கீழே கிடக்கிறது. அவர்களுடைய சொந்த ஊருக்கு வரமுடியாத காரணங்கள் தடையரண்களாக வளர்ந்திருக் கின்றன. ஆனாலும் காத்திருப்பதைத் தவிர வேறுவழியில்லை. வந்தவர்களிற் சிலர் அங்கேயிருந்த வீரபத்திரர் கோவிலுக்குப் போய்க்கண்ணீர் விட்டார்கள். சிலர் தூரத்தே நின்று யாகப்பர் தேவாலயத்தைத் தொழுதனர். சிலர் எட்டி நின்று கடற்கரையை ஏக்கத்துடன் பார்த்தனர். சிலர் காடும் புதருமாக இருந்த தங்களின் வளவுகளைக் கண்டு கண்கலங்கினர். சிலர் தங்களுடைய வீடுகளைத் தேடினார்கள். கிளாலியிலிருந்த ஆறு வேதக்கோயில்களும் கைவிடப் பட்டேயிருந்தன. வீரபத்திரரும், ஐயன்கோயிலும் காடாகியி ருந்தன.

பிறகு எல்லோரும் வந்த வழியே திரும்பினார்கள். ஆனால் எவரும் மகிழ்ச்சியோடு திரும்பவில்லை. பின்னர், **2011.10.17** ஆம் திகதி கிளாலியில் மீள் குடியேற்றம் நடந்தது. "நடுத் தெருவில், மரங்களின் கீழ் வைத்துதான் நாங்கள் உங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்கிறோம்" என்றார் கிளாலியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் அங்கே வந்திருந்த மீள்குடியேற்ற அதிகாரிகளிடமும் துக்கத்தோடு.

இப்பொழுது அங்கே ஊரில் அரைவாசிக்கும் அதிகமான குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளன. பலர் மீண்டும் புதிதாக வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். பாடசாலையும் கூட்டுறவுக் கடையும் முன்பள்ளியும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன. காணிக்கை மாதா தேவாலயம் புதிதாகப் புனரமைக்கப் பட்டுள்ளது. வீரபத்திரர் கோவிலில் பொங்கல் நடக்கிறது. ஊரில் கடைகளும் தெருக்களும் மீண்டும் மெல்ல மெல்ல முளைத்துள்ளன. மின்கம்பங்கள் தெரு நீளம் நடப்பட்டுள்ளன. ஆனால், இன்னும் கிளாலி செழிக்கவில்லை. மெல்ல மெல்லத் துளிர் விடுகிறது. நாளை கிளாலி மீண்டும் உயிர்பெற்றுச் சிரிக்கலாம். வரலாறு என்பதும் வாழ்க்கை என்பதும் அப்படித்தான். எதிர்நிலைகளைக் கடப்பதும் வெல்வதுமாக இருப்பதே. என்பதால் அங்கே மீண்டும் மனிதர்கள் தங்கள் வாழ்வைக் கட்டியெழுப்புவார்கள்.

எல்லாம் சரி, கிளாலியின் இறங்குதுறையாக உள்ள அந்த மீன்பிடித்துறையும் இப்பொழது பனரமைக்கப்படுகிறது. இப்போது மீனவர்கள் துறையைக் கடந்து, தூர நடந்து, கண்டல் காடுகளின் நடுவிருந்தே கடலுக்குப் போகிறார்கள். ஆனால், தொழிற்பாடுதான் இன்னும் கனியவில்லை என்று சொல்கிறார்கள். தென்னந்தோப்புகளுக்குப் பதிலாக இப் போதுதான் தென்னம்பிள்ளைகள் நடப்படுகின்றன. இந்தத் தென்னைகள் வளர்ந்து, தோப்பாகிக் காய்க்கும் போதுதான் கிளாலி இனிப்பாகும். அதுவரையில் கோடையே.

கனியாத காலத்தில் இப்படித்தான் வாழ்க்கை உள்ளது.

2012-டிசம்பர்

00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியின் தாய்வீடுகள்

## கைவிட்டுச் சென்ற ஒரு காலம்

## 01

**வ**ன்னிப் போர் அதிகம் பாதித்தது, பூர்வீக வன்னியர்களையே. இப்பொழுது அவர்களுடைய காட்டுக்கு அவர்கள் போக முடியாது. போர் முடிந்த பிறகும் கூட. அதனால், வேட்டையும் இல்லை. தேனெடுப்பும் இல்லை. வயலில் உள்ள காவற் கொட்டிலுக்குத் தடிவெட்டவும் முடியாது. வேட்டைக்குப் போகாமல், காட்டு விலங்குகளின் இறைச்சியைச் சாப்பிடாமல் வன்னியர்கள் நிம்மதியாகத் தூங்க மாட்டார்கள், அவர்களுடைய வயிற்றில் பசி ஆறாது.

அதை விட முக்கியமானது, வன்னியர்களுக்கு தேனெடுப்பு. அது அவர்களுடைய தொழில்களில் ஒன்று. அவர்களுடைய கலை, பொழுது போக்கு, கொண்டாட்டம் எல்லாம். ஆனால், இப்பொழுதோ அவர்கள் தேனைப்பற்றிச் சிந்திக்க முடியாது. சிந்தித்தால் தேன்குளவிக்குப் பதிலாக வேறு “குளவிகள்” கொட்டி விடக்கூடும்.

ஆனால் தேனின் ருசியறிந்த நாக்குகள் சும்மாயிருக்குமா? மனங்கொண்ட மட்டும் திட்டித்தீர்க்கின்றன எல்லா “மகாராஜா” க்களையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப்போல வன்னியர்களுக்கு இன்னொரு சமாச்சாரமும் உண்டு. விதவிதமான ருசியோடிருக்கும் காட்டுப்பழங்கள்.

பருவத்துக்குப் பருவம் என்று அவர்களுக்கு எப்போதும் காடுகள் கொடுக்கிற பரிசு அது.

பாலை, வீரை, துவரை, கரும்பை, ஈஞ்சு, சுரவுனை, நறுவிலி.... என்று எல்லாப் பழங்களும் காட்டில் வேண்டிய அளவுக்கு பழுத்திருக்கின்றன. முரலிப் பழங்கள் தீண்டுவாரில்லாமல் அப்படியே பழுத்துக் கொட்டுகின்றன. ஆனால், தெரு வோரத்தைத் தவிர்த்து எல்லாக் காட்டுக்கும் விரும்பிய மாதிரி எந்த வன்னியரும் போகமுடியாது. முன்பு காட்டில் விளையாடியவர்கள், இப்பொழுது காட்டைத் தீண்ட முடியாது. காட்டைத் தொலைவில்தான் பார்த்து ஏங்குகி றார்கள். முன்னர் வன்னியர்களுக்குக் காடு சொந்தம். இப்பொழுது அது படையினரின் பிடியில். என்பதால் இந்தப் பழங்களுக்கெல்லாம் பெரும் "பிரிகேட்கள்" காவலிருக் கின்றன. ஆயிரக்கணக்கான படையினரின் ரோந்துப் பணி வேறு. உள்ளே இராணுவ நகரம் என்றும் சொல்லப்படுகிறது. யாரும் போய்ப்பார்க்க முடியாது. காடுறைந்த பயங்கரம் அது.

காடில்லாத வன்னியர்கள் என்றைக்கும் சரித்திரத்தில் இருந்தது கிடையாது. காட்டு வாசமில்லாமல் அவர்களால் வாழவே முடியாது. இப்போது காட்டைப் பார்த்து, காட்டில் பழுத்திருக்கும் பழங்களைப் பார்த்து, மரங்களில் அடை நிறைந்து வழியும் தேனைப் பார்த்து, குரலெழுப்பி அழைக்கும் காட்டு விலங்குகளின் அழைப்பைக் கேட்டுக் கொண்டு.... வீடுகளுக்குள் படுத்திருக்கிறார்கள். இல்லை, வீடுகளுக்குள் கிடந்து அவிகிறார்கள். கூடவே அவர்களுடைய மனமும் கிடந்து வேகிறது.

போகட்டும், வன்னியர்கள் காட்டுக்குப் போகாமல், வாழப் பழகிக் கொள்ளட்டும். நெல் வாசமில்லாமல் வாழ் வதைப் போல, மாட்டு மொச்சை இல்லாமல் வாழ்வதைப் போல, அகதி மணத்தோடு வாழ்வதைப்போல இதுவும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைதான். இது மதிப்பிறங்கி வரும் காலமும் உலகமும் அல்லவா! எனவே எதற்கும் அதன் உண்மையான மதிப்பில்லை இப்பொழுது.

இல்லையென்றால், வன்னியில் "மரை வத்தல்" இல்லாத வீடிருக்குமா? "மான் இறைச்சி" தின்னாத நாளிருக்குமா? மழைக்காலத்தில் உடும்பு வேட்டைக்குப் போகாத பொழுதிருக்குமா? தேனில்லாத வீடுகள் இருக்குமா? நெய்ப் போத்தல்களும் தயிர்ச்சட்டிகளும் வைத்திருக்காத அடுக் களைகள் இருக்குமா? காட்டுக்குப்போகாத வாழ்விருக்குமா?

போனது, எல்லாமே போனது. வாய்விட்டுப் புலம்பும் படியாய், வளவையே வெள்ளம் அடித்துப் போனதாய், எல்லாமே போய்விட்டன.

போர்ப் புயலடித்துப் போன வாழ்க்கையில் வன்னியர்களின் ஆயிரமாண்டுகால வாழ்க்கையும் அதன் அடையாளங்களும் அவர்களுடைய சேமிப்புகளும் அழிந்துபோய்விட்டன. ஏட்டுச் சுவடிகள் ஒன்றும் மிஞ்சவில்லை. நெல்லுக் கூடைகள், வண்டில் கொட்டகைகள், பலா மரங்கள் எல்லாம் போய் விட்டன. பட்டிமாடுகள், உழவன்கள் கூட மிஞ்ச வில்லை. அவர்களுடைய காடுகளைப் போல பசுமையும் என்றும் மாறாத இளமையும் அந்தக் காடுகளில் உள்ள பழங்களைப் போன்ற இனிமையும் நிறைந்த வாழ்க்கை.... எல்லாம் போய்விட்டன. காடு நிறைய நின்ற யானைகள் எங்கோ போய்த் தொலைந்ததைப்போல எல்லாமே போய்த்தான் விட்டன.

வானத்தையும் உயர்ந்த காட்டையும் விரிந்து தொடும் பெரும் வயல்களைப் போன்ற, சேனைகளைப் போன்ற அழகிய வாழ்க்கை சிதைந்து விட்டது. இப்போதங்கே எரிந்தும் சிதைந்தும் இடிந்தும் கிடக்கின்ற அகாலச் சூழலே மிஞ்சி யிருக்கிறது. ஒரு மாபெரும் சுடுகாட்டைப்போல விரிந்து கிடக்கும் வன்னியில் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றன "பச்சை வீடுகள்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயற் காவலுக்குக் காவற் கொட்டில்கள் இருப்பதுண்டு. இந்தச் சுடுகாட்டுக்கு எதற்கு காவற்கொட்டகைகள்?

சிதைந்த வாழ்க்கையில், அல்லது சிதைக்கப்பட்ட வாழ்க்கையில், வன்னியர்கள் இழந்த ஆயிரமாயிரம் அடையாளங்களில், தலைமுறைகளின் சேமிப்புகளில், முக்கியமானது அவர்களுடைய தாய் வீட்டுக் கலாசாரம். எந்த வாழ்க்கையிலும் எந்தப் பெரிய மாற்றங்களிலும் அவர்கள் தங்களுடைய அடையாளங்களில் ஒன்றாய் தங்களுடைய தாய்மனைகளைப் பேணிவந்தனர். ஆனால், இப்போது தாய்மனைகளே இல்லாமற் போய்விட்டன. இது அவர்களுடைய ஈரலைக் கரைய வைத்திருக்கும் சங்கதி. அவர்கள் கண்ணீர் விட்டுக் கதறும் கையறு நிலை. துயர் பெய்யும் வாழ்க்கை.

## 02

பூர்வீக வன்னியர்களின் "தாய்மனைகள்" என்பது அவர்களுடைய தலைமுறைகளோடு சம்மந்தப்பட்ட சமாச்சாரம். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு வீட்டிலும் இந்தத் தாய்மனைகள் இருக்கும். தாய்மனைகள் இல்லாமல் வன்னியர்களால் வாழ்ந்ததில்லை. கல்வீடுகள் கட்டப்பட்டு, வீடுகளின் அமைப்பு மாறினாலும் தாய்வீடுகளை வன்னியர்கள் முழுதாகக் கைவிட்டதில்லை. அது அவர்களுடைய அடையாளம். ஒரு குடும்பத்தின் அடையாளமாகவும் அந்தக் குடும்பத்தின் வாழ்க்கையாகவும் அதைப் பற்றிய மதிப்பாகவும் அந்தக் குடும்பத்தின் நினைவாகவும் தாய்மனைகள் உள்ளன.

அளம்பில், செம்மலை, குமுழமுனை, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், முள்ளியவளை, வற்றாப்பளை, தண்ணீரூற்று, குளவிசுட்டான், மதியாமடு, சேனைப்பிலவு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, முள்ளிவாய்க்கால், கேப்பாபிலவு, கொந்தக்காரன்குளம், பன்றிக்கெய்த குளம், ஓமந்தை போன்ற பூர்வீக வன்னிக் கிராமங்களில் இந்த வீடுகளின் பேணுகை அல்லது பண்பாடு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறைகள் பலவற்றின் கதைகளைத் தமக்குள் கொண்டிருக்கும் இந்தத் தாய்வீடுகள், அந்தத் தலைமுறைகளின் வாழ்க்கை நினைவுகளையும் தங்களுக்குள் வைத்திருக்கின்றன.

பெரும்பாலான தாய்வீடுகள் மண்ணாலானவை. களி மண்ணும் காட்டுத் தடியும் கொண்டு சுவர் எழுப்பப்பட்டவை. முதிரை மரத்தாலான கப்புகளும் காட்டுத்தடி என்ற காயாத்தடிகளில் கூரையும் கொண்டவை. அநேக வீடுகள் தென்னங்கிடுகு அல்லது பனை ஓலையால் வேயப்பட்டவை. படிகமாக்கப் பட்ட பனை ஓலையினால் வேயப்பட்டிருக்கும் தாய்வீடுகள் வன்னியின் தனிக்கலாசார முத்திரை. அரிதாக எங்கேனும் ஒன்றிரண்டு ஓட்டு வீடுகள் தலைகாட்டினாலும் அவையும் முதிரைக் கப்பினாலும் காயாத்தடியாலும் அமைந்தவையே.

சூழலில் உள்ள மூலவளங்களைக் கொண்டு, தங்கள் வாழ்க்கைக்கும் சக்திக்கும் ஏற்ற வகையில் அமைக்கப்பட்ட இந்த வீடுகள் வன்னியின் தனி அடையாளம். சூழல், சுவாத்தியம் எல்லாவற்றுக்கும் தோதானவை.

இந்த வீடுகளை முன்னோர் அமைத்தனர். இந்த வீடுகளில்தான் மூத்த தலைமுறைகள் வாழ்ந்தன. வளவில் அவர்களால் முதலில் அமைக்கப்பட்ட வீடுகள் இவை. இந்த வீடுகளில்தான் தங்களுடைய நெல்லையும் சேமிப்புகளையும் வாழ்க்கை யையும் அவர்கள் வைத்திருந்தார்கள். பிள்ளைப்பேறு, திருமணம், விருந்தாளிகளை வரவேற்றது, பொங்கல் பண்டிகை எனப் பலதும் தாய்வீடுகளோடுதான். நெல்லை அறுவடை செய்தாலும் புதிர் எடுத்தாலும் இந்த மனைக்கே கொண்டு வருவார்கள். தேன் எடுத்தாலும் நெய்யைச் சேகரித்தாலும், கோவிலோ குளமோ எங்கே போனாலும் அது தாய்மனையிலிருந்தே தொடங்கும். அல்லது தாய்மனைக்கே வந்து முடியும்.

தங்களுடைய பரம்பரைச் சேகரிப்புகளான மருத்துவம், சோதிடம், கைவினைப் பொருட்கள், மந்திரச் சுவடிகள், கூத்தோலைகள், ஏட்டுச்சுவடிகள் என்று எதை வைத்தாலும் எடுத்தாலும் அது தாய்மனையோடுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனும் நிலவும் நட்சத்திரங்களுமே ஒளியூட்டிய மனைகள். அகல் விளக்கின் ஒளியில் மனம் திறந்த மனைகள். நெய் மணம் நிரம்பியவை. தேனின் சுவையூறியவை.

பொதுவாகவே வன்னி வளவுகள் வித்தியாசமானவை. தலைவாசல், தாய்மனை, அடுப்படி, நெல்வைக்கும் களஞ்சிய வீடு (இதற்குள் நெல்லுக்கூடைகள் இருக்கும்), உழவு கலப்பை, வண்டி மாட்டுப் பொருட்கள் வைக்கும் கொட்டகை என எல்லாம் இருக்கும் ஒரு அமைப்பு அது. எல்லாமே தாய்மனையை ஆதாரமாகக் கொண்டேயிருக்கும். எந்தச் சூழலிலும் இந்தத் தாய்மனையை வன்னியர்கள் அழிப்பது குறைவு. தங்கள் கடந்த கால வாழ்க்கையின் பொக்கிசமாகவும் அதன் நினைவாகவும் இந்த வீடுகளை அழியவிடாமல் வைத்திருந்தனர். அவற்றை அப்படியே வைத்துக் கொண்டே புதிய வீட்டைக் கட்டுவார்கள். அது அவர்களால் கடந்து செல்ல முடியாத தொரு ஐதீகம்.

சிறியதாக இருந்தாலும் தாய்மனை என்பது வன்னியர்களுக்குப் பொக்கிசமே. அவர்களுடைய நினைவுகளில் அவை நீக்க மற்றவை. பகல், இரவு, பனி, மழை, வெயில், மாரி, கோடை என எல்லாவற்றிலும் ஒன்றாகக் கலந்தவை.

வன்னியிலிருந்து உயிர் தப்பி அகதி முகாம்களுக்குப் போன வன்னியர்கள், அங்கேயிருந்து மீண்டும் வன்னியில் தங்களுடைய ஊர்களுக்கு கொண்டு வந்து இறக்கப்பட்ட போது எரிந்தும் சிதைந்தும் அழிந்தும் இடிந்தும் போயிருந்த சுடுகாட்டையே பார்த்தனர்.

அங்கே அவர்களுக்கு எதுவுமே மிஞ்சியிருக்கவில்லை. அதிலும் அவர்களுடைய தாய்மனைகள்...?

எல்லாவற்றையும் யுத்தப் பேய் தின்று விட்டது.

அந்தத் தாய் மனைகளில் இருந்த செல்வங்கள்..? தலைமுறை தலைமுறையாகச் சேமித்த சொத்துகளும் சேகரங்களும்.....? அந்தத் தாய்மனைகள் தங்களுக்குள் வைத்திருந்த அடையாளங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் குதூகலங்களும்...?

ஒன்றுமேயில்லை. தீப்பிடித்தெரிந்தது வாழ்க்கை. கருகியது முக்காலமும்.

ஒவ்வொரு வன்னியரும் தலையிலடித்துக் கதறினார்கள். காடதிர, வானமதிர, அவர்களுடைய வயல் வெளிகள் அதிர, காடுகளில் பறந்து திரியும் பறவைகளதிர, காடுகளோடு கூடி வாழும் விலங்குகள் அதிரக் கதறினார்கள். அந்தக் கதறலில் வானத்தின் நட்சத்திரங்கள் கூட அதிர்ந்தன.

ஆனால், "யுத்தராசன்" மட்டும் அதிரவேயில்லை. அவன் கல்லாகிய மனதோடும் காடாகிய கண்ணோடும் இருந்தான் - கொலுவில்.

மனிதர்கள் பிராணிகளாகினர்.

பிராணிகளுக்கு என்ன தேவை என்பதாய்... சொல்கிறது புதிய வரலாறு.

பாலையாய் விரிந்து கிடக்கிறது வாழ்க்கை. நாய் தின்னாத வாழ்க்கை.

2010-ஒக்ரோபர்

*00*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'வெளிக்கிடடி விசுவமடுவுக்கு'

### காலடியில் நகர்ந்த காலமொன்றின் காட்சிகள்

யுத்தம் முடிந்து ஆண்டுகள் பல கடந்து விட்டன. விசுவமடுவிலுள்ள ஒரு சிறிய வீட்டையும் அதனோடிணைந்திருக்கும் பதுங்கு குழியையும் பார்ப்பதற்காக தினமும் ஏராளம் சனங்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். இதில் தென்பகுதியிலிருந்து வருவோரே அதிகம். இந்த வீடும் பதுங்கு குழியும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடையது என்பதே இந்தக் கவர்ச்சிக்குக் காரணம். தெற்கிலிருந்து இப்படிப் புலிகளின் கவர்ச்சி மையங்களை நோக்கி பலர் தினமும் வந்து கொண்டிருக்கிறார்கள். விடுமுறைக் காலங்கள் என்றால் வருவோரின் தொகை கூடிவிடும். அங்கிருந்து வருகின்ற சிங்கள மக்கள் மட்டுமல்ல, புலம் பெயர் நாடுகளிலிருந்து வருகின்ற தமிழர்களும் உள்ளூரில் உள்ள தங்களின் சொந்தக்காரர்களை அழைத்துக் கொண்டு "புலிகளின் கவர்ச்சி மையங்களை" நோக்கிச் சுற்றுலாப்போகிறார்கள். இதற்கென்று பழக்கப் பட்ட, இடங்கள் தெரிந்த வண்டிச் சாரதிகளும் வழிகாட்டிகளும் கூட முளைத்து விட்டனர். யுத்தகால எச்சங்கள் பலவுண்டு. போரினால் பாதிக்கப்பட்ட, உடல் உறுப்புகளை இழந்த மனிதர்கள், இடிந்தும் அழிந்தும்போன வீடுகள்.... ஆனால் அவற்றை யாரும் பார்க்க வருவதில்லை. பதிலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தை நடத்துவதற்குக் காரணமாக இருந்த இப்படியான கவர்ச்சி மையங்களை நோக்கியே சனங்கள் வருகிறார்கள்.

விசுவமடுவில் உள்ள அந்தச் சிறிய வீட்டில் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் விளையாடிய பொம்மைக் "கார்" ஒன்றும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. சனல் 4 தொலைக் காட்சியில் பாலச்சந்திரன் இறந்து கிடக்கும் காட்சிகள் வெளியாகிய பிறகு, இந்தக் காரின் மதிப்பும் சற்றுக் கூடித்தான் விட்டது. இந்த வீட்டுக்கு வருவோர் அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் அந்த விளையாட்டுக்காரை அதிசயத் துடன் பார்க்கிறார்கள். சிங்களவர்கள் என்றால், அவர்களுக்கு அதைப் பற்றிய விளக்கத்தையும் கதையையும் அங்கே நிற்கின்ற படைச்சிப்பாய் சொல்கிறார். தமிழர்கள் தங்களுக்குள் எதையோ கதைத்துக் கொள்கிறார்கள். அந்த அளவுக்கு அந்தக் கார் கூடிய கவர்ச்சியையோ மதிப்பையோ கொண்டுள்ளது. தற்போதைய நிலவரப்படி யாராவது புலம்பெயர் நாடுகளான மேற் குலகிலோ அல்லது தமிழ்நாட்டிலே இந்தக் காரை ஏலத்தில் விட்டால் பல கோடிகள் புரளும்.

ஆனால், அப்படி எந்த விபரீதமும் நிகழாமல் அந்த பொம்மைக் கார் "கைவிடப்பட்ட வரலாற்றின் காட்சிப் பொருளாக" ஒரு கற்குவியலின் மேல் வைக்கப்பட்டுள்ளது. பிரபாகரனின் வீடு என்று சொல்லப்படும் இரண்டு அறைகளைக் கொண்ட அந்தச் சிறிய வீட்டில் வேறு எந்தப் பொருட்களும் இல்லை. அருகிலிருக்கும் பதுங்கு குழியில் பிரபாகரன் அணிந்ததாகச் சொல்லப்படும் சீருடைகள் வைக்கப்பட்டுள்ளன. அவர் பயன்படுத்தியதாக மேசை, ஒரு சிறிய அலுமாரி, கதிரை ஒன்று, அவருக்கு விருப்பமானதாக கூறப்படும் சிறுத்தையின் மிகப் பெரிய (சிறுத்தையின் உருவத்தின் அளவு) பொம்மை ஒன்று என்பனவும் அந்தப் பதுங்குகுழியில் உண்டு. அதைப் பார்க்கும்போது மெய்யான சிறுத்தை ஒன்று படுத்திருப்பதைப் போலவே தோன்றும்.

அந்த வீட்டின் முற்றத்தில் ஒரு பெரிய கிணறு உண்டு. வழமையான கிணறுகளை விட மிகப் பெரியது. தென்னந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோப்பொன்றின் மத்தியிலிருக்கும் அந்த வீட்டின் முன்னே புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டிருந்த உலங்கு வானூர்தி ஒன்றின் சிதைந்த உதிரிப்பாகங்கள் சிலவும் உண்டு. புலிகள் இருந்தபோதே அந்த உலங்குவானூர்தியின் எச்சங்கள் அங்கே வைக்கப்பட்டிருந்தனவா? அல்லது புலிகள் இல்லாத காலத்தில் படையினர் அவற்றை வேறு எங்கோ இருந்து எடுத்து வந்து அங்கே பார்வையாளரின் கவனத்துக்காக வைத்துள்ளனரா என்று தெரியவில்லை.

இந்த வீடும் பதுங்கு குழியும் இருக்கும் இடத்துக்கு அண்மையில்தான் நாங்கள் **2009** ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இடம்பெயர்ந்து வந்து தங்கியிருந்தோம். அதற்கு முன்பு, அநேகமாக **2008** டிசெம்பரில் இடம்பெயர்ந்திருந்த எங்கள் நண்பர் ஒருவரின் குடும்பத்தைத் தேடி இந்தப் பகுதிக்கு வந்தோம். ஆட்கள் அதிகமில்லாத ஒரு பாதையின் வழியே வந்தபோது ஒரு சிறிய வெட்டைப்பகுதியில் குண்டு வீச்சு நடந்திருந்தது. அது ஒரு மாலை நேரம். மழை பெய்து ஈரம் காயாத நாள். செம்பாட்டு மண் இரண்டு பெருங்குவியலாக சிதறிக் கிடந்தது. இரண்டு பெரிய குழிகள். குண்டு வீச்சு விமானங்களின் இலக்கு முற்றாகவே தவறிவிட்டது. இலக்குத் தவறினால் மீண்டும் அந்த இலக்கைத் தாக்குவதற்கு மீண்டும் எந்த நேரத்திலும் விமானங்கள் வரலாம். நாங்கள் அந்த இடத்துக்கு வந்தபோது அங்கே மயான அமைதி. ஆள் நடமாட்டமே இல்லை. அந்த வாரத்திலோ அல்லது மிகக் கிட்டவான சில நாட்களின் முன்னரோதான் அந்தத் தாக்குதல் நடந்திருக்கக் கூடும். தொடர்ந்து அந்த வழியால் பயணிக்க லாம் போலத் தோன்றவில்லை. ஆனால், அந்தப் பக்கமாகச் சென்றால்தான் நாங்கள் தேடி வரும் நண்பரைப் பார்க்க முடியும் என்று வழிகேட்ட போது சொல்லியிருந்தார்கள். எனவே அங்கே நின்று அப்பால் செல்ல முடியுமா என்று ஆராய்ந்தோம்.

அதற்கிடையில் அந்தப் பகுதியிலிருந்து திடீரென ஒரு இயக்கப் போராளி வந்து, "ஏன் நிக்கிறீங்கள்? எங்க போறீங்கள்? எங்கையிருந்து வாறீங்கள்?" என்று பல கேள்விகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டார். நான் விவரத்தைச் சொன்னேன். அவர் எங்களைத் திரும்பிப் போகச் சொன்னார். அந்தப் பாதை தடுக்கப் பட்டுள்ளது என்றும் தொடர்ந்து நாங்கள் அங்கே நிற்பது பாதுகாப்பானதல்ல என்றும் கூறினார். எங்களுடைய உள்ளுணர்வும் அப்படியே சொன்னது. எனவே நாங்கள் மேற்கொண்டு அங்கே தாமதிக்கவில்லை. வந்த வழியே திரும்பிச் சென்றோம்.

வழியில் எங்களுக்கு அறிமுகமான அந்த ஊர்வாசி ஒருவர் எதிர்ப்பட்டார். நாங்கள் வரும் வழியைப் பார்த்த அவருக்கு ஆச்சரியம். "எங்கே இருந்து வாறீங்கள்? எங்க போறீங்கள்?" என்று கேட்டார்.

"நண்பர் ஒருவரின் குடும்பத்தைத் தேடுகிறம். கண்ணகை நகர்ப்பக்கமாகத்தான் அவர் இருக்கிறார்" என்றேன்.

"அதுக்கு ஏன் உதுக்குள்ளால் போனீங்கள்? அது இம்ரான் பாண்டியன் படையணியின்ரை பேஸ். (இந்தப் படையணியே பிரபாகரனின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் நெருக்கமாக இருந்தது). அங்கால ஒருதரும் போறேல்ல. போகவும் விட மாட்டடினம். அதை இலக்கு வைச்சுத்தான் கிட்டடியிலயும் குண்டு வீச்சு நடந்தது" என்றார் நண்பர்.

நிலைமையின் தாற்பரியம் விளங்கியது. வழியில் வந்த அந்த ஊர்வாசிக்கு நன்றியைச் சொல்லிவிட்டு வந்த வழியே திரும்பிச் சென்றோம்.

அடுத்த சில வாரங்களில் நாங்களும் அந்தப் பகுதிக்கு கண்ணகை நகருக்கு இடம்பெயர்ந்து வந்தோம். அதற்கு முன்னர் தருமபுரத்தில் ஒன்றரை மாதங்கள் தங்கியிருந்தோம். தருமபுரத்திலிருந்த போது "நிஸா" ப் புயல் அடித்தது. இரண்டு நாட்களாக இடைவிடாது கொட்டிக் கொண்டிருந்தது அடைமழை. நாங்களிருந்தது ஒரு தென்னந்தோப்பில். புயற்காலத்தில் எவன்தான் அப்படியொரு தென்னந்தோப்பில் குடியிருப்பான்? ஓயாத காற்று, விசர் பிடித்து உச்சத்தில் பேயாய் ஆடியது. தென்னைகள் படைகளை விட,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிகணைகளை விடப் பயங்காட்டிக் கொண்டிருந்தன. பெய்த மழையினால் கல்மடுக்குளம் நிரம்பி, வாய்க்கால்களால், தெருக்களால், வீடுகளின் முற்றத்தால் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. சனங்கள் ஆலாய்ப்பறந்தார்கள். எங்களின் தற்காலிகக் குடிசை மாளிகையும் மழையில் தெக்கித் தெம்பி விட்டது. கட்டில் மண்ணில் புதையுண்டதால் அதன் மேல் படுத்திருந்த மகன் வெள்ளத்துக்குள் வீழ்ந்தான். வீடும் வெள்ளத்தில் மூழ்கியது. நான் முடிந்த மட்டும் மண்ணினால் தடுத்துப் பார்த்தேன். முடியவில்லை. வெள்ளத்துக்குள் ஒருவாறு சமாளித்துக் கொண்டு நாட்களைக் கடத்திக் கொண்டிந்த போது, வந்தன எறிகணைகள்.

அது 2009 ஜனவரி 13 ஆம் திகதி. தைப்பொங்கலுக்கு முதல் நாள். நாங்கள் இருந்த அந்தத் தென்னந்தோப்புக்கு அண்மையில் - ஒரு 20 மீற்றர் தொலைவில் (மிக அருகில்) நான்கு எறிகணைகள் வந்து வெடித்தன. நான்கு பேர் அதில் கொல்லப்பட்டார்கள். வேறு சிலருக்குக் காயம். தாக்குதல் நடந்த இடத்திலிருந்து 200 மீற்றர் தொலைவில் மருத்துவ மனை இருந்தது. சடலங்களையும் காயப்பட்டவர்களையும் அங்கே எடுத்துப் போனார்கள். மருத்துவமனை இருந்தால் என்ன விட்டால் என்ன எறிகணை வரும் என்ற மாதிரியான ஒரு சேதியை அந்தத் தாக்குதல் மேலும் சொன்னது; உணர்த்தியது.

அது நண்பகல் கழியும் நேரம். சனங்கள் அலறியடித்துக் கொண்டு சிதறியோடினார்கள். நான் ஒரு மணித்தியாலயத் துக்குப் பிறகே என்னுடைய மனைவியைக்கண்டு பிடித்தேன். வாய்க்காலுக்கு எதிர்ப் பக்கமாக இன்னொரு வளவில் நின்று கொண்டு, "இஞ்சயிருந்து வெளிக்கிடுவம். இனிமேல் நிக்கேலாது. இனியென்ன வெல்லாம் நடக்கப்போகுதோ.." என்று புலம்பினாள்.

அன்று மாலையே அங்கிருந்து வெளியேறி கண்ணகை நகருக்குச் சென்றோம். கண்ணகை நகரில் இருந்தவர்களில் அநேகரை எங்களுக்குத் தெரியும். எப்படியாவது ஒரு வீடு அல்லது குறைந்த பட்சம் ஒதுங்கிக் கொள்வதற்கு சிறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பாடு அல்லது வசதிகள் ஏதாவது கிடைக்கும் என நம்பினேன். ஆனால், நாங்கள் போனபோது, அங்கே வளவுகள், வீடுகள் எல்லாமே நிரம்பி விட்டன. அந்தளவுக்கு நாலா திசையிலிருந்தும் ஏராளம் சனங்கள் வந்து குவிந்திருந்தார்கள். என்றாலும் எங்களுக்கும் இடம் கிடைத்தது. அதில் நாங்கள் தனியாக ஒரு சிறிய வீட்டினை அமைத்தோம். மழை பெய்து கொண்டிருந்தது. அந்தச் சிறிய வீட்டில் ஒரே ஒரு அறை. சமையல், படுக்கை, பொருட்களை வைப்பது, விருந்தினரை வரவேற்பது... இப்படி எல்லாமே அதற்குள்தான்.

வேலை ஒன்றும் கிடையாது. வெளியே போவதென்றால் பொருட்களை வாங்குவதற்கும் சொந்த பந்தங்களைத் தேடிப்பார்ப்பதற்கும் மட்டும்தான். கண்ணகை நகரில் இயக்கத்தினால் ஆட்சேர்க்கவும் முடியவில்லை. அவர்கள் கடவுளுக்கே தண்ணி காட்டிக் கொண்டிருந்தார்கள். ஒரு பயல் பிடிபடவில்லை. அதனால் ஆட்பிடி தொடர்பான பதற்றம் பெரிய அளவில் அங்கில்லை.

சனங்கள் தொடர்ந்து வந்தபடியே இருந்தனர். வந்தவர்களில் பலர் வேறு இடங்களுக்கும் சென்று கொண்டிருந்தார்கள். நாங்களும் அங்கிருப்பது நல்லதா அல்லது அங்கிருந்து வெளியேறிச் செல்வதா என்று குழம்பிக் கொண்டிருந்தோம். படைகள் முன்னகர்ந்து வந்தபடியே இருந்தன. தாக்குதல் உக்கிரமடைந்திருந்தது.

"விசுவமடுவிலிருந்தும் வெளிக்கிடுவதா?" என்று உள் மனம் கேட்டது. ஒரு காலத்தில் (அநேகமாக அது 1970 கள் 80 கள் என நினைக்கிறேன்) "வெளிக்கிடடி விசுவமடுவுக்கு" என்றொரு நாடகம் மிகப் பிரபலமாக இருந்தது. விசுவமடு என்ற வளமான புதிய விவசாயக் குடியேற்றத்திற்கு யாழ்ப் பாணத்திலிருந்து சனங்களை அழைத்துப் போகும் நோக்கத்தோடு தயாரிக்கப்பட்டிருந்த நாடகம் அது. பிறகு நாடகத்தையும் விடச் செழிப்பாகவும் பிரபலமாகவும் மாறியிருந்தது விசுவமடு. விசுவமடுவுக்கென்றே அச்சுவேலி, நெல்லியடி, பருத்தித்துறை, மூளாய், காரைநகர், குறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுவான் போன்ற இடங்களிலிருந்து பஸ்சும் தட்டிவான் களும் ஓடின. வாழைக்குலையும் செத்தல் மிளகாய்ச் சாக்குகளுமாக தட்டிவான்கள் சந்தைகளை நோக்கிப் பறந்தன. விசுவமடுவிலிருந்து கொழும்புக்கே லொறிகள் ஓடியது முண்டு. வெங்காயம், செத்தல் மிளகாய், வாழைக்குலை என பலதையும் வாங்குவதற்காக தென்பகுதியிலிருந்து சிங்கள வர்கள் நேரிலே வந்தார்கள். ஆயிரக்கணக்கான மாடுகள் பெருகி, லொறிக்கணக்காக யாழ்ப்பாணத்துக்கு எருப் போனது. இப்பிடி எல்லாம் இருந்தால் ஊர் செழிப்பாகத் தானே இருக்கும்.

இயக்கங்களின் காலத்தில் விசுவமடுவில்தான் அதிகமான இயக்கபெடியள் சாப்பிடும் நல்ல சாப்பாட்டுக்கடை இருந்தது. "வாணி விலாஸ்" என்று. இராணுவ முகாமுக்குத் தண்ணிகாட்டி ஆனையிறவுக்குப் பின்பக்கமாக உள்ள கடற்களப்பைக் கடந்து சுண்டிக்குளம் பகுதியால் வந்து விசுவமடுவில் ஏறினால், வாணி விலாஸ்தான் வரவேற்கும். நல்ல பசுப்பால் அல்லது பசுப்பால் ரீ தருவார்கள். பெரிய கப்பல் வாழைப்பழங்கள் மிக மலிவாகக் கிடைக்கும்.

புலிகளின் காலத்திலும் விசுவமடு செழிப்பாகத்தானிருந்தது. நல்லதொரு நூல்நிலையத்தை புலிகள் அங்கே வைத்திருந் தார்கள். சாரதி பயிற்சிக் கல்லூரி, பெரிய விவசாயப் பண் ணைகள், தமிழீழப் போக்குவரத்துக் கழகத்தின் தலைமைப் பணிமனை, லொறி (பாரவூர்தி) களின் தலைமை யகம், வணிக மையங்கள், புலிகளின் சர்வதேச செயலகத்தின் மையம் எனப் பலவும் விசுவமடுவில்தான் இருந்தன. அந்த நாட்களில் சற்றுப் பெரிய திரையில் அமைக்கப்பட்டிருந்த தியேட்டர் ஒன்றும் கூட அங்கேதானிருந்தது. அதில் அநேகமாக எம்.ஜி. ஆரின் படங்களே ஓடும். இதெல்லாம் பழைய கதைகள் அல்ல. முன்னெப்போதோ நடந்தவையும் அல்ல. 1997, 98 தொடக்கம் 2009 வரையில் நடந்தவை. விசுவமடுவில் ஒரு துயிலு மில்லமும் இருந்தது. அதில் ஜெயசிக்குறு சமரில் பலியாகிய போராளிகளே அதிகமாக இடப்பட்டிருந்தார்கள். மட்டக் களப்பு, அம்பாறையைச் சேர்ந்தவர்களே அதிகம். மாவீரர்நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதியில் மட்டக் களப்பிலிருந்தும் அம்பாறையி லிருந்தும் ஆயிரக்காணக்கான தாய்மாரும் தந்தையரும் வந்து கண்ணீர் மல்கக் கசிந்துரு குவார்கள்.

இன்று எல்லாமே மாறி விட்டன. இப்போதும் யாரோ சொல்லக் கூடும், "விசுவமடு யண்ட லாஸ்திவென்ட" ("வெளிக் கிடடி விசுவமடுவுக்கு") என. ஆனால் அது விசுவமடுவில் வாழ்வதற்கோ விவசாயம் செய்வதற்கோ அல்ல. பிரபாகரனின் பதுங்குகுழியையும் அவர் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் அந்தச் சிறிய வீட்டையும் பார்ப்பதற்காகவே.

2012-நவம்பர்

*00*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளை

## கொம்படி அம்மன் தனித்திருக்கிறாள்

அது நாங்கள் இயக்கத்திலிருந்த காலம். இயக்கமென்றால் இன்று அநேகருக்குப் புலிகளை மட்டும்தான் தெரியும். அன்று 1980 களின் முற்பாதியில் 32 இயக்கங்கள் இருந்தன. எல்லா இயக்கங்களும் கொள்கைகளில் கோட்பாடுகளில் வேறுபட்டிருந்தாலும் சில விசயங்களில் ஒரேமாதிரியாக இருந்தன. தலைமறைவு வாழ்க்கையில், படையினருக்குத் தண்ணிகாட்டிவிட்டு கள்ளப்பாதைகளால் செல்வதில், கிராமங்களில் சனங்களின் வீடுகளில் தின்று குடித்து உறவாடுவதில் என இந்த மாதிரியான விசயங்களில் ஏறக்குறைய எல்லா இயக்கங்களும் ஒத்திருந்தன. ஒதுக்குப் புறக்கிராமங்கள்தான் இதற்குத் தோது. கண்டாவளையும் இதற்குத் தோதாக இருந்தது.

ஆனையிறவு முகாமைக் கடக்க வேண்டும் என்றால் அதற்கு வடக்கே உள்ள இயக்கச்சியிலிருந்து கிழக்கே நகர்ந்து, பிறகு அங்கிருந்து ஆனையிறவுக்குக் கிழக்கேயுள்ள வண்ணாங்குளம் கொம்படி வழியாக கண்டாவளைக்கு வரவேணும். அல்லது கண்டாவளையிலிருந்து கொம்படி வழியாக வண்ணாங்குளம் சென்று இயக்கச்சியைச் சேர வேணும். இந்தப் பாதையையே 1980 களிலிருந்து இயக்கங்கள் பயன்படுத்தின. மழைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் படகுப் பயணம். இந்தக் கடனீரேரியில் தண்ணீர் வற்றும் வரை கால்நடை. இது அநேகமாக பெப்ரவரியிலிருந்து மே வரையிலிருக்கும். வைகாசியில் வீசுகின்ற சோளகக் காற்றோடு தண்ணீர் வற்ற, பிறகு ட்ரக்ரர்கள் தரவையில் ஓடும். அந்த நாட்களில் இந்தக் கொம்படி வெட்டையைக் கடக்க முற்பட்ட இயக்க ட்ரக்ரர்களைப் படையினரின் ஹெலி கொப்ரர் கள் கலைத்துச் சுட்டன. ஹெலிக்குத் தப்ப வேணுமென்றால் இரவுப் பயணம்தான் தோது. மற்றும்படி படையினர் ரோந்து வர முடியாது. அப்படியிருந்தும் டென்ஸில் கொப்பேகடுவ கிளிநொச்சியில் தளபதியாக இருந்தபோது ஒரு தடவை கண்டாவளைக்கு மாறு வேசத்தில் தட்டிவானில் ரோந்து வந்தார். எதிர்பாராத ரோந்து என்ற படியால் அதில் அவர் தப்பிச் சென்றார் என்றனர் சனங்கள். மற்றும்படி அந்த வெட்டை வெளியான பிரதேசத்துக்கு ரோந்து வர முடியாது. அப்படி வந்து பெடியளின் தாக்குதல் களில் வியூகங்களில் சிக்கினால், இலகுவில் தப்பிச் செல்லவும் முடியாது. மட்டுமல்ல வயல்களை ஊடறுத்துச் செல்லும் தனிப் பாதைகளை விட்டு கவசவாகனங்களை இறக்கினால் அவற்றை இலகுவில் மீட்கவும் முடியாது. சேறும் சகதியுமான நிலம் புதைத்து விடும். எனவே படையினரைப் பற்றிய அச்சங்களின்றி இயக்கங்கள் சாவகாசமாகக் கண்டா வளையில் தங்கி, உண்டு, உறங்கி, உலாவிக் கொண்டாடிச் சென்றன. நாங்களும் கண்டாவளையில் உண்டு, உறங்கி, உறவாடிச் சென்றோம்.

இயக்கச்சிக்கும் கண்டாவளைக்குமிடையில் இருந்த கொம்படி அம்மன்கோவில் அந்த நாட்களில் வெகு பிரசித்தம். அங்கே நடக்கும் பொங்கலுக்காகவோ பூசைக்காகவோ அல்ல. தலைமறைவாகச் செல்லும் போராளிகள் பலரும் அந்தக் கோவிலில் கணப்பொழுது தங்கி இளைப்பாறுவர். அப்படி இளைப்பாறுவோரில் சிலர் கோவிலின் சுவரில் தங்கள் பெயரை எழுதுவதுண்டு. சிலர் தங்களுக்கு நெருக்கமான தோழர்களின் பெயரையும் எழுதுவர். பின்னாளில் தராகி சிவராம் என்று அறியப்பட்ட SR இன் பெயரும் கொம்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன்கோவிலில் எழுதப்பட்டிருந்தது.

கொம்படி வழியாக இயக்கங்கள் பயணம் செய்ய முன்பு, கள்ள மரம் ஏற்றுவோர் என்ற சட்டவிரோதமாக மரங்களை வெட்டிக் கடத்துவோர் இந்தப் பாதையைப் பயன்படுத்தினார்கள். படையினர் வருவதற்கு எவ்வளவு கடினமோ அதை விடக்கடினமானது பொலிசார் இந்தப் பாதையில் வந்து மரம் கடத்துவோரைப் பிடிப்பதென்பது. அப்படித்தான் கடுமையான சிரமத்தை எடுத்து ஒரு தடவை மரங்கடத்துவோரைப் பிடிக்க வந்தபோது, மரங்கடத்திகள் ட்ரக்ரரிலிருந்த மரங்களில் இரண்டை பாதையின் குறுக்கே தள்ளி விட்டுச் சென்றனர். மரங்கடத்திகளைக் கலைத்துக் கொண்டு வந்த பொலிசாரின் ஜீப் தொடர்ந்து செல்லமுடியாமல் அந்த மரங்களோடு மல்லுக்கட்ட மரங்கடத்திகள் தப்பிச்சென்று விட்டார்கள்.

மரங்கடத்திகளுக்கு முன்னர் இந்த வழியாக விவசாயிகள் கால்நடையாக கண்டாவளைக்கும் இயக்கச்சிக்கும், வடமராட்சி கிழக்கிற்கும் போய்வந்தார்கள். அது ஒரு குறுக்கு வழி. பிரதான தெருவழியாகச் சுற்றிப் பிரயாணம் செய்வதை விட களப்புக்குள்ளால் நடந்தால் விரைவாகச் சென்று விடலாம். கண்டாவளையிலிருந்து இந்தக் குறுக்குப் பாதையினால் அரிசி போகும். வடமராட்சி கிழக்கிலிருந்து கண்டாவளைக்குக் கருவாடு எடுத்து வரப்படும். கோடை காலத்தில் இந்தப் பாதையின் வழியாக கண்டாவளைக்கும் பச்சிலைப்பள்ளிக்கும் மாடுகளைச் சாய்த்துப் போவார்கள்.

1970 களில் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் சுய பொருளாதாரக் கொள்கையின் நிமிர்த்தமாக தற்காலிகமாக அரிசிக்குப் பெரும் தட்டப்பாடு ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தில் இது உச்சம். கண்டாவளையில் அரிசி ஓரளவுக்கு தாராளமாக இருந்தபோதும் அந்த அரிசியை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லத் தடை. ஆனையிறவில் இந்தத்தடையைக் கண்காணிக்கும் சோதனைச் சாவடியை அமைத்திருந்தார்கள். ஆனால், கொம்படி, இயக்கச்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி கிழக்கு வழியாக கண்டாவளையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அரிசி போய்க்கொண்டிருந்தது. என்னதான் தடைகளிருந்தாலும் சனங்கள் தங்களுக்குரிய வழிகளை எப்படியோ கண்டு பிடித்து விடுவார்கள்.

ஆனையிறவுக்குக் கிழக்கே சுண்டிக்குளம் வங்காள விரிகுடாவரை விரிந்திருக்கும் பரவைக் கடல்நீரேரியின் தென்கிழக்கோரத்திலிருந்த கண்டாவளை ஒரு தொல்குடியிருப்பு. வவுனியாவுக்கு அப்பாலுள்ள மதவாச்சிக்கு அண்மையிலிருந்து ஓடி வரும் கனகராயன் ஆற்றின் கழிமுகத்தில் சேரும் வண்டல் மண்ணையும் தண்ணீரையும் பயன்படுத்தி விவசாயம் செய்து உருவான குடியிருப்பு. ஆகவே முழுமையான ஒரு விவசாயப் பிரதேசமாக அமைந்த கிராமம். ஆனால், பெரிய நிலப்பரப்பு. மாரிகாலத்தில் அங்கேயுள்ள பச்சை விரிப்பு வானம் தொடும் நெடுநிலம். சின்னச் சின்னக் குறிச்சிகளாக மடுக்கரை, கலவெட்டித்திடல், நாகேந்திரபுரம், புளியம்பொக்கணை, சந்தையடி.... இப்பிடி ஏராளம் குறிச்சிகள். எல்லாம் வயலால் சூழப்பட்டவை.

விவசாயிகள் தங்களின் கடுமையான உழைப்பினால் உருவாக்கிய வயல்களும் பாதைகளும் சின்னஞ்சிறிய வீடுகளுமே அங்கிருந்தன. இடையிடையே அபூர்வமாக ஒன்றிரண்டு ஓட்டு வீடுகள். பச்சைப்பரப்பில் சிவப்புக் கூரை திலகம்போலத் தோன்றும்.

வயல்களை ஊடறுத்துச் செல்லும் பாதைகள். ஓரங்களில் புல் செழித்து அணையிட்டிருக்கும். ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டுக்குப் போவதென்றால் பெரும்பாலும் வயல் வரம்புதான் பாதை. ஒரு குறிச்சியிலிருந்து இன்னொரு குறிச்சிக்குப் போகவும் வயல் வரம்புகளே இணைப்பு. ஏராளம் பனைகள் தாராளமாக நின்றன. அரசாங்கம் அமைத்துக் கொடுத்தது ஒரேயொரு தெருவும் கிராம ஆஸ்பத்திரியும் சின்னஞ்சிறிய சந்தையும்தான். நாளொன்றுக்கு மூன்று வேளை வந்து போகும் ஒரு இ.போ.ச பஸ்வண்டி. அந்த வண்டியின் இலக்கம் 23 ஸ்ரீ 2245. கீச்சிட்டான் கனகரத்தினம் என்பவரே அந்த வண்டிக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதி. நடத்துனர் ராமச்சந்திரன். இது 1970 கள், 80 களில். மின்சாரம் கிடையாது. மாட்டு வண்டிகளும் உழவு இயந்திரங்களுமே அநேகமான வீடுகளில் நின்றன.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவிலில் பங்குனி உத்தரத்தில் நடக்கும் பொங்கல் பெரிய கொண்டாட்ட நிகழ்வு. இரணைமடுவிலிருந்து பாயும் தண்ணீரில் இரண்டு போக நெற்செய்கை. வயலில் நெல்லைத் தின்பதற்காக வரும் காட்டுப் பன்றிகளை வேட்டையாடுவார்கள். இல்லை யென்றால், கிழக்கே கல்லாற்றுப் பக்கமுள்ள காட்டில் முயல், மான் வேட்டை.

இரணைமடுக்குளத்தைக் கட்டுவதற்கு முன், கிளிநொச்சியில் குடியிருப்பே இல்லை. பரந்தனில் கூட அவ்வளவு பெரிய குடியிருப்பும் சனப்புழக்கமுமில்லை. ஆனையிறவில்தான் பெரிய சந்தை இருந்தது. கரைச்சி ஆட்கள் என்று அழைக்கப் பட்ட கண்டாவளைச் சனங்கள், ஆனையிறவிலுள்ள சந்தைக்கே போய் வந்தார்கள். சந்தைக்கென வண்டில் கட்டிப் போய்வருவதே ஒரு வழமை.

கனகராயன் ஆற்றின் கழிமுகத்தில் சேரும் வண்டல் மண்ணைப் பண்படுத்தி, கண்டாவளையில் நெல்லை விளைவித்தனர். கண்டாவளையில் விளைந்த பெரிய கறுப்பன், மொட்டைக் கறுப்பன் நெல்லரிசி யாழ்ப்பாணத்தில் புகழடைந்தது. கண்டாவளைக்கு வண்டில் கட்டி வந்தும் வாகனம் பிடித்து வந்தும் நெல்லைக் கட்டிப்போனார்கள் மில் முதலாளிமார். கண்டாவளைக்கென்று ஓடிய பஸ், ஆட்களை ஏற்றியதை விட அரிசிமூடைகளை ஏற்றியதே அதிகம். "மின்சாரம் இல்லாத ஊர் என்றாலும் மில்லிருக்கும் ஊர் எங்களுடையது" என்று சொன்னார்கள், ஊர்வாசிகள். "நெல்லும் மில்லும் எங்களூர்ச் சொத்துகள்" என்றும் கூறினார்கள். "கண்டாவளையில் திருமணத்துக்குப் பெண்ணெடுப்பதென்றால், அங்கே நெல் விதைப்பார்கள். அல்லது மில்லை வைத்திருப்பார்கள். அந்தக் குடும்பத்தில் திருமணம் செய்தால் சோற்றுக்குப் பஞ்சமில்லை" என்றும் சொல்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லை விளைவித்தார்கள் சிலர். வேறு சிலரோ அங்கேயி ருந்து மண்ணை எடுத்து விற்றுப் பிழைத்தார்கள். லோட் கணக்கில் லொறிகளிலும் ட்ரக்ரர்களிலும் ஒரு சீசனுக்கு மண்ணை ஏற்றுவார்கள். கனகராயன் ஆற்று வெள்ளம் வடியும்போது வெளிக்கண்டல் பாலத்தை அண்மித்த பகுதியில் இந்த மண்ணேற்றம் நடக்கும். கண்டாவளை மண்ணுக்கு யாழ்ப்பாணத்தில் பெரும் கிராக்கி. இன்னும்தான் அந்தக் கிராக்கி குறையவில்லை. ஆற்றுமணலை யாழ்ப் பாணத்தவர்கள் இன்றும் கண்டாவளை மணல் என்றே சொல்கிறார்கள். ஆண்டு தோறும் தொன்கணக்கில் பெருகிக் கிடக்கும் இந்த மணல் கண்டாவளைக்குக் கிடைத்த இன்னொரு இயற்கை வளமே.

ஆனால், கனகராயன் ஆற்றை வழிமறித்து இரணைமடுக் குளத்தைக் கட்டியதன் பிறகு மெல்ல மெல்லக் கண்டாவளை காயத் தொடங்கியது. உண்மையில் கண்டாவளையின் வளம் என்பது ஒரு நூற்றாண்டுக்கு முந்தியதே. அதாவது இரணை மடுக்குளம் கட்டப்படுவதற்கு முந்திய காலத்திலேயே அது வளமாக இருந்தது. அப்பொழுதே கண்டாவளை புகழடைந்தி ருந்தது. அப்பொழுது அங்கேதான் சனங்கள் குடியேறி னார்கள். அங்கேதான் சனங்கள் பெருகினார்கள். சனங்கள் பெருகப்பெருக, தொழிலும் வளமும் பெருகியது. ஊர்கள் பெருகின. கோயிலும் குளமும் முளைத்தன. பட்டிகளில் மாடும் பாலும் பெருகியது. மாட்டு வாசனை தொழுவத்தில் மட்டுமல்ல, ஆற்றிலும் காட்டிலும் வயலிலும் பெருகியது.

ஆனால், கனகராயன் ஆற்றை வழிமறித்து, இரணைமடுக் குளத்தைக் கட்டியதுடன் கண்டாவளையின் வண்டல் மண் வழியிலே மறிக்கப்பட்டது. வந்த தண்ணீரில் நாலில் மூன்று பங்குக்கும் மேல் வட்டக்கச்சிக்கும் கிளிநொச்சி, உருத்திர புரத்துக்கும் பகிரப்பட்டது. கிளிநொச்சி உருவாகி வளர்ந்தது. வட்டக்கச்சியும் உருத்திரபுரமும் புதிய இடங்களாகின. கிளிநொச்சியும் அதனைச் சுற்றிய இடங்களும் பெரிய கோடுகளாக, கண்டாவளை சிறிய கோடாகி மெலியத் தொடங்கியது. ஒரு மூத்த குடியிருப்பு பாழடையத் தொடங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியது. புராதன கிராமத்தின் அடையாளத்திலிருந்து அது மீள முடியாமற் தத்தளித்தது. இன்றைக்கும் இதுதான் நிலை. இப்பொழுது கண்டாவளை விவசாயிகள் தண்ணீருக்காகக் காத்திருக்கிறார்கள். வெளிக்கண்டல் சந்திக்கு அண்மையிலுள்ள நிலப்பரப்பு காய்ந்து கிடக்கிறது. சில இடங்களில் உவர் ஏறுகிறது.

கண்டாவளைக்குப் போகும் ஒரேயொரு பிரதான தெரு முழுதாகவே சிதைந்து விட்டது. பாலங்கள், நீர்மேவிகள் எல்லாம் அழிந்து விட்டன. யுத்தமும் பாதியைத் தின்று விட்டது. ஆனால், கண்டாவளைக்கு மின்சாரம் வருவதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. சாலையோர மரங்களுக்குப் பதிலாக மின்மரங்கள் நடப்படுகின்றன. கண்டாவளைக்குள் நுழைவதற்கு முன்னர், நுளைவாயிலைப்போலிருக்கும் வெளிக்கண்டல் சந்தியிலிருந்த ஓட்டுத் தொழிற்சாலை இல்லை. சில காலம் இதில் பனங்கட்டியை உற்பத்தி செய்தார்கள். இப்பொழுது அதுவும் இல்லை. ஆனால், அருகே பெரியதொரு படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு அருகில் கோடையில் வரண்டும் மாரியில் வெள்ளத்தில் மிதந்தும் இருக்கிற பிரதேச செயலகம்.

உள்ளே பல காணிகளில் புதரும் காடுமே நிறைந்திருக்கின்றன. கைவிடப்பட்டதோர் புலமாகி, புதர் மண்டிய பெரிய வளவுகளாகவும் மாறிவிட்டன. ஒரு காலம் கண்டாவளையை உயிரூட்டியவர்களிற் பலர் இப்போது அங்கில்லை. அவர்களிற் பலர் புலம் பெயர்ந்து போய்விட்டார்கள். சிலர் கொழும்பிலும் புத்தளத்திலும் வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் இருக்கிறார்கள். ஆனாலும் விவசாயம் நடக்கிறது.

கண்டாவளையில் நெல்லும் வயலும்தான் இருக்கு.

எங்கேயும் போகமுடியாதவர்கள், காய்ந்து கிடக்கும் கண்டாவளையில் தாங்களும் கிடந்து காய்கிறார்கள். வயலில் நெல் விளைவதைப்போல தங்கள் வாழ்வில் நல்லவையும் வல்லவையும் விளையாதா என்று எதிர்பார்த்தபடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தையடியில் மாலையில் நாலைந்து ஆட்கள் மட்டும் நிற்கிறார்கள். தங்கள் ஊரின் பழைய கதைகளைப் பேசியபடி. நாளைய வாழ்க்கை எப்படி அமையும் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனால், அவர்கள் இன்னும் வயலுக்குள்தான் நிற்கிறார்கள்.

கொம்படி அம்மன் தனித்திருக்கிறாள்.

வாழ்க்கையும் வரலாறும் என்றும் ஒரே மாதிரி இருப்பதில்லை.

2013 -டிசம்பர்

*00*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கராயன்

## இன்னும் இருக்கின்றனவா வலியன் யானைகள்?

"அலியன் யானை" என்றொரு கதையை இருபது ஆண்டுகளுக்கு முன்னர் எழுதியிருந்தார் ச.முருகானந்தன். வன்னேரிக்குளத்தில் மருத்துவராக வேலை பார்த்த காலத்தில் இந்தக் கதையை எழுதினார் ச.மு. படித்து முடித்த கையோடு 26 வயதில் வன்னேரிக்குளம் மருத்துவமனைக்கு முதல் நியமனம் கிடைத்து வந்தவர் ச.மு. காட்டையே அறிந்திராத ஒரு யாழ்ப்பாண வாசியைக் கொண்டு வந்து யானைக்காட்டின் மத்தியிலிருக்கும் சிற்றூர் ஒன்றில் "வேலை பார்" என்று சொன்னால் யார்தான் ஏற்பார்கள்? சரியான போக்குவரத்துக் கிடையாது. பகலிலேயே தெருவில் தலைக்கறுப்பைக் காண்பது அபூர்வம். மின்சாரம் இல்லை. ஊரில் ஏதோ சாட்டுக்கு இருக்க வேணும் என்ற மாதிரி இருந்த ஒரேயொரு கடை. அதுவும் சின்னஞ்சிறிய ஓலைக்கொட்டகையில். ச.மு வந்த பஸ்ஸிலேயே திரும்பிக் கிளம்பினார். "வேலையாவது மண்ணாங்கட்டியாவது. இதைவிட ஊருக்குப் போய் வெங்காயம் வைத்துப் பிழைக்கலாம்" என்று நினைத்தார்.

ஊருக்குத்திரும்பியவர் "எதற்கும் ஒரு தடவை மாற்று இடமொன்றைக் கோரிப் பார்க்கலாம்" என்று அதிகாரியைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்கச் சென்றார். "வேண்டுமானால் இரண்டு ஆண்டுகள் மட்டும் அங்கே வேலை செய். பிறகு திரும்பி வருவதைப் பற்றி யோசிக்கலாம்" என்று திருப்பி அனுப்பினார் அதிகாரி. என்றாலும் மனம் தயங்கியது. வேறு வழியின்றி மறுபடி திரும்பி வன்னேரிக்குளத்துக்கு வந்த ச.மு வுக்கு மெல்ல மெல்ல ஊர் பிடித்துக் கொண்டது. ஆட்கள் பிடித்தனர். அப்படியே அங்கேயே இருந்து விட்டார். பிறகு வன்னேரிக்குளத்தில் அவர் சொன்னதே வேதம். இறுதியாக ச.மு, தன்னுடைய ஓய்வை அங்கிருந்தே எடுத்தார். அவ்வளவு காலம் அங்கே சேவை. அங்கேதான் வாழ்க்கை. வன்னேரிக்குளத்தோடு ஒன்றி ஒன்றாகி விட்டார் ச.மு.

ச.மு வை விட வேறு யார்தான் அங்கே விரும்பி வருவார்கள்?

அந்த நாட்களில் அக்கராயன், ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம் போன்ற இடங்களில் காட்டு யானைகளே ராஜாங்கம் நடத்தின. வயலில், வாழைத்தோட்டங்களில், தென்னந் தோப்புகளில் ஏன் தெருக்களிலும்கூட. பொழுது கவிந்தால் இந்தப் பகுதிகளில் பயணம் செய்வதற்கு அஞ்சுவார்கள். வழியில் பெரும்பாலும் எங்காவது யானைக்கூட்டத்தில்தான் முட்டிக்கொள்ள வேண்டும். சிலவேளைகளில் தனியனில். மழைக்காலத்தில் இது நிச்சயம். தெருவில் வேறு சனப்புழக்கம் இல்லை. ஒன்றிரண்டு பஸ்களைத் தவிர வேறு வண்டிகள் கிடையாது. வயல் விதைப்புக்காலத்திலும் சூடடிப்பு வேளை யிலும் ட்ரக்ரர்கள் நடமாடும். அவ்வளவுதான்.

இதற்குள்தான் இந்தப் பகுதிகளில் இருந்தவர்களின் வாழ்க்கை ஓடியது. தொழில்களும் ஓடின. வேறு என்னதான் செய்ய முடியும்? நிலவுக்கு ஒளிந்து பரதேசம் போக முடியுமா? வேளாண்மைக் காலத்தில் காட்டெருமை, பன்றி, யானை என்று எல்லாவற்றுக்கும் காவல். காவல் இல்லையென்றால் எல்லாமே காலி. காடுகளின் மத்தியில் ஊரை வைத்திருந்தால், பயிர்களை விளைத்தால் இதை விட வேறு எப்படியிருக்கும்?

எப்படித்தான் திட்டமிட்டார்களோ தெரியாது, ஓங்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடைத்து வளர்ந்திருந்த காட்டின் மத்தியில் சனங்களைக் கொண்டு வந்து குடியேற்றுவதற்கு?

1950களில் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கும் கிளிநொச்சிக் கும் ஏராளம் குடும்பங்கள் குடியேற வந்தன. யாழ்ப்பாணத்தில் நிலமும் தொழிலும் போதாது. நிலம் இருந்தவர்களுக்கும் அதன் அளவு போதாது. பஞ்சம் பிழைக்க வேண்டுமானால் பரதேசம் போகலாம் என்று கிளம்பி வன்னிக்கும் கிளிநொச்சிக் கும் வந்தார்கள். வன்னி என்றால், அது காடின்றி வேறென்ன?

காட்டாறுகளை வழிமறித்துக் கட்டப்பட்ட குளங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டே வன்னியிலும் கிளிநொச்சியிலும் குடியேற்றங்கள் நடந்தன. கொக்காவில் - அக்கராயன் காட்டை அறுத்துப் பாய்ந்து பூநகரிக்கடலில் சேரும் நிலையாற்றையும் வலம்பற்று ஆற்றையும் மறித்து அக்கராயன் குளத்தைக் கட்டினார்கள். நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் நவரத்தினம், ஆறுமுகம் ஆகியோரைக் கொண்ட குழுவினர் இதில் ஈடுபட்டனர் என்று தகவல்.

தென்னியன் குளத்தின் கீழிருந்து ஓடிவரும் மண்டைக் கண்ணாற்றை வழிமறித்து வன்னேரியில் ஒரு குளம்.

இதற்குப்பிறகு அக்கராயனில் குடியேற்றத்திட்டங்கள் வந்தன. பிறகு ஸ்கந்தபுரத்தில். 2ஆம் உலகப்போர்க்காலத்தில் சிங்கப்பூரிலிருந்தும் மலேசியாவிலிருந்தும் நாடு திரும்பிய தமிழர்களுக்கு நட்ட ஈடாகவும் தொழில் துறையாகவும் மத்திய வகுப்புத்திட்டத்தின் கீழ் அக்கராயனில் காணிகளை வகுத்துக் கொடுத்தார்கள். ஒரு தலைக்கு 05 ஏக்கர் மேட்டு நிலமும் 10 ஏக்கர் வயற்காணியும். மொத்தம் 1500 ஏக்கரில் திட்டம். 75 சிங்கப்பூர் - மலேசிய வருகையாளர்கள். 25 பேர் வருமான வரி செலுத்துவோர். மொத்தமாக 100 தலைகள். இதற்கு நீர் அக்கராயன் குளத்திலிருந்து வலது கரையினால் பாய்ந்தது.

இப்படியெல்லாம் கிடைத்தும் பல பேர் அக்கராயனுக்கு வரவேயில்லை. யானை, நுளம்பு, பாம்பு என்று மனிதனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரோதியான அத்தனை பிராணிகளோடும் கூடி வாழ்வது அவ்வளவு சுலபமானதல்ல. போதாக்குறைக்கு பாதையோ பயணமோ வேறு ஒழுங்கில்லை. இந்தச் சீரில் யாரய்யா வந்து காட்டில் நாடமைப்பார்? வந்தவர்களும் கையில் இருந்த சேமிப்பையும் வந்த வருவாயையும் செலவழித்துக் களைத்தார்கள். ஆனாலும் மண்ணை நம்பினால் அது கைவிடுவதில்லை. காலம் செல்லச் செல்ல பயிர்கள் செழித்தன. பயிர்கள் செழிக்க வாழ்க்கையும் செழித்தது. வாழ்க்கை செழிக்க அங்கே ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைக்கு வெளியூரி லிருந்து பிரமுகர்களை அழைத்து வந்தார்கள் மலாயன் பென்சனியர்கள். அப்படி வந்தவருள் ஒருவர் தனிநாயகம் அடிகள். இதற்குக் காரணம் என்ன தெரியுமா? மலேசியன் பென்சனியர்கள் பலருக்கு ஒழுங்காகத் தமிழில் பேசத் தெரியாது. எனவே தங்களின் இந்தத் தெரியாத்தனத்தை மறைப்பதற்காக அவர்கள் தனிநாயகம் அடிகளை அழைத்து வந்தார்கள். எப்படியென்றால் தமிழ்ப்பற்றாளர் ஒருவரை அழைத்து இதைச் சாதித்தார்கள்.

இங்கே இன்னொன்றையும் சொல்ல வேண்டும். மத்திய வகுப்புத்திட்டத்தில் ஒரு பெண் - இவரும் மலேசியாவிலிருந்து வந்திருந்தவர்தான் - (கமலம்மா என்று பெயர்) தனியாகவே துணிச்சலுடன் பல விசயங்களைச் சாதித்தார். உழவு செய்வதில் இருந்து துவக்கெடுத்துச் சுடுவது வரையில் ஆள் படு விண்ணி. அதே காலத்தில் இந்தப் பகுதியில் இருந்த இன்னொருவர் "சுபாஸ்" சந்திரன். யாழ்பாணத்தில் உள்ள "சுபாஸ் ஹொட்டேல்" உரிமையாளர். பின்னாளில் இவர் பெரும் பிர பலஸ்தர். தொடக்கத்தில் (சிறுவயதில்) அக்கராயனில் கமம் செய்தவர்.

ஸ்கந்தபுரம் குடியேற்றத்திட்டத்தை உருவாக்கியவர்களில் முக்கியமானவர் அப்போது யாழ்ப்பாணத்தின் அரசாங்க அதிபராக இருந்த சிறிஸ்கந்தராஜா. அவருடைய பெயரிலேயே குடியேற்றத்திட்டத்தை உருவாக்கலாம் என்றார் காணி அதிகாரியாக இருந்தவர். சனங்களும் ஆமோதித்தார்கள். ஆனால், அவருடைய பெயரில் வில்லங்கமான ஒரு சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அது சிறி சட்டம் பற்றி பலரும் கொந்தளித்துக் கொண்டிருந்த காலம். எனவே அவருடைய பெயரின் முன்பகுதியிலிருந்த சிறி என்ற சொல்லை எடுத்து விட்டு "ஸ்கந்தபுரம்" என்று பெயர் வைத்தனர். அதுவே வழமையாயிற்று. ஆனால், வரலாறு ஒரு போதும் நேர்கோட்டில் பயணிப்பதில்லையல்லவா! புலிகளின் காலத்தில் (1997 -2008) வரையில் அவர்கள் ஸ்கந்தபுரத்தை "கந்தபுரம்" என்றே அழைத்தனர். பேரூந்துகளில் கூட "கந்தபுரம்" என்றே குறிப்பிடப்பட்டிருந்தது.

அக்கராயனில் பாய்ந்து கொண்டிருந்த காட்டாறுகளை வழிமறித்து இதற்கு முன்னும் பல குளங்களை முன்னோர் கட்டியிருக்கிறார்கள். அவற்றின் எச்சங்கள் இன்னும் அங்கும் இங்குமாகச் சிதைந்திருப்பதைக் காணலாம். அநேகமாக அது கறுப்புச் சிவப்பு சுடுமண் காலம் என்று சொல்லப்படுகிறது. கி.மு. கி. பி முன்பின்னான காலம் எனச் சொல்வோரும் உண்டு. இன்னும் இந்தக் கறுப்புச் சிவப்பு மண்சிதைவுகளை இந்தப் பகுதிகளில் காணலாம். குறிப்பாக அக்கராயன்- அம்பலப் பெருமாள் சந்தியிலிருந்து தெற்கே தென்னியன்குளம் செல்லும் வழியிலும் காட்டோரங்களிலும் ஆற்றுப்படுகை களிலும் இவை தாராளம். தென்னியன் என்பதே ஒரு தமிழ் மன்னன் என்று கூட ஐதீகம் உண்டு. மட்டுமல்ல, அம்பலப் பெருமாள், அக்கராயன் என அன்றைய தலைவர்கள் அல்லது அரசர்கள், வணிகர்கள் இருந்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.

அக்கராயன் குளமும் ஏற்கனவே சிதைந்த நிலையிலிருந்த குளத்தை ஆதாரமாக வைத்துக் கட்டப்பட்ட ஒன்றுதான். குளத்தின் தென்கரையில் இதைத் தெளிவாகப் பார்க்கலாம். அதிலும் குளம் வற்றும் கோடைகாலங்களில் இந்தப் புலப்பாடு இன்னும் துலக்கமாகும். பழைய குளத்தைப் புதுப்பித்துக் கட்டும்போது ஏராளமான மண்ணோடுகளையும் பழைய நாணயங்களையும் கண்டெடுத்திருக்கிறார்கள் அங்கு வேலைசெய்த பணியாளர்கள். பிறகு இதை அறிந்த தொல் சேகரிப்பாளர்கள் தாங்களும் சுயமாகத் தேடிப் பலவற்றைக் கண்டெடுத்துள்ளனர். இன்னும் மண்டைக்கண்ணாற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிநெடுகிலும் அதன் தீரங்களிலும் அங்கொன்று இங்கொன்று என இந்தச் சிதிலங்களைப் பொறுக்கலாம். நான்கூட அப்படிச் சில சிதிலங்களைப் பொறுக்கியிருக்கிறேன். இந்தப்பகுதிகளில் மேகநாதன், குணரத்தினம் ஆகிய இருவரும் இந்தத் தொல்பொருட்களைச் சேகரிப்பதில் ஆர்வமாக இருந்தார்கள். சில சந்தர்ப்பங்களில் மேகநாதனுடைய தொடர்பின் வழியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் கூட இந்தத் தொல்பொருட்களைச் சேகரிப்பதற்காக இங்கே வந்திருக்கிறார். சில சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழக மாணவர்களே வந்து இந்தப் பகுதிகளைப் பார்த்திருக்கிறார்கள். முக்கியமாக அக்கராயன்குளத்துக்கு வடக்கிலுள்ள - இன்று கோணாவில் என்று சொல்லப்படும் இடத்தின் கிழக்குப் - பகுதியில் உள்ள காட்டில் சிதைந்திருக்கும் இன்னொரு சிறிய குளத்தை அண்மித்துள்ள மேடொன்றில் புதைந்திருந்த தொல் சின்னத்தை. இங்கே செங்கல்லால் ஆன புராதன பதிகை ஒன்று உண்டு. அகழ்ந்தபோது தமிழ்ப்பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட மண்தகடுகள் காணப்பட்டன. கூடவே மண்ணாலான பானையின் உள்ளே வைக்கப்பட்ட உலோகத்திலான உருக்கள் மற்றும் சாம்பல். மேலும் சுடுமண் சிற்பங்களும். இதைவிட உலோகத்தாலும் கல்லாலும் ஆன சில புராதன நாணயங்களும். அணிகலனாக கழுத்துமாலையில் கோர்க்கப்படும் மணிமுத்துப் பரல்கள். இவையெல்லாம் அங்குமிங்குமாக இன்னும் மண்டைக்கண் ஆற்றின் தீரங்களில் சிதறிக்கிடக்கின்றன. வேட்டைக்காரர்களும் காட்டுக்குச் செல்வோரும் அவற்றைக் கண்டெடுத்திருக்கிறார்கள். என்றால், இங்கே பல நூற்றாண்டுகளாக மக்கள் வாழ்க்கை நீண்டிருக்கிறது. ஒரு நாகரீக நீட்சியை அவர்கள் தங்களோடு கொண்டிருக்கிறார்கள்.

இதைப்போல இங்குள்ள வேறு சில இடங்களிலும் தொல் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அக்கராயன் இரண்டாம் பகுதி வாய்க்கால் பகுதியை அண்மித்து பெ.கணேசன் வீட்டில் ஒரு தொகுதி மண்ணாலான யானைகளும் மனித உருக்களும் குழாய் வடிவிலான வேறு சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடுமண் பொருட்களும் மீட்கப்பட்டன. ஏறக்குறைய இரண்டடி உயரம் வரையான மண்யானைகள். நேர்த்தியான கைவண்ணங்களில். தென்னைமரத்துக்கு பசளை இடுவதற்காக அகழ்ந்தபோது இவை கிடைத்தன என்று சொல்கிறார் பெ. கணேசன். கணேசன் அக்கராயன் பிரதேசத்தின் முக்கியமான எழுத்தாளர். ஆசிரியர். இன்னொரு தொகுதித் தொல்சுவடுகள் கண்ணகை புரத்தில் நாகமுத்து என்ற விவசாயி ஒருவரினால் காணப்பட்டன. பிறகு அவற்றை அடையாளம் கண்டார் மேகநாதன். அங்கே மண்ணாலான சிற்பங்களும் ஒரு வகையான உலோகத்திலான கருவிகளும் கல்லாயுதங்களும் இருந்தன. ஆனாலும் அதிக ஈடுபாட்டோடு இந்தப் பகுதியில் வரலாற்றுச் சுவடுகளைத் தேடியவர் குணரத்தினமே. இதற்காக அவர் நடந்த தொலைவு வியப்பூட்டுவது. இந்தப் பகுதியில் இன்னொரு ஆச்சரியம், இரும்பை ஒத்த உலோகப் பொருள்போலக் காணப்படும் சிதிலங்கள். பரிசோதனைக்காக அவற்றை மூதாதையர்கள் ஆலைப்படுத்த முயற்சித்திருக்கலாம் என்பது தி.தவபாலனின் நம்பிக்கை. ஆனால் அதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. எல்லாவற்றையும் தொகுத்தும் முழுமைப்படுத்தியும் பார்ப்பதற்கான காலக்கனி யார் கையிலும் இன்னும் கிட்டவில்லை.

அக்கராயன் பகுதியில் இன்னொரு நவீன ஆச்சரியம், இங்கே ஜே.வி.பி என்ற தென்னிலங்கைக் கிளர்ச்சியாளருக்காக அமைக்கப்பட்டிருந்த சிறைக்கூடங்கள். இந்த நாளில் என்றால் இதைப் "புனர்வாழ்வு மையங்கள்" என்று சொல்லியிருப்பார்கள். இப்பொழுது அக்கராயன் மகா வித்தியாலயமாக ("காம்ப்"படி பள்ளிக்கூடம்) இயங்கிக்கொண்டிருக்கும் கட்டிடத்தொகுதியின் முந்திய வடிவமே இந்தச் சிறைக்கூடங்கள். **1971**இல் ஜே.வி.பியின் கிளர்ச்சி முறியடிக்கப்பட்டபொழுது சிறைப்பிடிக்கப்பட்ட வர்களை இங்கேகொண்டுவந்து அடைத்தது அரசு. சிறையிருந்த புதல்வர்களைத் தேடிவந்த பெற்றோர்கள் தங்கிச்செல்லவும் கண்காணிப்பு அதிகாரிகள் தங்கவும் அமைக்கப்பட்ட கட்டிடங்களே இன்றைய ஆசிரிய விடுதிகள். அப்பொழுது அமைக்கப்பட்ட கண்காணிப்பு வீதிகள் இன்னும் சிதைந்த நிலையில் இருப்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியோ ஒரு சிறைத் தொகுதி இப்படிக் கல்வித் தொகுதியாக மாறியிருப்பதில் மகிழ்ச்சியே.

கிளிநொச்சியின் பிற பகுதிகளுடன் ஒப்பிடும்போது அக்கரா யன் பிரதேசம் சற்று வரட்சி கூடிய ஒன்றே. பூநகரி, துணுக்காய், மன்னார்த் தொடர்ச்சியான மேற்குப் பக்கம் பொதுவாகவே வரட்சியான பகுதிதான். இந்தத் தொடர்ச்சியாகவே அக்கரா யனும் உள்ளது. ஒப்பீட்டளவில் ஏனைய பிரதேசங்களை விடச் சற்று செழிப்பான காடுகளையும் குளங்களையும் உடையது. ஆனாலும் கரைச்சியின் பிற பகுதிகளுடன் நோக்கினால் அக்கராயன் வெம்மையேந்தியே.

முறிப்பு, அக்கராயன், வன்னேரி என மூன்று பெரிய குளங்களும் மணியங்குளம், மணற்குளம் என வேறு சிறிய சில குளங்கள் இருந்தாலும் இந்தப் பிரதேச மேட்டு நிலங்கள் கடும் வரட்சியில் தவிப்பவை. குளங்களின் கீழே விரிந்து நெடுத்த வயற்படுக்கைகள் உள்ளன. ஆனால் அந்த அளவுக்கு மேட்டில் குடிநீரை எடுப்பதே சிரமம். ஆனாலும் இங்குள்ள வலியன்கள் இதைக் கடந்தும் தங்களை எப்படியோ விளைத்துக் கொண்டுதானிருக்கிறார்கள். முன்னர் இங்கிருந்த ஆதிக்குடிகள் ஆற்றின் படுகையோரங்களில் இருந்திருக்கிறார்கள். அந்தப் பகுதியெல்லாம் இன்று காடு. முன்னர் காடாக இருந்த பகுதி இன்று ஊர்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. எப்படியோ, இன்றைய ஊர் மடியில் வலது கரையிலும் இடது கரையிலுமாக தென்னையும் மாவும் வளர்ந்திருக்கின்றன. வீதிகள் இன்னும் அறுத்தோடிகளாக இருந்தாலும் சனங்கள் போய்க்கொண்டும் வந்து கொண்டுந்தானிருக்கிறார்கள். வயல்களில் பயிர் விளைகிறது. காடுகளில் இரகசியமாக வேட்டை நடக்கிறது. 10ஆம் நம்பர் 12ஆம் நம்பர் தோட்டாக்களைப் போடும் சொட்கண்கள் இருந்தபோது அதைக் கொண்டு போனவர்கள், பிறகு கட்டுத்துவக்கோடு வேட்டையாடி னார்கள். அதுவும் இல்லாமற்போனபின், வெங்காய வெடியிலும் பொறிவெடியிலும் வேட்டையாடு கிறார்கள். அதற்கும் வாய்க்காதவர்கள் பொறி வைக்கிறார்கள். அல்லது தடம் வைக்கிறார்கள். எப்படியோ இறைச்சி வேகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டிகளில்.

நான் அக்கராயனுக்கு முதன் முதலில் போயிருந்த பொழுது எனக்கு ஆச்சரியமாக இருந்தது அங்கே இருந்த கரும்புத் தோட்டம். ஏறக்குறைய 220 ஏக்கருக்கும் அதிகமான பரப்பில் கரும்பு விளைந்திருந்தது. நடுவே கரும்பு ஆலை. நாற்பது, ஐம்பதுபேர் வேலைசெய்தார்கள். செழித்திருந்த கரும்பை வெட்டி ஆலையில் இட்டு, அதைச் சாறாக்கி.... இதை யெல்லாம் செய்வதைப் பார்க்க வாயில் இனித்தது.

அந்த நாட்களில் எங்கள் வீட்டுக்கிணற்றடியில் இரண்டு அடி கரும்பு மட்டுமே நின்றது. தைப்பொங்கல், நவராத்திரி போன்ற பண்டிகைக்காலங்களில் எடுத்துக்கொள்வதற்காக என ஐயா அந்தக் கரும்பு அடிகளை நாட்டி வளர்த்தார். மற்றும்படி கரும்புத் தோட்டத்தை வேறெங்கும் கண்டதில்லை, அந்த வயதில். கரும்புத்தோட்டத்துக்குப் போயிருந்தபோது சர்க்கரைப்பாணி தந்தார்கள். பிறகு பள்ளிச் சுற்றுலாவில் அதை விளக்கமாகப் பார்த்தேன். ஏறக்குறைய அக்கராயனுக்கு ஒரு சிறப்படையாளத்தை ஒரு காலம் தந்தது அந்தக் கரும்பாலை. பின்னர் நாடு எப்படியெல்லாம் சீரழிந்ததோ அதைப்போல அந்தக் கரும்புத்தோட்டமும் சிதைந்து போயிற்று. இன்று அங்குள்ள காணிக்காக பெரும் போராட்டமே நடக்கிறது. அன்று இந்த ஆலைக்கு ஏழுபேர் சொந்தக்காரர்களாக இருந்திருக்கிறார்கள். இரண்டு பேர் சிங்களர். இருவர் முஸ்லிம்கள். மூவர் தமிழர்கள். மனோஜராக இருந்தார் கோபாலசிங்கம். பின்னாளில் இவரே கரும்புத் தோட்ட முதலாளி என அழைக்கப்பட்டார். கரும்புத் தோட்டத்தில் இறுதிவரையில் தன்னை நிறுத்திக் கொண்டிருந்த கோபாலசிங்கத்தை இறுதியாக 2009 மார்ச்சில் வலைஞர் மடத்தில் அகதியாகப் பார்த்தேன். வெறுங்கையோடும் கனக்கும் மனதோடும் கண்கள் பனிக்க நின்றார். அன்று அவர் இருந்த நிலையில் இன்று கரும்புத்தோட்டம் இருக்கிறது. இனிப்பும் இனிமையும் போயிற்று.

அக்கராயன், வன்னேரிப்பக்கத்தின் யானைகள் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கத்தில் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா! இந்தியன் ஆமிக்காலத்தில் (இந்திய அமைதிப்படை) தலைமறைவாகத் திரிவோருக்குப் பெரும் சவாலாக இருந்தன இந்த யானைகள். ஒரு தடவை முறிப்பில் விடுதலைப்புலிகளின் தளபதிகளில் ஒருவராக இருந்த லூக்காஸ் அம்மானின் குறூப்பை இந்தியன் ஆமி கலைத்தது. அது ஒரு பின்னேரப்பொழுது. அவர்கள் கோணாவிலுக்குள்ளால் இறங்கி அக்கராயன் கழிவாற்றாற் கடந்து, ஸ்கந்தபுரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே இந்தியன் ஆமியின் இன்னொரு ரோந்து அணி நின்றது. இதனால், லூக்காசின் அணி, ஸ்கந்தபுரத்தில் நிற்க முடியாமல் மணியங்குளத்திற்குள் இறங்கி எட்டாம் கட்டையில் நிமிர, அங்கே நின்றது யானைக்கூட்டம். கையில் துவக்கிருந்தாலும் அந்த நேரத்தில் யானையைச் சுடமுடியுமா? ஒரு புறம் வேடன்... மறுபுறம் நாகம்... தத்தளித்துப்போனார்கள். பிறகு எப்படியோ எல்லை கடந்தது புலிகளின் அணி.

யானைகளின் ஊர்வலம் ஏதோ நீண்ட காலத்துக்கு முன் என்றில்லை. 1990க்குப் பிறகும் இதுதான் நிலைமை. முறிப்புத் தொடக்கம் ஜெயபுரம் கிராஞ்சி வரை யானைகளின் ஆட்சியே இந்த வழியில்.

1995 இல் யாழ்ப்பாண இடப்பெயர்வுடன் வன்னிக்குப் பெருக்கெடுத்து வந்த சனம் அக்கராயனுக்கும் வரத்தொடங் கியது. பிறகு கிளிநொச்சி சத்ஜெய இடப்பெயர் வோடு (1996) அக்கராயன், ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம் எனச் சனங்கள் பெருகப் பெருக யானைகள் காடுகளுக்குள் அடங்கின. கிளிநொச்சி இடம்பெயர்வு அக்கராயன் வட்டகையை ஒரு சிறு நகராக்கியது. சந்தைகளும் கடைகளும் குடியிருப்புகளும் சுற்றயல்கள் எங்கும் பெருகி, ஸ்கந்தபுரம் ஒரு மையப்பட்டணம் போலாகியது. கிளிநொச்சியின் நிர்வாக மையமே அக்கராயன் ஸ்கந்தபுரம் பகுதியில் 1996-2002 வரை இயங்கியது. கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஸ்கந்தபுரம் மேற்கில் ஒரு கீற்றுக்கொட்டகையில் இருந்தது. அப் போதங்கே அரச அதிபராக இருந்தவர் உடுவை தில்லை நடராஜா. ஒரு அரச செயலகத்தை அனர்த்த முகாமைத்துவப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவை இயக்கு வதைப்போல இயக்க வேண்டிய நிலையில் இருந்தார் உடுவை. அவர் ஒரு எழுத்தாளராக இருந்தபோதும் நாங்கள் யாரும் அவருடன் இலக்கியம் பற்றி ஒரு வார்த்தை பேசியதில்லை. உடுவை இருந்தவரை அவர் உட்பட எல்லோருக்கும் கடுமையான வாழ்க்கை நெருக்கடிகள். காரணம், அப்போது தான் இடம்பெயர்ந்து வந்திருந்தோம். அந்த நிலையில் இருப்பதற்கு இடம் தேடுவது, தொழில் தேடுவது, குளிக்கவும் குடிக்கவும் தண்ணீர் தேடுவது என்று பொழுதுகள் கழிந்தன. சிலபோது இதற்கெல்லாம் பொழுதுகள் போதாது. இந்த நிலையில் எழுதுவதற்கும் இலக்கியம் பற்றிப் பேசுவதற்கும் எப்படி முடியும்?

அப்பொழுது வாய்க்கால்கள் முழுவதும் தீர்த்தக்கரை போலிருந்தன. எந்த நேரமும் வாய்காலில் கூட்டம் அலைமோதும். ஒரு வளவில் பத்துப் பதினைந்து குடும்பங்களின் குடியிருப்புகள் என்றால் கிணறுகள் தாங்குமா? இந்த மாதிரி அகதிகள் பெருகும்போது கழிப்பறைக்கும் தண்ணீருக்குமே பெரும்பிரச்சினை உண்டாகிறது. அக்கராயனில் இரண்டுக்குமாக அவலப்பட்டவர்கள் லட்சத்திற்கும் மேல்.

சனங்கள் நெரியும் அந்தச் செம்மண் தெருக்களில் திரிவதெல்லாம் அகதிகள் என்று சொல்ல முடியாது. இடம்பெயர்ந்திருந்தாலும் எப்படியோ மகிழ்ச்சியாகத் திரிந்தார்கள் பலரும். நெருக்கடிகள் இருந்தபோதும் சிறிய அளவிலேனும் வருமானம் கிடைத்தது. பொருட்களின் விலையும் அதிகமில்லை. விறகு வெட்டிகள், வேட்டைக் காரர்கள், விவசாயிகள், கூலியாட்கள் எல்லாம் ஓரளவுக்கு உழைக்கக் கூடிய ஒரு நிலையுள்ள சூழல் வாய்த்ததே ஆறுதல். இதற்குள்ளும் இலக்கியக் கூட்டங்கள் நடந்தன. புத்தக வெளியீடுகள் நிகழ்ந்தன. என்னுடைய முதலாவது புத்தகம் (ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல்) ஸ்கந்தபுரம் சந்தியில் அமைந்திருந்த செஞ்சிலுவைச் சங்கத்தின் கீற்றுக் கொட்டகையில் வெளியிடப்பட்டது. பிறகு அமரதாஸின் கவிதைகள் (இயல்பினை அவாவுதல்). அமரதாஸ் அந்த ஊரைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவரும் கூட. அவர் அங்கிருந்து உருவாகிய ஒரு முக்கியமான ஒளிப்படப் படைப்பாளியும். அக்கராயனில் இருந்தபோதே சு.மகேந்திரன் தன்னுடைய சிறுகதைகளின் தொகுதியையும் (காலவெளி) மொழிபெயர்ப்புக் கதைகளின் தொகுப்பையும் (தீ நிழல்) வெளியிட்டார். தாமரைச் செல்வியின் "ஒரு மழைக்கால இரவு" சிறுகதைத் தொகுதியும் அக்கராயனிலேயே வெளியிடப்பட்டது. பெ.கணேசன் அந்த ஊரில் படித்து எழுதத் தொடங்கிய ஒரு படைப்பாளி. ஒரு காலம் கணேசன் கிளிநொச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பலருடைய எழுத்தாக்கங் களைத் தொகுத்து "கதிரொளி" என ஒரு மலரை உருவாக்கியி ருக்கிறார்.

ஸ்கந்தபுரத்திலிருந்து உருவாகிய இன்னும் சில முக்கியமான கலைத்துறை ஆளுமைகள் பற்றியும் குறிப்பிட வேண்டும். ஒருவர் தற்பொழுது (2002-2013...) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகத்துறை விரிவுரையாளராக இருக்கும் ரதிதரன். ஸ்கந்தபுரத்திலிருந்த நாட்களில் ஒரு நாடக இயக்கத்தையே உருவாக்கி வைத்திருந்தார் அவர். விளைவாக சில ஆண்டுகள் அக்கராயன் மகா வித்தியாலயம் பல போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றிகளைப் பெற்று வந்தது. பின்தங்கிய பிரதேசமொன்றின் பாடசாலை இப்படித் தொடர்ந்து வெற்றிகளைப்பெறுவது பலருக்கும் அந்த நாட்களில் ஆச்சரியம். ரதிதரன் தலைமையிலான நாடகக் குழுவின் ஆற்றலுக்கு முக்கியமானது அவர்களிடையே இருந்த புதிதைத் தேடும் முனைப்பும் சமநிலைப்பட்ட நடத்தைகளும் ஊக்கமுமே. இதை (1996 -2000) அக்கராயனில் நான் இருந்த காலத்தில் நேரில் பார்த்திருக்கிறேன். இன்னொருவர் சக்திவேல், சமூக நாடகங்களை அளித்தவர்.

அக்கராயனில் நாங்கள் இருந்த காலத்தில், கிளிநொச்சி அழகியல் கலாமன்றம் பல நல்ல நாடகங்களைத் தந்து கொண்டிருந்தது. பெரும்பாலும் ஆசிரியர்கள் பங்கேற்ற நாடகங்கள். அது க.விஜயசேகரனின் மையத்தில் உருவாகிய நாடக இயக்கம். அந்த அழகியற் கலாமன்றத்தில்தான் நாங்கள் தேர்ந்த திரைப்படங்களைத் திரையிட்டோம். சத்யஜித் ரேயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதேர்பாஞ்சாலி, சாருலதா, மலையாளப் படங்களான பிறவி, சிதம்பரம், செம்மீன், அகிரா குரோஸாவின் சாமுராய் மற்றும் குறும்படங்கள், லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸின் கம்பெரலியா, போன்ற படங்கள். மட்டுமல்ல, ஸ்கந்தபுரத்தில் இரண்டு வாசகர் வட்டங்கள் கூட அன்று இயங்கியிருக்கின்றன. ஒன்று "காலச்சுவடு" வாசகர் வட்டம். மற்றது, "வெளிச்சம்" வாசகர் வட்டம். வெளிச்சத்தின் முதலாவது வாசகர் வட்டம் உருவாக்கப்பட்டதே அக்கராய னில்தான். பின்னர் "செம்மணி", "ஆனையிறவு" ஆகிய கவிதை நூல்கள் வெளியிடப்பட்டதும் ஸ்கந்தபுரத்திலேயே. இலக்கம் 01. பாட சாலைக்குப் பின்புறத்திலிருந்த டானியல் விளையாட்டரங்கில் "ஆனையிறவு" நூலினை வெளியிட்டு புலிகளின் தளபதி பால்ராஜ் ஆற்றிய உரையைக் கேட்பதற்கு ஐயாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கூடியிருந்தார்கள். புலிகளின் இராணுவச் சாதனைகளைப் பற்றி பால்ராஜ் மிடுக்கோடு பேசினார். அதைப்போல "சிங்கள நாகரிகத்துக்கு இழுக்கைத் தரும் வகையில் இறந்தோரின் நினைவிடங்கள் இடித்தழிக்கப் படுகின்றன. அந்த மாதிரியே செம்மணியிலும் மனிதப் புதைகுழிகள் உருவாக்கியுள்ளன. இவை சிங்கள மக்களைத் தலைகுனியச் செய்யும் செயல்கள்" என்றார் மு.தி. இரண்டு உரைகளும் முக்கியமானவையாக இருந்தன.

அப்பொழுது அக்கராயனைச் சூழவும் ஏறக்குறைய 20 பாடசாலைகள் இயங்கின. கூட்டுறவுச் சங்கங்களில் மட்டும் எட்டுத்தலைமைச் சங்கங்கள் இருந்தன. அங்கே இயங்கிய கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் "சங்கமம்" என ஒரு மாதப்பத்திரிகையை வெளியிட்டது. அதில் அநாமிகன், வேல் லவன், திருநகரூர் ஜெகா போன்றோர் தங்களின் ஆரம்பகாலக் கவிதைகளை எழுதினார்கள். அன்ரன் அன்பழகன், கனகலிங்கம், அ.கேதீஸ்வரன், சொலமன் சூ.சிறில் போன்ற வர்கள் சங்கமத்தின் ஆசிரியர் குழுவில் செயற்பட்டனர்.

அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு முன்புறமுள்ள திடலில் நான்கு ஆண்டுகளாக வண்டிச்சவாரி நடந்தது. வன்னியெங்கு மிருந்து சவாரிக்காளைகளும் வண்டிக்காரர்களும் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவாரிசெய்தார்கள். சவாரியைப் பார்க்கக் கூட்டம் அலை புரளும். சனத்திரளைக் கண்டால் சவாரி மாடுகளுக்கு மிரட்சி. சவாரிக்காரருக்கு உஷார். பிறகென்ன, காளைகள் தறிகெட்டு ஓடின. வெற்றிக் கூச்சல்கள் அகதிக் கூடாரங்களைக் கிழித்து வானில் எழுந்தன. அது அகதிகளின் நகரம். எல்லா இடங்களிலும் குடிசைகள். காணும் திசைதோறும் குடிசைகள், அகதிகள், அவலம்... என்றிருந்தாலும் இந்த மாதிரியான காரியங்களும் நடந்து கொண்டிருந்தன.

அக்கராயன் வட்டகையில் அந்த நாட்களில் ஆட்சி செய்தது மலேரியா. ஏறக்குறைய ஒரு ஆண்டில் மட்டும் 28,000 பேர்வரையில் மலேரியாவினால் தாக்கப்பட்டிருந்தனர். காடுகளைக் குடைந்து அங்கே குடியிருந்த சனங்களை பீரங்கிகள் மட்டும் தாக்கவில்லை, நுளம்பும் பாம்பும் கூடத் தாக்கின. ஆனால், என்ன செய்ய முடியும்? வேறு எங்கே போக இயலும்? வன்னி முழுவதும் நுளம்பும் காடும் பாம்பும்தானே! நுளம்புக்கடியினாலும் பாம்புக்கடியினாலும் நிறைந்து கொண்டிருந்தது அக்கராயன் மருத்துவமனை. அங்கேதான் இயங்கியது கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையும். ஆனாலும், அவற்றால் நோயாளிகளைத் தாங்கிக்கொள்வதற்கு முடியவில்லை. சாவு வீதத்தைக் குறைக்க முடிந்ததே தவிர, முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை. போதாக் குறைக்கு நெருப்புக் காய்ச்சல், மூளைக்காய்ச்சல், மலேரியாக் காய்ச்சல் வேறு பரவிக்கொண்டிருந்தன. சுத்தமான குடிநீர் குறைந்தால் பெருமளவு வியாதிகள் தானாகவே வந்து சேரும் என்பது மருத்துவ விதி. அன்றைய நாட்களில் அக்கராயன் சுடுகாட்டில் நெருப்பு அணைந்ததில்லை.

2000ஆம் ஆண்டு கிளிநொச்சியை விடுதலைப் புலிகள் மீட்ட பிறகு, மீண்டும் மெல்ல மெல்லச் சனங்கள் கிளிநொச்சிக்கு நகரத்தொடங்கினர். மெல்ல வடியத்தொடங்கியது அக்க ராயனும். அதுவரையிலும் கோணாவிலில் இருந்து வன்னேரிக் குளம், ஜெயபுரம் வரையிலும் நிறைந்திருந்த சனக்குடியிருப் புகள் பின்னர் வெறிச்சோடிக் காணாமற் போயின. பெருகி வந்த சனங்கள் அக்கராயன் வட்டகையில் மரங்களின் கீழ் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறிய கோயில்களையெல்லாம் பெரிதாக்கி விட்டார்கள். இத்தியடி அம்மன், ஸ்கந்தபுரம் முருகன், ஐயனார்புரம் ஐயனார், அக்கராயன் பிள்ளையார், வன்னேரிக்குளம் முருகன், இரண்டாம் கொலனி கண்ணன்கோயில் எல்லாம் இந்த வகையின. சனங்கள் வடிந்த பிறகு இந்தக் கோயில்களும் வெறித்து விட்டன. இடப்பெயர்வினால் இயல்பான வளர்ச்சியன்றி, ஒரு பலூனைப் போல திடீரென ஊதிப்பெருத்த நகரம் அதே விசையில் வடிந்து களையிழந்தது. பிறகு மறுபடியும் ஊர்வாசிகளும் மாடுகளும் மட்டும் நடமாடும் தெருக்களைக் கொண்டிருந்தன அக்கராயன், வன்னேரி, ஸ்கந்தபுரம், கோணாவில் புரங்கள். “மண்ணால் கட்டப்பட்ட அந்தப் பட்டணம்” மெல்ல மெல்ல மழையில் கரைந்தழிந்தது.

ஆனாலும், ஊர்வாசிகள் வேட்டைக்குப்போனார்கள். வயல்களை விளைத்தார்கள் விவசாயிகள். அலைச்சலில்லாமல் களைப்பில்லாமல் தெரியாத முகங்களைத் தேடித் திரியாமல் கடிதங்களைக் கொடுத்தனர் தபால் ஊழியர்கள். பள்ளிகள் இயங்கின. பிள்ளைகள் ஆரவாரமில்லாமல் பாடசாலைக்குப் போய் வந்தார்கள். எங்கும்போல அங்கும் இரவும் பகலும் வந்து போயின. வழமைபோல எல்லாம் நடக்கின்றன என எண்ணிக்கொண்டிருந்தபோது அக்கராயனுக்கே வந்தது இடப்பெயர்வு. முன்னர் இடம்பெயர்ந்து வந்தவர்களை அரவணைத்து, ஆதரித்த அக்கராயன் வட்டகையின் அத்தனை ஊர்களும் இப்பொழுது இடம்பெயர்ந்தன. மூட்டை முடிச்சுகள், வண்டி வாகனங்கள் என தெருவுக்கு வந்தது பெயர்த்தெடுக்கப்பட்ட வாழ்க்கை. அப்படியே அது தெரு நீளம் சிந்திச் சிதறி, முள்ளிவாய்க்கால் ஊடாக வவுனியா மெனிக் பாம் வரை சென்றது.

2010 சனங்கள் மீண்டும் அக்கராயன் வட்டகைக்கு வந்தபோது அங்கே காடும் புதரும் யானைகளும்தான் மறுபடி இருந்தன. ஏற்கனவே உடைந்திருந்த அண்ணா சிலை முழுதாகச் சேதமாகியிருந்தது. காணுமிடமெங்கும் கைவிடப்பட்ட வீடுகள், உடைந்தும் சிதைந்தும் போன பொருட்கள், பாழடைந்திருந்த வீதிகள்.... ஒரு தொல்குடியிருப்பைப் போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறியிருந்த அந்த வட்டகையில் படைச் சிப்பாய்களும் இல்லையென்றால், அது புராதன காலத்துக்கே திரும்பியிருக்கும். ஆனாலும் "மனிதர்கள் மறுபடியும் தங்கள் ஊர்களைக் கட்டியெழுப்பத் தொடங்கினார்கள்". ஊர்களுக்கு வந்தவர்கள் மீண்டும் காடுகளை வெட்டிக் களனிகளை உண்டாக்கினார்கள். வளவுகளைத் திருத்தி வீடுகளை அமைத்தார்கள். இப்பொழுது ச.முருகானந்தன் அங்கில்லை. இருந்திருந்தால் அவர் இன்னொரு யானைக்கதையை எழுதியிருக்கக் கூடும். அலியன் யானை என்றோ தனியன் யானை என்றோ.

வரலாற்றாசிரியர்களுக்குத்தான் எத்தனை சிரமம், அழிந்தழிந்து உயிர்பெறும் மையங்களைப் பற்றி எழுதித் தீர்ப்பதற்கு?

எல்லாவற்றையும் எண்ணிப்பார்க்கும்போது ஜெயமோகனின் "விஷ்ணுபுரம்" நாவலே நினைவில் வருகிறது. ஒரு போது பெரும் கீர்த்தியுடன் இருந்த "விஷ்ணுபுரம்" பின்னொரு போதில் தகர்ந்து சிதைந்து போகிறது. ஆனாலும் அந்தச் சிதைவினுள்ளும் மனித இயக்கம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது...

விஷ்ணுபுரத்தை முதன் முதலில் அக்கராயனில்தான் பெற்றோம். அங்கேதான் அதை வாசித்தேன்.

வரலாற்றின் விசித்திரம் மகத்தானதா? பெருந்துக்க முடையதா?

2013 -ஓகஸ்ற்

00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி

## அபாயவெளி அழகான விளம்பரமாகிய கதை

நேற்று ஒரு நண்பர் பதற்றத்தோடு என்னிடம் வந்தார்.

"என்ன, ஏது?" என்று கேட்டேன்.

"செம்மணியைப் பார்த்தீர்களா?" என்று கேட்டார்.

அவர் கேட்டதன் அர்த்தம் புரிந்தது. செம்மணி இப்பொழுது ஒரு புதிய நகர். விளம்பரங்களின் நகர். மாபெரும் விளம்பரங்கள். வானத்தை எட்டுவனபோல வெளியை நிறைத்தபடி நிற்கின்றன அத்தனையும்.

உலகப் புகழ்பெற்ற பெரும் நிறுவனங்களின் விளம்பரங்களை யெல்லாம் செம்மணியில் இன்று காணலாம். தரமான பால்மா என்று, லாபகரமான தொலைபேசி இது என்று, 24 மணிநேரமும் மகிழ்ச்சியாக இருப்பதற்கு பேரிசைப் பொழிவாக ஒலிக்கும் வானொலியைக் கேளுங்கள் என்று, பொதிகளை அனுப்புவதற்கு யாரை எப்படி நாடவேண்டும் என்று, விருந்தினர்களுடன் எங்கே சாப்பிடலாம் என்று, எந்த வர்ணங்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்று, அதிகூடிய வட்டியுடன் சேமிக்கவும் குறைந்த வட்டியில் கடன் வாங்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு செய்ய வேண்டிய நிதி நிறுவனம் எதுவென்று, இன்னும் யானையைப் போன்ற பலத்தோடிருக்கும் கூரைத்தகட்டுக்கு, அதிக விளைச்சலைத்தரும் பயிர்களை வளர்க்க வாங்க வேண்டிய உரத்துக்கு, பற்களைப் பாதுகாப்பதற்கான பற்ப சைக்கு, பருக வேண்டிய பானங்களுக்கு எவற்றையெல்லாம் தெரிவு செய்ய வேண்டும் என்று, லாபகரமான விமானப் பயணத்துக்குத் தோதான சொகுசு விமான சேவை எதுவென்று, உறுதியான கட்டிடத்துக்குப் பொருத்தமான சீமெந்தைத் தெரிவு செய்வதற்கு என்றெல்லாம் சொல்லும் நூறு விளம்பரங்கள் வரையில் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன.

வண்ணமயமான உலகமாக செம்மணி மாறியிருக்கிறது; மாற்றப்பட்டிருக்கிறது. கடந்த காலப் புதைகுழிகளின் மீது இந்த வண்ண உலகம் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது.

இதுவே நண்பருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கிறது. அல்லது அவருக்கு ஆத்திரத்தைக் கிளப்பியிருக்கிறது. அவர் பார்த்த செம்மணி, அவருக்குத் தெரிந்த செம்மணி, அவருடைய மனதில் பதிந்திருக்கிற செம்மணி இன்றில்லை.

அப்படியென்றால்...?

இது செம்மணி வெளியில் கொன்று புதைக்கப்பட்ட கிருஷாந்தியின் நினைவுகளை மறக்கடிக்கும் சதியா? அல்லது சந்திரிகா குமாரதுங்கவின் காலத்தில் அங்கே உருவாக்கப்பட்ட 600 புதைகுழிகளையும் மறைக்கும் முயற்சியா? அல்லது இந்த வெளியில் ஆடிக்களித்து விளையாடும் காற்றை வழி மறித்து, அதன் சுதந்திரத்தைப் பறிக்கும் அடக்குமுறையா? இல்லை, தந்திரமான ஒரு ஆக்கிரமிப்பா? அல்லது மண்ணோடு மண்ணாக இருந்து மடிநிறைந்த நெல்லை விளைவிக்கும் வயல்களை மறைத்து எழுந்து கூத்தாடும் விளம்பரப் பிசாசுகளின் மாஜா ஜாலமா? அல்லது யாழ்ப்பாணத்தைக் கொள்ளையடிக்க வந்திருக்கும் தந்திரசாலிகளின் அழகிய முகங்களா? முகமூடிகளா? ....? இப்படி இன்னும் பலவாக ஏதோவெல்லாம் நடந்து கொண்டிருக்கின்றனவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைப் பொறுத்தவரை எல்லாமே மாறிவிட்டன. இதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அவருக்குத் தெரிந்த செம்மணி ஒரு உவர் வெளி. அதில் ஒரு பக்கத்தில் நன்றாக விளையும் வயல்கள் இருந்தன. வயலைப் போலவே நன்றாக விளையும் சின்ன[illegible]ரிய உப்பளமும் இருந்தது. எல்லோரையும் அச்சுறுத்து[illegible] கதைகளுடைய சுடலை இருந்தது. அந்தச் சுடலையை[illegible] பற்றிய பல கதைகளிருந்தன. எரிக்கப்பட்ட சடலங்கள் எழுந்திருந்த அதிசயமெல்லாம் நடந்தால் யாருக்குத்தான் அச்சம் வராது? அப்படியான புனைவுகளும் இருந்தன. பட்டம் விட்டு விளையாடக்கூடிய பெரிய வெளி இருந்தது. இளந்தாரிப் பெடியள் இரவில் களவாகக் கள்ளடிக்கும் வசதியிருந்தது. யாரைப்பற்றிய கவலைகளுமில்லாமல் விரும்பியமாதிரி சத்தம் போட்டுப் பாடக்கூடிய விரிவிருந்தது. வானத்தை முழுமையாகப் பார்க்கமுடிந்த, அதன் விநோதங்களைக் காணக்கூடிய எல்லையற்ற வெளிப்பரப்பிருந்தது. மாரிகாலத்தில் நீந்தக்கூடிய குளங்களும் வாய்க்கால்களும் இருந்தன. அந்தக் குளங்களிலும் வாய்க்கால்களிலும் மீன் பிடிக்கும் ஆட்களும் இருந்தார்கள்.

ஆனால், இப்போது...?

எல்லாவற்றையும் மாற்றி விளையாடுவதில் காலத்துக்கு நிகர் வேறெதுவுமில்லை. காலத்தின் விளையாட்டை உன்னிப்பாகப் பார்த்தால், எல்லாமே வேடிக்கையாகத்தான் தெரியும். அதிலும் போர் நடந்த இடங்களில் இந்த வேடிக்கை இன்னும் அதிகம். எல்லா நிரந்தரங்களையும் போர் நிச்சயமற்றதாக்கி விடுகிறது. அதுவும் சடுதியாக. கணத்தில். ஒரு நொடியில்.

போருக்குப் பின்னும் போருக்கு உள்ளேயும் இருப்பது அரசியல். இந்த அரசியல் எல்லாவற்றையும் மாற்றி விட்டது. எல்லாவற்றையும் சிதைத்து விட்டது. இன்னும் சிதைத்துக் கொண்டிருக்கிறது.

இப்பொழுது செம்மணியில் இரவில் இளந்தாரிகளைக் காண முடியாது. இரவில் மட்டுமல்ல பகலிலும் பிணங்கள் எழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாடுகின்றனவோ என்றுதான் பலரும் எண்ணுகிறார்கள். இதையும் விட, இப்போதையும்விடப் பயங்கரமான இன்னொரு காலமும் இருந்தது. அப்போது இந்த வெளியெங்கும் காவலரண்கள் என்ற பெயரோடும் அப்படியொரு வடிவோடும் சுடலைகள் இருந்தன. அந்தச் சுடலைகளில் ஏராளம் பிணங்களும் இருந்தன.

யாழ்ப்பாணத்தில் இன்னும் தங்கள் பிள்ளைகளையும் கணவர்களையும் தந்தையரையும் தேடிக்கொண்டிருப்பவர்களின் கண்களில் அந்த நாட்களில் இருந்த "பயங்கரங்களின் நிழல்கள்" ஆடிக்கொண்டேயிருக்கின்றன.

இப்படிக் காணாமற் போனவர்களை செம்மணி நினைவூட்டுகிறது. கிருஷாந்தி அந்த நினைவைக் கிளர்த்துகிறாள். அவள் தன்னைப் பலியிட்டு அந்த உண்மைகளை வெளியே கொண்டு வந்தாள். அவளே இப்போதும் நமக்கு செம்மணியை அப்படி அர்த்தப்படுத்துகிறாள். அவளுடைய தனிமைக் குரல், அந்தரித்துத் துடித்த அந்தக் குழந்தைக் குரல் இன்னும் அந்த வெளியில் கேட்டுக் கொண்டேயிருக்கிறது. அந்த வெளியில் அது கலந்து நிறைந்திருக்கிறது. அதை இலகுவில் கடக்க முடியவில்லை. நுண்ணுணர்வுள்ளவர்கள் தங்களின் செவிகளில் அந்தக் குரலின் அடையாளத்தைக் காண்கிறார்கள்.

அழகிய கிரிஷாந்தி
இவள் ஒரு போராளியல்ல
ஆனாலும் அவளையவர்கள் பிடித்தனர்
கைதடி வெளியெலாம்
அவள் கதறிய குரல் அலைய
அவளை அவர்கள்
பல்முறை சிதைத்தனர்
பிறகு
கழுத்தை நெரித்து
செம்மணியில் புதைத்தனர்

அவளை தேடிச் சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயை தம்பியை அயலவரை
எல்லாரையுமே கழுத்தை நெரித்து
செம்மணியில் புதைத்தனர்

(யாழ்ப்பாணமே ஓ...எனது யாழ்ப்பாணமே- நிலாந்தன்)

அந்த வெளியில் நுழையும்போதே மனம் பதைக்கத் தொடங்கிவிடுகிறது. காணாமற் போனவர்கள் அத்தனை பேரைப்பற்றியும் ஏனோ அந்த வெளியில் தேடுகிறோம். அந்த வெளியில் இருக்கும் சிறு புதர்கள் எல்லாம் வேறுமாதிரித் தோன்றுகின்றன. புதைகுழிகளாக, மரண மேடைகளாக, காணாமற்போனோரின் பலிமேடாக.... இதையெல்லாம் இந்த விளம்பரங்கள், அவற்றின் வண்ணமயம் புலனை விட்டு மறைகின்றன.

கடவுளே...! இதென்ன கொடுமை?

00

ஒரு காலத்தில் செம்மணி நல்ல விளைச்சல் நிலம். எப்போதும் உவர் நிலங்களிலுள்ள வயல்கள் நல்ல விளைச்சலைத் தரும். பூநகரி, அடம்பன், முருங்கன், முரசுமோட்டை, கண்டாவளை என புகழுடைய விளைச்சல் நிலங்கள் எல்லாமே உவர்நிலங்கள்தான். செம்மணியும் உவர்ப்பூமியே.

நிறைந்த மணிகளுடன் நெற்குடலைகள். முற்றிய நெற்கதிர்கள் பாரந்தாங்க முடியாமல் காற்றுவாக்கில் சாய்ந்திருக்கும். ஒரு பருவத்தில் செம்மஞ்சள் நிறத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் தெரியும் வயல்கள்.

யாழ்ப்பாண நகரத்துக்குள் நுழையும்போது இந்தச் செம்மஞ்சள் வயல்வெளியே வரவேற்கும். அது வான்கோவின் மஞ்சள் வயல்களை ஞாபகப்படுத்தும் செம்மணியின் காட்சிகள்.

நாற்பதாண்டுகளுக்கு முன்பு என்னுடைய சிறு வயது ஞாபகத்தில் செம்மஞ்சள் நிறத்திலான வயற்பரப்பாகவே பதிந்திருக்கிறது செம்மணி. அத்தை ஒருத்தியின் கலியாணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்காக யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது செம்மணியைப் பார்த்தேன். ஒரு பெரிய பாலத்தைக் கடந்தவுடன் விரிந்திருக்கும் வயல்வெளி.

அந்த முதற்காட்சி, யாழ்ப்பாணப் பட்டணத்துக்குள் நுழையும் போது, பட்டணத்துக்கருகில் இருக்கும் வயற்பிரதேசம் என்றவகையில் அது அப்படியே நினைவில் பதிந்தது. யாழ்ப்பாணப் பட்டணத்திலும் வயலா? என்று அப்போது யோசித்தேன். யாழ்ப்பாணம் விவசாயிகளின் வாழிடம் என்பது பின்னர்தான் புரிந்தது. என்றாலும் நகரத்துக்கு அண்மையில் இப்படியொரு வயல்வெளியா என்ற ஆச்சரியம்.

பின்னர் யாழ்ப்பாணத்திற்குப் போய்வரும்போதெல்லாம் செம்மணியில் இயல்பாகவே அந்த வயல்களைக் கண்கள் தேடும். விளைந்த பயிர்களை மனம் தேடும். கோடையில் அந்த வெளியில் காற்றும் காற்றை மேயும் மாடுகளும் நிற்கும்.

செம்மணிச் சுடலையின் கதைகளை ஐயா சொல்வார். மாட்டு வண்டிலில் கிடுகு ஏற்றிக் கொண்டு இரவொன்றில் சென்ற போது மாடுகள் வெருண்டதாக அதில் ஒரு கதை உண்டு. சுடலையில் இருந்த பேயைக் கண்டு மாடுகள் வெருண்டதாக அந்தக் கதை.

மாமா இதைக் கொஞ்சம் மாற்றி இன்னொரு விதமாகச் சொல்லுவார். பேய்கள்தான் மாடுகளைக் கண்டால் வெருளும். மாடுகள் ஒருபோதும் பேய்களைக் கண்டு வெருளாது. ஒரு நாள் நடுச்சாமத்தில் இரண்டு பேர் செம்மணியால் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். ஒருவருக்குக் கொஞ்சம் வயிற்றுக் குழப்பம். பகலில் குடித்த பனங்கள்ளு வயிற்றைக் குழப்பியது. அவர் அங்கேயிருந்த புதருக்குப் பின்னால் போய் விட்டார்.

அவருக்காகக் காத்திருந்தவர், கொஞ்ச நேரம் காத்திருந்திருக் கிறார். பிறகு இன்னும் கொஞ்சநேரம். பிறகு இன்னும் கொஞ்ச நேரம் என அப்படியே நீண்டநேரம் அவர் காத்திருந்து விட்டார். ஆனால், புதருக்குப் பின்னால் வயிற்றுக் குழப்பத்தைத் தீர்க்கப்போன நண்பர் வரவேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தில் வெள்ளி அடையாளம் மாறி திசைமாறிவிட்டது.

காத்திருந்தவர் சுற்று முற்றும் பார்த்தார், ஒரு உருவம் எழுந்து நிற்கிறது. கறுப்பாக.. தனியனாக.. அது நிற்கும் இடம்... சுடலை. சுடலையில் தனியனாக யார் அந்த நேரம் நிற்பது?

காத்திருந்தவருக்கு சன்னிக் காய்ச்சல். அந்த இடத்திலேயே... நின்ற இடத்திலேயே... அந்தக் கணத்திலேயே மயங்கிச் சரிந்தார்.

அடுத்தநாள் கூட வந்தவர், காய்ச்சலாகக் கிடந்தவரை சுகம் விசாரிக்க என்று வந்தார்.

நடந்தது என்ன தெரியுமா? கூட வந்தவர் சரியான மறதிக்காறர். வந்தவரை அப்படியே விட்டுவிட்டு அவர், புதரிலிருந்து எழுந்து வீட்டுக்கு வந்து விட்டார். காலையில் நினைவு வந்தபோதுதான் வீட்டில் விசயத்தைச் சொல்லியிருக்கிறார். அப்போதுதான் “காத்திருந்தவர் காய்ச்சலாகக் கிடக்கிறார்” என்று சொன்னார்கள்.

அதனால் ஓடோடிப் போய்ப் பார்த்திருக்கிறார் மறதி மன்னன், தன்னுடைய தவறுக்காக நாக்கைக் கடித்துக் கொண்டார்.

மாமா பகுத்தறிவுவாதி. அவர் எதற்கும் பயப்படாத மனுசன். யாருக்கும் கூட.

செம்மணியில், அந்த நாட்களில் சுடலைக்குப் பயப்படாத பேய்களுக்கு அஞ்சாத ஆட்களில் மாமாவும் ஒருவர். சுடலையில் இருந்ததாகச் சொல்லப்படும் எந்தப் பேய்களும் மாமாவை அசைத்ததில்லை.

ஆனால், பின்னொரு காலம் மாமா செம்மணியால் போவதற்கே பயப்பட்டார். கிருஷாந்தி அவருக்கு அந்தப் பயத்தை நினைவுபடுத்தி எச்சரித்தாள். அங்கே புதைக்கப்பட்ட தாகக் கூறப்பட்ட அறுநூறு பேரும் மாமாவை எச்சரித்தனர். மாமா அஞ்சினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வெளியைக் கடக்கும்போது அவருக்கு அது வெளியா கவே தென்படுவதில்லை. அங்கே ஆயிரக்கணக்கான முகங்கள் எங்கோ மறைந்து நின்று கொண்டு கையசைப்பதாக, அவருடன் கதைக்க முனைவதாக, ஏதோ சொல்லத் துடிப்பதாக அவருக்குத் தோன்றியது. அவரைப் பொறுத்தவரை அது வெறும் வெளியில்லை.

00

இப்போது வந்த நண்பருக்கு நான் சில கதைகள் சொன்னேன்.

“காலம் மாறித்தான் விட்டது. இது வணிகமயமாக்கலின் விளைவு. வணிக மயமாக்கலில் எதற்கும் அடையாளமில்லை. எதற்கும் மதிப்பில்லை. நமது கோபங்களுக்கும் அர்த்தம் கிடையாது. பொருட்களுக்கிருக்கும் மதிப்பு மனிதருக்கில்லை. கடந்த காலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் கூட எந்த மதிப்பும் கிடையாது. எதிர்காலத்துக்கும் வணிகச் சூழலில் மதிப்பிருக் காது“

நண்பரிடம் கேட்டேன்.

“செம்மணியின் அடையாளமாக நம் மனதில் மிஞ்சியி ருப்பதோ பதிந்திருப்பதோ என்ன? செம்மணியைப் பார்க்கும் போது எங்கள் கண்ணில் தெரிவது என்ன? இந்த விளம்பரங் களைப் பார்த்தாலும், இந்த வண்ண உலகத்தைக் கவனித் தாலும் எங்களின் கண்களில், மனதில் எழும் பிம்பம் என்ன?

அது கிருஷாந்தியாக, எலும்புக்கூடுகளின் மேடுகளாக, காலத்தையும் சூழலையும் அச்சுறுத்தும் நிழல்களின் நிலமா கவே தோன்றுகிறதல்லவா! இந்த மாபெரிய விளம்பரங்களோ, அவற்றின் கவர்ச்சிகரமான அறிவிப்பு வாசகங்களோ, வண்ணங்களோ மனதில் தங்குவதேயில்லையே.

பதிலாக மேலும் மேலும் காணாமற் போன முகங்கள்தான் நினைவில் வருகின்றன. அது கிருஷாந்தியாக, கோபி நாத்தாக, திருச்செல்வமாக.... இப்படிப் பலராக....” என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நண்பரே, யாழ்ப்பாணப் பொது நூலகம் இப்போது புது நிர்மாணம் செய்யப்பட்டு, மிக அழகாகத் தெரிகிறது. ஆனால், இந்த அழகிய நூலகமா எங்களின் கண்களில் தெரிவது? அல்லது இந்த வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையா எங்கள் மனதில் இருப்பது? ஆகவே, கவலையை விடுங்கள்" என்றேன்.

நண்பர் புரிந்ததாகவும் புரியாததாகவும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்.

செம்மணியில் காற்று ஊதி ஊதி விளாசிக் கொண்டிருக்கிறது. அதில் சில விளம்பரத்தட்டிகள் கிழிந்து தொங்குகின்றன.

யார் கிழித்தது அவைகளை?

யாருமே இல்லை. அங்கே இன்னமும் துப்பாக்கிகளுடன் காவலாளிகள் நிற்கும்போது யாரால் அவற்றைக் கிழித்தெறிய முடியும்?

ஆனால் அந்த விளம்பரத்தட்டிகள் கிழிந்தே போகின்றன.
இது எப்படி?

காற்றையும் விட வலியன் வேறுண்டா? இந்தக் காற்றுத்தானே அந்த வெளியிற் கரைந்த அத்தனை குரல்களையும் அறிந்தது. அந்தக் குரல்களின் இறுதி மூச்சை வாங்கியது. ஆகவே, அந்தக் காற்றுக்கு வரும் கோபம். அந்தக் காற்றுக்கு வரும் ஆவேசம்.

செம்மணி-
யாழ்ப்பாண நகரத்துக்கு நுழையும் அந்த நிறம் மங்கிய நுழைவாசலில் நான் ஒரு கணம் நின்று எல்லாவற்றையும் பார்த்தேன்.

அதே மாதிரி, வானம் அந்த வெளியை மூடிக் கவிந்திருந்தது.

2012-ஒக்ரோபர்
00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்திக்கடல்

## முறிந்த பாதைகளும் முறியாத பாதைகளும்

கோடையிற் காய்ந்து மாரியிற் துளிர்க்கிற நந்திக்கடலில் இப்பொழுது மயான அமைதி. தன்னுடைய சனங்களை இழந்து போனேன் என்ற துயரத்தில் உறைந்து போன அமைதியா அது? அங்கே கடலில் விளையாடும் கறுத்த, மெலிந்து ஒடுங்கிய சிறுவர்கள் இல்லை. மாரியில் வலை படுக்கின்ற, கோடையில் கரப்புக் குத்துகிற அல்லது தூண்டில் போடுகிற மீனவர்களும் இல்லை. சீசனுக்கு வரும் கடற்பறவைகள் கூட இன்னும் வரவில்லை. உக்கிப் போன அல்லது உறைந்து போன கடந்த காலத்தின் எச்சங்களாகக் கரையோரங்களில் சிதைந்த சிறிய படகுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதைந்து கிடக்கின்றன.

சாம்பல் நிறப் படிகமாய் விரிந்திருக்கும் கடலின் மேலே மிதந்து கொண்டிருக்கின்றன வேறு சில புதிய படகுகள். அவை இலங்கைக் கடற்படையின் படகுகள் அல்லது இராணுவத் தினரின் படகுகள். நந்திக் கடலோரத்திலிருந்த கேப்பாபுலவு என்ற வன்னியின் மூத்த கிராமத்தையும் காணவில்லை.

இந்த மூத்த கிராமத்தில் பெரும்பாலும் பனை ஓலையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேய்ந்த சிறு வீடுகளே இருந்தன. ஒரு வளவில் அநேகமாக நான்கு அல்லது ஐந்து குடிசைகளிருக்கும். தலைவாசல், பெரிய வீடு அல்லது தாய்வீடு, அடுப்படி (குசினி), அருகே இன்னொரு குடிசை என்று. மூன்று குடிசைகள் ஆகாதென்பது சோதிடவிதி. அது அடுப்புக் கல் வடிவில் இருப்பதால் குடும்பத்துக்குப் பொருத்தமில்லை என்ற நம்பிக்கை. இந்த நான்காவது குடிசை பெரும்பாலும் களஞ்சிய அறை. அதற்கு மேலிருந்தாலும் நிச்சயமாக அது களஞ்சியந்தான். அதற்கப்பால் சற்றுத் தள்ளி, மாட்டுக்கொட்டில் என்று சொல்லப்படும் ஒரு குடிசை இருக்கும். அதை வண்டிற் கொட்டில் என்றும் சொல்வார்கள். அதற்குள்ளே மாட்டு வண்டி, அதற்குரிய பொருட்கள், நுகத்தடி, ஏர் (அப்பொழுது உழவு இயந்திரங்களையும் விட எருதுகளைப் பயன்படுத்தியே உழவைச் செய்தார்கள். எனவே அதற்கான கலப்பைகள்) போன்றவை அதற்குள் வைக்கப்பட்டிருக்கும்.

இருபது வருசத்துக்கு முதல், முதற்தடவையாக கேப்பாபுலவுக்கு நான் வந்தபோது எனக்கு வியப்பாயிருந்தது, அங்கே இருந்த நெல்லுக்கூடைகளே. வன்னியின் பிற இடங்களிலும் இந்த மாதிரி நெல்லுக்கூடைகள் இருந்தாலும் கேப்பாபுலவில்தான் முதன்முதலில் அதைக் கண்டேன். காட்டுத்தடிகளையும் மண்ணையும் கொண்டு செய்த கூடைகள். முற்றிலும் இயற்கை முறையில் அமைக்கப்பட்ட கூடைகள். ஆபிரிக்காவில் இன்னும் சில பழங்குடிகளிடம் உள்ளதைப் போன்ற ஒரு வழமை. அந்தக் கூடை ஒரு சிறிய களஞ்சியமே. அப்போதெல்லாம் பெரும்பாலான வன்னி விவசாயிகளிடம் பெரிய வீடுகளோ, நெல்லைப் பாதுகாப்பாக வைக்கக்கூடிய களஞ்சிய அறைகளோ இருக்கவில்லை. ஆகவே, அவர்கள் இந்த மாதிரியான கூடைகளையே களஞ்சியமாகப் பயன்படுத்தினார்கள். இந்தக் கூடைகளில் இரண்டாண்டுகள் வரையில் நெல்லைக் கெடாமல் மிகப் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும். அந்துப் பூச்சிகள் போன்ற தொல்லைகளுக்கும் இயற்கை மருந்துத் தடைதான். சுமார் ஐந்து அடியிலிருந்து ஏழு அடிவரையான உயரம் கொண்ட இந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடைகளின் அகலம் நான்கு அல்லது ஐந்து அடி விட்டமிருக்கும்.

இந்தக் கூடையை வீட்டுக்கு அருகில் தனியே அமைத்து வைத்திருந்தார்கள். அநேகமாக எல்லா வீடுகளிலும் ஒன்றோ இரண்டோ கூடைகளிருந்தன. கீழே மரக்கால்களை நாட்டி, அதற்குமேல் படுக்கையை அமைத்து, அந்தப் படுக்கையிலிருந்தே கூடையை அமைத்திருந்தனர். மழைக்காலங்களில் வெள்ளம் வந்தாலும் கூடையில் பாதிப்பு ஏற்படாது. மண் ஊறி கூடையைப் பாதிக்காதிருக்கவே இந்த மரக்கால்களின் ஏற்பாடு. மேலே வட்டக் குடில் வடிவிலான பனை ஓலைக்கூரை.

இந்த மாதிரி முழுதாகவே இயற்கையோடிணைந்த அமைப்பைக் கொண்டிருந்தது கேப்பாபுலவு. ஏராளம் மாடுகள் அங்கே நின்றன. கிழக்கே நந்திக்கடல். மேற்கே விரிந்து செல்லும் வன்னிப் பெருங்காடு. அங்கே இருந்த ஒன்றிரண்டு ஓட்டுக்கூரைகளையும் ஒரு பள்ளிக்கூடத்தையும் தபாற்கந்தோரையும் தவிர, வேறு எந்தப் பெரிய மாற்றங்களுமில்லாமலேயே 2009 வரையில் கேப்பாபுலவு இருந்தது.

கேப்பாபுலவுக்கு அருகில் இருந்தது சூரிபுரம். இது விடுதலைப் புலிகளின் காலத்தில் உருவாகிய சிறிய கிராமம். அநேகமாக ஏழை மக்களுக்கு நிவாரணமளிக்கும் வகையில் அமைக்கப் பட்ட குடியிருப்புகளில் ஒன்று சூரிபுரம். முக்கியமாக கேணல் சங்கரின் அடையாளமும் நினைவுகளுமே சூரிபுரம் எனலாம். கேணல் சங்கர் புலிகளின் விமானப் படைக்குப் பொறுப்பாக இருந்த காலத்தில் கேப்பாபுலவுக்கு மேலே - சூரிபுரத்துக்கு அண்மையாக ஒரு முகாம் இருந்தது. அதனால், தன்னுடைய பார்வைப் பரப்பிலிருந்த சூரிபுரத்தை அவர் கூடுதற் கவனமெடுத்து மேம்படுத்தி வந்தார். இரணமடுவிலும் இந்தச் சூரிபுரத்திலுமே புலிகளின் விமான ஓடுபாதைகளும் அமைக்கப்பட்டிருந்தன. இந்தச் சூரிபுரம் ஓடுபாதையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்பட்ட சிறியரக விமானத்தின் மூலமே 1999 இல் முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்தில் போராளிகள் மலர்களைத் தூவியிருந்தனர். இப்போது கேப்பாபுலவும் இல்லை சூரிபுரமும் இல்லை.

நந்திக் கடலுக்கு மேற்கே, கேப்பாபுலவுக்கும் மேற்கே, சூரிபுரத்தோடிணைந்து விரிந்து செல்லும் பெரிய காடு இன்று இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரிக்கப்பட்ட காட்டின் வழியாக ஒரு புதிய பாதையைப் போட்டிருக் கிறார்கள். இந்தப் பாதையை இலங்கையிலுள்ள வீதி அபி விருத்தித் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பிரதேச சபை என்ற வீதி அமைப்புக்குப் பொறுப்பான எந்த அதிகார நிறுவனங்களும் அமைக்கவில்லை.

இது படையினரால் விசேடமாக அமைக்கப்பட்டுள்ள வீதி. ஏற்கனவே இருந்த வற்றாப்பளை புதுக்குடியிருப்பு வீதி கேப்பாபுலவு ஊடாகச் சென்றது. அதை முறித்து, காட்டை ஊடறுத்து இந்தப் பாதையை அமைத்திருக்கிறார்கள்.

இந்தக் காட்டு வீதி படையினரின் முழுமையான கட்டுப் பாட்டில்தான் இருக்கிறது. ஆனால், வீதியின் வழியாகப் போகும்பொழுது அவர்கள் யாரையும் மறிக்கவோ, சோதனையிடவோ, பதிவுகளைச் செய்யக்கோரவோ இல்லை. என்றாலும் இரண்டு பக்கமும் விரிந்திருக்கும் படைவலயத்தி னூடாகவே செல்லவேண்டும். மிகப் பிரமாண்டமான படை வலயம்.

இந்தப் படைவலயம் புதுக்குடியிருப்புக்குத் தெற்கே பத்தாம் வட்டாரத்திலிருந்து கள்ளியடி, கேப்பாபுலவு, சூரிபுரம், வற்றாப்பளைக்கு அண்மையாக இருக்கும் சீனியாமோட்டைக் குளம் வரையில் நீண்டு விரிந்திருக்கிறது. உள்ளே காட்டின் ஆழத்துக்கு எவ்வளவு தூரம் வரையில் செல்கிறது என்று தெரியவில்லை. ஆனால் வெளியே தெரியும் தோற்றத்தைக் கொண்டு பார்த்தால் வன்னியின் இரண்டாவது பெரிய தளம் இது என்றே தெரிகிறது. முதற் பெரிய தளம் கிளிநொச்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரணமடுக்குளத்தை அண்டிய பகுதியில் உள்ளது. இந்தத் தளத்தை, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷதிறந்து வைத்திருந்தார். அது கிளிநொச்சி மாவட்டத்துக்கான இராணுவத் தலைமையகம்.

அதைப்போலவே இந்தக் கேப்பாபுலவு - சூரிபுரம் பகுதியில் உள்ள தளமும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான இராணுவத் தலைமையகமாக இயங்கி வருகிறது.

புதுக்குடியிருப்பிலிருந்து இந்த வழியாகச் செல்வதாயின் நீங்கள் முதலில் சந்திப்பது, புதுக்குடியிருப்புச் சந்தியின் மேற்கு மற்றும் தெற்குப் பகுதியில் சந்தியோடிணைந்திருக்கும் இடிபாடுகளையே. பத்தாம் வட்டாரத்திலிருக்கும் சூசையப்பர் தேவாலயம், றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலை உட்பட அந்தப் பகுதியிலிருந்த வீடுகள், கட்டிடங்கள், மரங்கள் எல்லாமே முற்றாக அழிந்துள்ளன. 10 ஆம் வட்டாரத்திலிருந்த "சுவையூற்று" என்ற விடுதலைப் புலிகளின் நவீன உணவகம் மற்றும் அதற்குப் பக்கத்திலிருந்த பேருந்து நிலையம் எதுவும் இருந்த அடையாளங்களே இல்லை. புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் ஐயனார் கோவிலடியில் நின்ற பெரிய ஆலமரங்கள் கூட முறிந்து சிதைந்து வெளியாகவே உள்ளது.

பற்றை மண்டிப் பயங்கரமாகத் தோற்றமளிக்கும் இந்த இடங்களில் அபாய எச்சரிக்கை நாடாக்களை கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் கட்டியிருக்கின்றனர். ஆங்காங்கே படையினர் நிற்கின்றனர். புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டிருந்தாலும் சில பகுதிகள் மக்கள் இருப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஆகவே, சனங்கள் இங்கே நடமாடக்கூட முடியாது. அவ்வளவுக்கு கண்ணி வெடிப் பயங்கரம். அந்தச் சூழலைப் பார்க்கவே மயிர்க்கூச் செறிகிறது. இறுதிக் காலத்தில் புதுக்குடியிருப்புச் சந்தியில் சந்தை அமைந்திருந்த பகுதி முற்றாகவே இல்லை.

ஆனால் இந்தப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் அணியொன்றுக்குப் பொறுப்பான ஜெரால்ட் என்பவரிடம் இதைப் பற்றிக் கேட்டேன்.

“இது இறுதி யுத்தம் நடந்த பகுதி. அதிலும் புதுக்குடியிருப்புப் பகுதியைக் காப்பாற்ற வேண்டும் என்று புலிகளும் புதுக்குடியிருப்பைக் கைப்பற்ற வேண்டும் என படையினரும் இறுதிச் சண்டையில் ஈடுபட்ட இடம் இது. அப்படியான ஒரு சூழலில் என்ன நடந்திருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். இரண்டு தரப்பும் தங்களுடைய உச்சப் பலத்தைப் பிரயோகித்ததால் எல்லாமே அழிந்துள்ளன. இப்பொழுது நாங்கள் கண்ணிவெடிகளை அகற்றுவதிலும் அவற்றை இனங் காண்பதிலும் மிகச் சிரமங்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. காலத்தைச் சரியாக வரையறுக்க முடியவில்லை. என்றாலும் முடிந்தவரையில் விரைவாகக் கண்ணிவெடிகளை அகற்றுவதற்குத் திட்டமிட்டு வேலைசெய்கிறோம்“ என்றார் ஜெரால்ட்.

இந்தப் பகுதியைக் கடந்து சென்றால், அடுத்தது, கேப்பாபுலவு கள்ளியடி வயல்வெளிக்கிடையிலிருக்கும் காட்டுப் பகுதி. இந்தப் பகுதியில் படையினரின் இரண்டு தளங்களிருக்கின்றன. இதைக் கடந்து வயல்வெளியில் இறங்கினால், விதைப்பின்றிக் காய்ந்து வெளியாகிக் கிடக்கிறது அந்த வெளி.

முன்னர் இந்த வெளியில் செம்மண் தெருவின் இரண்டு பக்கமும் பச்சை விரிப்பாக நெற்பயிர்கள் காற்றிலசைந்து கொண்டிருக்கும். ஒரு மலைப் பிரதேசத்தைப்போல சாம்பல் நிறத்திலான தொலைதூரக் காடுகளின் மத்தியில் விரிந்தி ருக்கும் பச்சைவெளி வன்னியின் அபூர்வ அழகில் ஒன்று. அங்கங்கே நிற்கும் பனைகள் அந்த விரிந்த வெளிக்கொரு கம்பீரம். இன்னொரு பார்வையில் பார்த்தால் மேலே குடையாக விரிந்திருக்கும் வானத்தை இந்தப் பனைகளே தாங்கிப் பிடிப்பதைப்போலிருக்கும்.

அந்தப் பனைகளின் கீழே, வயலோரங்களில் ஆயிரக்கணக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடுகள் மேய்ந்து கொண்டிருக்கும். மாடுகளை இப்போது நீங்கள் தேடத்தேவையில்லை. அவை ஒன்றுமே அங்கில்லை. பதிலாக யுத்தகால மண் அணைகளும் அறுத்தோடிகளும்தான் உள்ளன. இன்னும் எதுவும் சீராக்கப்படவில்லை.

இந்த வயல்வெளியின் தொங்கலில் எப்போதும் வற்றாத ஒரு ஆறு பாய்ந்து கொண்டிருக்கும். அந்த ஆற்றுக்கருகில் மருத மரங்களின் நிழலில் வீசும் கள் வாசனையையும் காணவில்லை. கள்ளோடு சேர்ந்து வரும் பாட்டுக் குரல்களும் அங்கில்லை. எல்லாமே காய்ந்து விட்டன.

இதைக் கடந்து மேலும் சென்றால், கேப்பாபுலவு வீட்டுத்திட்டம் வரும். ஆனால், இப்பொழுது அது வராது. பதிலாக அங்கே நீண்ட முட்கம்பி வேலியும் இடையிடையே தொங்கவிடப்பட்டிருக்கும் "இலங்கை விமானப்படைக்கான நிலம்" என்ற அறிவிப்புப் பலகைகளுமே வரும். ஏறக்குறைய மூன்று நான்கு கிலோ மீற்றர் நீளத்துக்கு இந்த அறிவிப்பைப் போட்டிருக்கிறார்கள். இடையிடையே படையினரின் காவலரண்கள். நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பை விமானப் படைத்தளத்துக்காக அல்லது விமானப்படையின் பயன் பாட்டுக்காக ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இந்த நிலத்தில் ஒரு பகுதி சனங்களுக்குச் சொந்தமான புலவு. ஏனையவை வனப்பகுதி. அரசுக்குரியது.

இதைக் கடந்தால்...

கேப்பாபுலவுக்குப் போகாமலே பாதை முறிகிறது என்று சொன்னேனல்லவா! இப்படிப் பாதை முறியும்போது நம்மைத் தொடர்கிறது படை வலயம்.

மிகப் பிரமாண்டமான ஏற்பாடுகளில் மண் அணைகள். முட்கம்பி வேலிகள். உள்ளே, காடுகளினுள்ளே விரிந்து கொண்டே செல்லும் படையணிகளின் தலைமையகங்கள். எனவே பாதைகள், கட்டிடங்கள், தகவற் பரிமாற்றக் கூடா ரங்கள் என அதற்கேற்ற அமைப்புகள். இதைவிட தொலைத் தொடர்புக் கோபுரங்கள். இதையொரு இராணுவ நகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுதான் சொல்ல வேண்டும். அந்த அளவுக்கு அதன் அமைப்பும் பிரமாண்டமும் ஏற்பாடுகளும்.

இங்கே உண்மை நிலவரம் என்னவென்றால், முல்லைத்தீவு நகரைப் பாதுகாக்க வேண்டும் என்றால் அதற்கு கேப்பாபுலவு என்ற நந்திக்கடலுக்கு மேற்கேயுள்ள இந்தப் பிரதேசம் படைகளுக்குத் தேவை என்று இராணுவத் தந்திரோபாயம் சொல்கிறது. பழைய தந்திரோபயங்களில் சில திருத்தங்களை நடந்த யுத்தம் சொல்லித்தந்திருக்கிறது. அதன்படியே இந்தப் புதிய உபாயம்.

முன்னர் முல்லைத்தீவு நகரில் மட்டுமே படையினர் இருந்தனர். ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் உண்டாக்கியிருந்த கோட்டையை மையப்படுத்தி, நகரில் நிலைகொண்டிருந்தனர். அது ஒரு சிறிய தீவுப் பகுதி. எனவே அங்கிருந்த படையினரைச் சுற்றி வளைக்கவும் அவர்களின் மீது தாக்குதலைத் தொடுக்கவும் புலிகளுக்கு வாய்த்தது. ஆகவே, எதிர்காலத்தில் அப்படியொரு அச்சுறுத்தல் எந்த வடிவில், எப்போதும் ஏற்படாதிருக்க வேண்டும் என்ற முன்னெச்சரிக்கையை கடந்த கால அனுபவம் படைத்துறைக்குக் கொடுத்திருக்கிறது. அதனால் அவர்கள் வெளியரங்கில் - தங்களின் தளத்தை விரித்துள்ளனர். ஏறக்குறைய மன்னார்த் தீவுக்கு வெளியே இருக்கும் தள்ளாடித் தளத்தைப்போல. ஆனால், அதையும் விடப் பல மடங்கு பெரியது இந்தத்தளம். இது இராணுவத்தளத்தோடு விமானப்படையின் தளத்தையும் இணைத்தது. மன்னார்த் தீவில் ஒல்லாந்தர்களின் கோட்டையை விடவும் தள்ளாடி முகாமையே படைத்தரப்பு அதிகம் நம்புகிறது. தள்ளாடி முகாமே மன்னாரைப் பல சந்தர்ப்பங்களிலும் பாதுகாத்தது.

கேப்பாபுலவு, சூரிபுரம் ஆகிய இரண்டு கிராமங்கள் மட்டும் காணாமற் போய்விடவில்லை. அங்கே இருந்த சனங்களும் இப்போதில்லை. நந்திக்கடலில் துள்ளும் பால் முரலோடு விளையாடும் மனிதர்களும் சிறுவர்களும் காணாமற் போய்விட்டார்கள். கள்ளியடி வயலின் பச்சையும் கள்ளின் மணமும் காணாமற்போய் விட்டன. கேப்பாபுலவிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனெடுக்கவும் வேட்டைக்குப் போவதும் போய்விட்டது. அங்கே இப்போது தன்னிச்சையாகப் பழுத்துச் சொரியும் முரலிப் பழங்களையும் பாலை, வீரைப்பழங்களையும் தின்கிறார்கள். நெய் முறுக்கேறிய பன்றிகள் கவனிப்பாரின்றித் திரிகின்றன. கேப்பாப்பிலவுக்கு அருகே ஒரு "கேப்பாப்பிலவு கிராமம்" உருவாக்கப்பட்டுள்ளது.

நந்திக்கடல் அமைதியாகக் கிடக்கிறது.

"முல்லைத்தீவில் எல்லாமே பாழடைந்து விட்டது
மனிதர்கள் கட்டியதை
மனிதர்களே இடித்து விட்டார்கள்
மனிதர்களை மனிதர்களே
கொன்றும் எரித்தும் விட்டார்கள்
ஆனால்,
மனிதர்களை விட மூத்ததும்
பெரியதுமான கடல்
எதனாலும் காயப்படாமல்
எல்லா நிச்சயமின்மைகளின் பின்னாலும்
ஏக நிச்சயமாக
அது ஒரு தேவதையைப்போல
அழகிய கடல்
ஒரு முனிவரைப் போல
அமைதியானது
வானத்தின் நீலமெல்லாம் கரைந்து
கடலானது போல நிறம்
மனிதர்கள் வருகிறார்கள் போகிறார்கள்
நகரங்கள் கட்டப்படும் இடிக்கப்படும்
ஆனால் கடல்
வருவதுமில்லை போவதுமில்லை
யுத்தமோ சமாதானமோ
எதுவும் அதைத் தீண்டுவதில்லை"

(நிலாந்தன், மண்பட்டினங்கள்).

கோடையிற் காய்ந்து மாரியிற் துளிர்க்கிற இந்தச் சிறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலேரியின் கரைகளைச் சுற்றி சிறிய குடியிருப்புகளும் சனங்களின் காலடிச் சுவடுகளும் பன்னெடுங்காலமாய் நீக்கமற நிறைந்திருந்தன. 2009 மேயில் வரலாற்றின் தீராச் சோகத்தை யெல்லாம் நந்திக் கடல் தன்னுள் கொண்டபோது அவையும் அந்தத் துயருக்குள் புதையுண்டு போயின.

இன்றோ, காய்ந்து வரண்ட அந்தக் கரையோரங்களில் துக்கமே விளைந்து கிடக்கிறது.

"இதோ
மனிதர்கள் மறுபடியும் வருகிறார்கள்
இனி
மண்ணால் ஒரு பட்டினத்தைக் கட்டுவார்கள்
ஓ... கடலே
மூத்த கடலே
அன்பான பெருங்கடலே
நீ மண்பட்டினங்களின் உறவாயிரு..."

(நிலாந்தன், மண்பட்டினங்கள்).

என வரலாற்றில் நம்பிக்கை கொள்வதைத் தவிர, என்னதான் செய்யும் மனித மனம்?

2013-ஜனவரி

00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்கச்சி

## காணாமல் போன வல்லியக்கன்

"வல்லியக்கனைத் தெரியுமா? ஒரு காலம் உங்கள் ஊரில் வல்லியக்கன் என்றொரு கோயில் இருந்தது. பிறகு அது மருவி அந்தக் கோயில் கிருஷ்ணன் கோவிலாகி விட்டது" என்றார் பொ.ரகுபதி. பொ.ரகுபதி இலங்கையின் புகழ்மிக்க வரலாற்றுத்துறைப் பேராசிரியர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் வல்லியக்கன் என்ற சிறுதெய்வ வழிபாட்டைப் பற்றி அவர் செய்த ஆய்வு "வல்லியக்கனும் வல்லிபுரநாதரும்" என்ற நூலாக வந்திருக்கிறது. ரகுபதி குறிப்பிட்டுள்ளதைப் போல வல்லியக்கன் கோயில் இருந்த இடத்தில் இப்பொழுது மல்வில் கிருஷ்ணன் குடியமர்த்தப்பட்டிருக்கிறார். வல்லியக்கனை வழிபட்டவர்கள் இன்று அங்கேயில்லை. பதிலாக இப்பொழுதிருக்கும் கிருஷ்ணன் கோவிலுக்கு ஏகப்பட்ட வர்கள் பங்காளர்களாக இருக்கிறார்கள். இயக்கச்சி, பூநகரி, பேராலை, பளை, ஊர்வணிகன்பற்று, முகாவில், மாசார், கோவில்வயல் சங்கத்தார்வயல், ஆழியவளை உடுத்துறை என இயக்கச்சியிலும் இயக்கச்சியைச் சூழவுள்ள இடங்களிலும் இந்தப் பங்காளர்கள் உண்டு. பச்சிலைப்பள்ளி என்றிருந்த பெரும்பிரதேசம் இன்று நிர்வாக ரீதியாகக் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு என மூன்றாகப் பிரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. அதைப்போல இயக்கச்சியில் இப்பொழுது இயக்கச்சி, கோவில்வயல், முகாவில் என மூன்று கிராம அலுவலர் பிரிவுகளும் வந்து விட்டன. வல்லியக்கன் கோயில் மாறியதைப் போல பிரதேசத்தின் வரைபடமும் மாறிவிட்டது. ஊரில் ஒழுங்கைகளும் தெருக்களும் வீடுகளும் மாறிவிட்டன. ஆனாலும் கிருஸ்ணன் கோயிலின் உரித்து மாறவில்லை. எல்லா ஊர்க்காரர்களும் இன்னும் தங்கள் பங்குத்திருவிழாவைச் செய்கிறார்கள். கிருஷ்ணன் கோயில் என்ற அடையாளம் துலங்கத்தொடங்க வல்லியக்கன் கோயில் பற்றி யாருக்குமே தெரியாமல் போய்விட்டது. அப்படியே பச்சிலைப்பள்ளி என்ற பெரும் பிரதேசத்தைப் பற்றிய நினைவுகளும் அடையாளமும் மாறிவிட்டது. பச்சிலைப்பள்ளியின் மையமாக இருக்கும் பூர்வீக ஊரான இயக்கச்சியின் அடையாளமும் பெருமளவுக்கும் மாறியே விட்டது.

இப்பொழுது நீங்கள் காணும் இயக்கச்சி முன்பு இருந்ததல்ல. 1950 களுக்கு முன், இயக்கச்சியிலிருந்து "சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயத்துக்குச் (Nature Park) செல்லும் வீதியே இருக்கவில்லை. அப்பொழுது அது காட்டின் நடுவே செல்லும் ஒரு மணல் நிரம்பிய வண்டிப்பாதை மட்டும்தான். 50 களில் அந்தப் பாதையின் தெற்குப் புறத்தில் காடாக இருந்த அரச நிலம் சங்கத்தார்வயலின் தென்பகுதியில் - வீரபத்திரர் கோவியலடியிருந்த மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. அதற்குப் பிறகே சுண்டிக்குளம் தெரு அமைக்கப்பட்டுத் தார் வீதி வந்தது. அதைத் தார் வீதியாக்கியவர் அன்று சாவகச்சேரித் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வி.குமாரசாமி. அப்பொழுது கிளிநொச்சி என்ற தனித் தொகுதியும் இருக்கவில்லை. கிளிநொச்சி தனி மாவட்ட மாக்கப்படவும் இல்லை. இன்றிருக்கும் ஊரின் முகம் இப்படித்தான் வந்தது. அதற்கு முன் இப்பொழுதிருக்கும் சங்கத்தார்வயல் காடாகவும் இன்று காடாக இருக்கும் சங்கத்தார்வயல் ஊராகவும் இருந்தன. இன்றிருக்கும் வை.எம்.ஸி.ஏ. குடியிருப்பு (விநாயகர் குடியிருப்பு) தென்னிந் தியத்திருச்சபையின் குடியிருப்பு எதுவும் அன்றில்லை. (இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு குடியிருப்புகளும் 1983 இல் தென்னிலங்கையில் நடந்த வன்முறையினால் இடம்பெயர்ந்த வந்தவர்களுக்காக கிறிஸ்தவ அமைப்புகளினால் உருவாக்கப்பட்டவை). கொற்றாண்டார்குளம், தோவண்டை, சங்கத்தார்வயல், கோவில்வயல், ஊர்வணிகன்பற்று, முகாவில், கோண்டாவில் என இயக்கச்சியை மையப்படுத்திய கிராமங்களில் நிறையக் குடும்பங்களிருந்தன. எல்லாமே கூட்டுக்குடும்பங்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் 10 ற்குக் குறையாத ஆட்கள். எட்டுப் பத்துப் பிள்ளைகளைப் பெறாதவர்களே அன்றில்லை. இப்பொழுது தோவண்டையிலும் கொற்றாண்டார் குளத்திலும் யாருமேயில்லை. வேறு ஊர்களுக்குப் பெயர்ந்து விட்டார்கள். சிலர் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குப் போய்விட்டனர்.

முன்னர் இருந்த இயக்கச்சி ஒரு பச்சை ஊர். காடும் மரமுந்திரித் தோப்புகளும் சவுக்குமரங்களின் பூங்காவும் தென்னந் தோட்டங்களும் பனங்கூடல்களும் நிறைந்த பச்சை. போதாக்குறைக்குப் பூவரசும் கிளுவையும் வேலிகளாக நிற்கும் பெரிய வளவுகள் இருந்தன. ஒவ்வொரு வளவுகளிலும் வடக்கு வீடு, கிழக்கு வீடு, தலைவாசல், அடுப்படி அல்லது குசினி என்று நான்கு வீடுகளுக்குக் குறையாமல் வீடுகள் இருந்தன. இது போக, மாட்டுக்கொட்டில் அல்லது வண்டில் கொட்டில் என்று எருத்து மாடுகளைக் கட்டுவதற்காகவும் வண்டில்களை விடுவதற்காகவும் தனியாக ஒரு கொட்டகை பெரும்பாலான வளவுகளில் இருந்தது. வேலிகளைப் பனை ஓலையால் அல்லது பனை மட்டையினால் அடைத்திருந்தார்கள். சில கிடுகினால் அடைக்கப்பட்டிருந்ததும் உண்டு. சில வேலிகள் பாவட்டை அலம்பலினால் அல்லது கினியா அலம்பலினால் அடைக்கப்பட்டன. மணல் நிறைந்த ஒழுங்கைகளில் மாடுகளைச் சாய்த்துக் கொண்டு ஊர் ஆட்கள் போய் வருவர். சீசன் காலத்தில் வெளியிடங்களிலிருந்து மாடுகளைச் சாய்த்துக் கொண்டு வருவோரும் உண்டு. ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பலாலி, வளலாய், இடைக்காடு, அச்சுவேலிப் பகுதிகளிலிருந்து இப்படி வருவர். அது அங்கே பயிர்செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம். இயக்கச்சியில் புல் செழித்திருக்கும் நேரம். எனவே இந்த மாதிரி ஒரு ஏற்பாடு. அறுவடை முடிந்த பிறகு இந்த மாடுகளை கண்டாவளைக்கும் வட்டக்கச்சிக்கும் சாய்த்துக்கொண்டு போவார்கள். தவிர, சந்தைக்குப் போனாலென்ன வயலுக்குப் போனாலென்ன எதுவும் இந்த மணல்தெருக்களின் வழியேதான். மணல் தெருக்களில் சைக்கிளோ, வண்டி வாகனங்களோ கிடையாது. கால்நடையே. கால் நடை என்றால் தலைச்சுமையே. நான்கூட பத்துப் பதினைந்து வயதில் (1970 களில்) இருபது முப்பது தேங்காய்களை தலையில் சுமந்து இந்த மணல்தெருக்களில் கால்கள் புதையப் புதைய நடந்து சென்றிருக்கிறேன். மணல் தெருக்களின் இரண்டு பக்கமும் பெரும்பாலும் ஓலைக் குடிசைகளே இருந்தன. பனையோலையினால் அல்லது தென்னங்கிடுகினால் வேயப்பட்ட குடிசைகள். எங்காவது ஒன்றிரண்டு ஓட்டு வீடுகள். இடையிடையே மிளகாயும் வெங்காயமும் கத்திரியும் விளையும் தோட்டங்கள். அங்கே பயற்றங்கொடியும் புகையிலையும் வெண்டியும் செழித்தி ருக்கும். தோட்டங்களின் மத்தியில் துரவுகள். இந்தத் துரவுகளிலிருந்து பனையோலைப்பட்டைகளால் தண்ணீரை அள்ளிப் பயிருக்கு இறைப்பார்கள். எல்லாம் இளவேனில் வரையில்தான். வைகாசியில் வீசும் சோழகக் காற்றோடு பயிர்கள் வாடத்தொடங்கும். வைகாசிக் காற்று காண்டா வனத்தோடு உச்சங்கொள்ளப் பயிர்கள் வாடும். மணற்தரையில் கைப்பட்டையினால் இறைத்து மாளாது. ஊரின் ஓரங்களில் வயல்வெளிகளும் சிறு குளங்களும். அநேகமாக எல்லோரும் குளங்களிலேயே குளித்தனர். (இப்பொழுது யாருமே குளங்களில் குளிப்பதில்லை. இருபது ஆண்டுகளுக்குள் வந்த வினை இது). வயற்கரைகளில் அல்லது குளக்கரைகளில் கண்ணகி, அண்ணமார், வீரபத்திரர், வயிரவர், காடேறி, பிள்ளையார் என்று சிறிய கோயில்கள். எங்கே பார்த்தாலும் வானைத்தைத் தொட்டுவிடத் துடித்துக் கொண்டு நிற்கும் பனங்கூடல்கள். பாதிப்பனைகளில் கள்ளு நிரம்பிய சிறுமுட்டிகள். ஓரங்களில் காடு. இடையிடையே பொட்டல் வெளிகள். நிழல் நிரம்பிய தெருக்களும் தென்னந்தோப்புகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரோடு யாரையும் இணைத்து விடும்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன், ஊரில் நான்கைந்து கிணறுகள் மட்டுமே இருந்தன. மற்றதெல்லாம் பூவல் என்று சொல்லப்படும் வயற்கரை, குளக்கரை நீர்க்குழிகளே. அந்தக் குழிகளில் இருந்தே குடிப்பதற்கும் குளிப்பதற்குமாக நீரை எடுத்தனர் ஊர்வாசிகள். சில நீர்க்குழிகளை பனங்கொட்டு களைப் பயன்படுத்தி கிணறு போல அமைத்திருந்தார்கள். ஆனால் ஊற்றுப் பெருக்குள்ள நிலம் என்ற படியால் சனங்களுக்கு தண்ணீர் ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. பிறகு ஒவ்வொரு குறிச்சியிலும் கிராமசபை (பிரதேச சபை)யினால் பொதுக்கிணறுகள் கட்டப்பட்டன. இதைச் சனங்கள் "வீசிக்கிணறு" என்றார்கள். Village Council என்பதன் சுருக்கமே VC. வயலும் தோட்டமும் துரவும் காடும் என்றே பெரும்பாலானவர்களின் தொழிலும் வாழ்க்கையும் கழிந்தது. கூத்தும் பாட்டும் ஆட்டமுமாகப் பொழுதுகள் கழிந்தன. காட்டுப்பழங்களுக்கும் வேட்டைக்கும் குறைச்சல் இல்லை. சிலர் ஆனையிறவிலும் குறிஞ்சாத்தீவிலும் இருந்த உப்பளத்துக்குப் போனார்கள். இடைக்காட்டிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் வண்டில் கட்டி வந்து கோடாலிப்பிடி, மண்வெட்டிப் பிடி, இடிகட்டை, மாடு கலைப்பதற்குத் துவரந்தடி என்றெல்லாம் வெட்டிக்கொண்டு போனார்கள். போகும்போது, ஒடியல், புழுக்கொடியல், நெல், இறைச்சி வத்தல், தேன் என்று இயக்கச்சியில் கிடைக்கிற "அயிற்றங்களையும்" கொண்டு போனார். அங்கிருந்து வரும்பொழுது குரக்கன், மரவெள்ளிக் கிழங்கு, கரணைக்கிழங்கு. சாமை என்ற அயிற்றங்களைக் கொண்டு வருவார்கள். அது பெரும்பாலும் பண்டமாற்றுக்காலம்.

இதைப்போலத்தான் இயக்கச்சிக்கு வடக்கே இருக்கும் ஆழியவளை, உடுத்துறை, வெற்றிலைக்கேணிக் கடற்கரைப் பக்கத்திலிருந்து மீனும் கருவாடும் கொண்டு வரும் ஆட்கள் போகும் பொழுது நெல்லும் ஒடியலும் மாங்காயும் மரக்கறிகளும் கொண்டு போவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா வீடுகளிலும் தென்னையும் மாவும் புளியும் காய்த்துக் கொட்டின. அன்று மண்ணும் அப்படி. மனிதர்களும் அப்படி. சனங்கள் உழைக்க உழைக்க மண்ணும் செழித்தது. ஆனால், சனங்களின் வாழ்க்கை அப்படியொன்றும் பிரமாதமாக இருந்தது என்றில்லை. உழைத்ததையெல்லாம் குடித்தும் கூத்தாடியும் செலவழித்தார்கள். போதாக்குறைக்கு பொங்கலென்றும் திருவிழா என்றும் கூத்து என்றும் கொண்டாடினார்கள். ஒவ்வொன்றும் கிழமைக்கணக்காக நடந்தன. இப்படி வாரக்கணக்காக இந்த மாதிரிக் கூத்தாடிக் கொண்டாடினால், வேறு எதில்தான் உருப்பட முடியும்? கல்வியில் யாருக்கும் நாட்டமிருக்கவில்லை. படிப்பறிவு குறைவாக இருந்தால் எந்தச் சமூகத்தினாலும் வாழ்க்கையை முன்னகர்த்த முடியாது. இலங்கையின் ஆதிக்குடிகளில் ஒன்றான இயக்கர்கள் இயக்கச்சியில் இருந்தாக வரலாற்றா சிரியர்கள் சொல்கிறார்கள். இயக்கர்கள் இருந்தார்களோ இல்லையோ இயக்கச்சி மிகப் புராதன காலத்திலிருந்தே மக்கள் வாழ்ந்து வருகின்ற ஒரு மையம்தான். இப்படி மிகப் பழமையான ஒரு மையமாக, நீண்டகாலமாகவே மக்கள் வாழ்கின்ற இடமாக இருந்தபோதும் புராதன சுவடுகள் என்று ஊரில் அதிகம் எதுவுமில்லை. முதிய மரங்களும் பழைய கோயில்களும் சிறு குளங்களும் வயல்வெளிகளும்தான் புராதனச் சின்னங்கள். எல்லாமே நிலத்தோடிணைந்தவை. கோயில்கள் கூட அப்படித்தான். நிழலுள்ளுறைந்த தெய்வங்கள். மரங்களினடியில் உறங்கியவை. கண்ணகி, வயிரவர்இ காளி, கிருஸ்ணன், அம்மன்... என்ற மாதிரி. பெருங்கட்டிடங்கள் என்றில்லை. நானூறு ஆண்டுகளுக்குட் பட்ட முருகைக் கற்கட்டிடங்கள் அல்லது சுண்ணாம்புக்கற் கட்டிடங்கள். பாப்பாங்குளம் பிள்ளையார், சின்னமண்ட லாய்ப்பிள்ளையார், மண்டலாய்ப்பிள்ளையார், இயக்கச்சி கண்ணகி அம்மன், திரியாய் அம்மன், மல்வில் கிருஸ்ணன் இவ்வளவும்தான் இந்த மாதிரிக் கட்டப்பட்டிருந்த கோயில்கள்.

நாங்கள் சிறு வயதில் இருந்தபோது, இயக்கச்சியில் ஒரு சிறிய கோட்டை பாதி சிதைந்த நிலையில் இருந்தது. அதைவிடச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றுப் பெரிய கோட்டை ஆனையிறவில் இருந்தது. இன்னொன்று வெற்றிலைக்கேணியில். பிறகுதான் தெரிந்தது மூன்றும் 1700களில் ஒல்லாந்தர்கள் கட்டியவை என்று. முருகைக்கல்லினால் கட்டப்பட்ட இந்தக் கோட்டைகளுக்கு Pyl (இயக்கச்சி) Basurta (வெற்றிலைக்கேணி) Bascula (ஆனையிறவு) என்று பெயருமிட்டிருந்தார்கள். இதில் ஆனையிறவுக் கோட்டை மட்டுமே கொஞ்சம் உருப்படியாக மிஞ்சியிருந்தது. அந்தக் கோட்டையையே "வாடி வீடு" என்று விருந்தினர்களுக்கான விடுதியாக பின்னளில் மாற்றியி ருந்தார்கள். பிறகு அது படைவீடாக மாறியது பெரிய கதை. இயக்கச்சியிலிருந்த Pyl கோட்டையிலிருந்து ஆனையிறவுக் கோட்டைக்குப் போவதற்கு ஒரு வழியிருந் திருக்கிறது. அநேகமாக அந்த நாட்களில் இதில் ஒல்லாந்தப் படைகள் பதுங்கு அகழியை அமைத்திருந்தன. காலப் போக்கில் அந்தப் பதுங்கு அகழி தூர்ந்து போயிருக்கலாம். ஆனாலும் சனங்கள் இன்னும் அந்தச் சுரங்கப் பாதை இருக்கிறது என்றே நம்பினார்கள். இயக்கச்சிக் கோட்டையில் அப்படியொரு சுரங்கம் உண்டென்றும் அதில் இறங்கினால் ஆனையிறவில் போய் ஏறலாம் என்று சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். இந்த நம்பிக்கையை யாராலும் மாற்றவே முடியவில்லை. இந்த வழியில்தான் பிறகு சந்தைப் பாதை ஒன்று வந்து, சங்கத்தார்வயல் ஊடாக (அந்தநாட்களில் பாதிரி காட்டில் இருந்து வீரபத்திரர் கோயில்வரையில்தான் அதிகமானவர்கள் இருந்தனர்) ஆனையிறவுக்குச் சனங்கள் போய்வந்தனர். இப்பொழுது அந்தப் பாதை இருந்த இடமேயில்லை. இடைக்காலத்தில் இந்தப் பாதையை ஆனையிறவு முற்றுகைக்காகப் போராளிகளும் போராளிகளை எதிர்ப்பதற்காகப் படையினரும் பயன்படுத்தினார்கள். பழைய வரைபடங்களில் மட்டும் இந்தப் பாதையின் அடையாளம் உள்ளது.

இயக்கச்சியில் இருந்த Pyl கோட்டையை "வாடியடி" என்று சொல்வோம். இந்த வாடியடியிலிருந்து இரவில் யாழ்ப்பாணக் கோட்டைக்குப் பக்கத்திலிருக்கும் முனியப்பர் கோவிலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனி போய் வருவதாகப் பேசுவார்கள். அந்த முனியை நேரில் பார்த்ததாகக் கதை விட்டவர்களும் உண்டு. அதை நம்பியவர் களும் உண்டு. இதனால் அந்த நாட்களில் பிந்திய இரவில் யாரும் நடமாடுவதில்லை. முனிக்குப் பயந்த ஊர் பத்து மணிக்கெல்லாம் அடங்கி உறங்கி விடும். அல்லது உறைந்து விடும்.

இந்த முனிக்கதையை வேறு மாதிரிச் சொல்வார் பெருமாள் இரத்தினசிங்கம். இரத்தினசிங்கம் 1970களில் உயிர்ப்பான பல விசயங்களில் இந்த மாதிரி வித்தியாசமாகச் சிந்தித்த ஒருவர். இன்னொருவர் இயக்கச்சி மணியம். இயக்கச்சி மணியம் ஒரு இடதுசாரியாக வாழ்ந்து பலராலும் அறியப்பட்டார். ஆனால், இரத்தினசிங்கம் அப்படியல்ல. என்றாலும் அவரை அறிந்தவர் களுக்கும் அயலூர்களுக்கும் அவர் மறக்கமுடி யாதவர். ஒல்லாந்தரின் காலத்திலும் அதுக்குப் பிறகு பிரிட்டிஷ்காரரின் காலத்திலும்தான் இந்த முனிக்கதை உருவானது என்றார் இரத்தினசிங்கம்.

எப்படித் தெரியுமா?

"அந்த நாட்களில் இயக்கச்சியிலும் ஆனையிறவிலும் இருந்த கோட்டைகளில் இருந்து யாழ்ப்பாணம் கோட்டைக்கு ஒல்லாந்தப்படைகளும் பிறகு பிரிட்டிஷ் படைகளும் போய் வந்தன. இந்தக் கோட்டைகளிலும் படைகள் இருந்தன. இப்படி ஊரைச் சுற்றியிருக்கும் படைகளையும் நடமாடும் படையினரையும் ஊர்மக்கள் விரும்பவில்லை. அவர்கள் தங்களின் வெறுப்பைக் காட்டினர். இதற்குள் வன்னியி லிருந்தும் இடையிடையே தமிழர்களின் படையெடுப்புகள் நடந்து கொண்டிருந்தன. இதெல்லாம் அந்நியப்படைகளுக்கு உவப்பாக இருக்கவில்லை. இதனால் அவர்கள் சனங்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி, அவர்களை அச்சத்தில் உறைய வைக்க விரும்பினார்கள். இந்தக் கோட்டைகளில் இருந்து யாழ்ப்பாணக் கோட்டைக்குப் படைகள் போய்வரும்போது இடையில் யாராவது அகப்பட்டால் அல்லது எதிர்ப்பட்டால் அவர்கள் மீது தாக்குதல் நடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப் படைகள் போவதையே "முனி போகிறது" என்று சனங்கள் பூடகமாகத் தங்களின் மொழியில் சொல்லி வீடு களுக்குள் ஒடுங்கினார்கள். அந்நியப்படைகளின் தாக்குதலை "முனி அடிச்சிட்டுது" என்றார்கள். "படைகளின் நட மாட்டத்தை முனி நடமாட்டம்" என்றனர். இதுவே "அந்தப் படைகள்" இல்லாமற் போன பிறகும் சனங்களிடம் ஒரு நம்பிக்கையாக "முனிக்கதை"யாக - உருவாகி விட்டது".

ஒல்லாந்து மற்றும் பிரிட்டிஷ் படைகள் போனாலும் இயக்கச்சியை விட்டுப் படைவாசம் நீங்கவில்லை. இலங்கை இராணுவம் 1960களிலேயே இயக்கச்சியில் படைமுகா மொன்றை அமைத்தது. இந்தியாவிலிருந்து அப்போது "கள்ளக்கடத்தல்" என்ற பேரில் கஞ்சாவும் அபினும் பிற இந்தியப் பொருட்களும் சட்டவிரோதமாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுவதைத் தடுக்கவே இந்த முகாமில் படையினர் இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்கு எதற்காக படையினர்? பொலிஸ் போதாதா? என்று நாம் கேட்கலாம். இந்தக் கேள்விக்கு யார்தான் சரியான பதிலைச் சொல்வார்? கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்காக வந்த படையினர் இயக்கச்சிச்சிச் சந்திக்கு தென்மேற்குப் பக்கமாக இருந்த வனவள இலாகாவுக்குச் சொந்தமான காட்டுப் பகுதியில் முகாமை அமைத்திருந்தனர். இது ஊரின் ஒதுக்குப் புறம். தண்ணீருக்கும் கள்ளுக்குமாக ஊருக்குள் படையினர் வருவார்கள். கடிதத்தை எடுப்பதற்காக அல்லது மணி யோடரில் கசை அனுப்புவதற்காக பளைக்குப் போவர்கள். மற்றும்படி அவர்கள் தங்கள் பாடு. ஊரவர்கள் தங்கள் பாடு என்ற மாதிரி இருந்தது. ஆனாலும் இந்த "ஆமிக்காம்"புக்கு உள்ளுர் ஆட்களே விறகு பறித்தார்கள். அது மாட்டு வண்டிலில் பொருட்களை ஏற்றும் காலம். வண்டிலில் முகாமுக்கு விறகைப் பறிக்கப்போகின்றவர்கள், திரும்பி வரும்போது, "ரின்மீனை"யும் "ரின்பாலை"யும் கொண்டு வந்தார்கள். எங்கள் வீட்டுக்கும் மாமா இரண்டையும் கொண்டு வந்தார். மாமா வேட்டைக்காரன். அவர் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்டையாடும் காட்டு விலங்குகளின் இறைச்சியைப் படையினருக்குக் கொடுத்தார். படையினர் பதிலுக்கு "மீன்ரின்"னையும் "பால்ரின்"னையும் மாமாவுக்குக் கொடுத்தார்கள். அதுவரையிலும் அதைப் பற்றி அறியாதிருந்த எங்களுக்கு அது ஒரு ஆச்சரியம். ஆனால், அதையெல்லாம் வீட்டில் அம்மாவும் ஆச்சியும் ஏற்கவில்லை. மாமாவை விரட்டும் அளவுக்கு அவர்கள் கெம்பினார்கள். இப்படித்தான் ஊரில் பொதுவாகவே இந்த இரண்டையும் எதிர்த்தார்கள். "நாறிய மீனையும் பழைய பாலையும் எவனாவது சாப்பிடுவானா" என்ற மாதிரி. என்றாலும் எங்களுக்குக் கொண்டாட்டமே.

பிறகு, நாட்டு நிலைமை பிழைக்கத் தொடங்க, இயக்கச்சியில் இருந்த படையினர் மீண்டும் வாடியடி (Pyl) என்ற ஒல்லாந்தக் கோட்டைக்கு மாறிப்போனார்கள். அநேகமாக அது ஜே.வி.பியின் கிளர்ச்சிக்காலம். 1970 இல் மீண்டும் வாடியடியில் ஒரு சிறிய முகாம் வந்தது. பத்துப்பேர் வரையில் அதிலிருந்தார்கள். இன்னொரு தொகுதிப் படையினர் ஆனையிறவுக்குப்போய் வாடி வீட்டில் குந்தினார்கள். பிறகு அதுவே ஆனையிறவுப் படைத்தளமாகியது. இயக்கங்கள் வளர்ந்து கொலோச்சத் தொடங்க, இயக்கச்சி வாடியடியில் இருந்த படையினர் தமக்குப் பாதுகாப்பில்லை என நகர்ந்து ஆனையிறவிற்குப் போய்ச் சேர்ந்தனர். ஊரில் படையில்லை என்றாலும் படை நடமாட்டம் இருந்தது. இருந்தும் ஈரோஸ் இயக்கத்தினர் ஒரு பயிற்சி முகாமை 1986இல் இயக்கச்சி கண்ணகி அம்மன்கோயிருக்குப் பக்கத்தில் நடத்தினார்கள். இன்னொரு முகாமை வெள்ளைவெளியில் வைத்திருந்தார்கள்.

வாடியடியை விட்டுப் படையினர் போன கையோடு இயக்கச்சி வாடியடி ஊடாக சுண்டிக்குளம், கொம்படிப் பாதையைத் திறந்தன இயக்கங்கள். ஆனையிறவைக் கடந்து செல்ல முடியாத போராளிகள் இந்த வழியையே பயன்படுத்தினார்கள். இந்தப் பாதையை முன்னர் கள்ளமரம் கடத்திகள் (சட்டவிரோதமாகக் காட்டு மரங்களைக் கடத்துவோர்) பயன்படுத்தி வந்ததால் அவர்களிற் சிலரை வழிகாட்டிகளாக இயக்கங்கள் வைத்துக்கொண்டதும் உண்டு. காடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புழுதியுமாக இருந்த வழியே கடுமையான சிரமங்களோடு பயணங்கள் நடந்தன. அந்த நாட்களில் போராளியாக இருந்த அத்தனைபேருக்கும் இந்த வழி நல்ல பரிச்சயம். யாழ்பாணத்தி லிருந்து வன்னிக்கும் கிழக்கு மாகாணத்திற்கும் இந்த வழியூடாகவே ஆயுதம் உட்பட அத்தனை பொருட் களையும் இயக்கங்கள் கொண்டு போய்வந்தன. அதைப்போல வெளிமாவட்டங்களிலிருந்து இந்த வழியாலேயே யாழ்ப் பாணத்துக்கு இயக்கங்களின் தளபதிகளும் போராளிகளும் வந்து போனர்கள். இதனால், எந்த நேரத்திலும் இயக்கச்சிச் சந்தி இயக்கங்களின் சந்தியாக இருந்தது. இயக்கங்களின் சந்தியைப் படைத்தரப்பு அப்படிச் சும்மா இருக்க லேசில் விடுமா? ஆனையிறவில் இருந்து இயக்கச்சியை நோக்கி படையெடுப்பும் படையெடுப்பைச் செய்ய முடியாத போது எறிகணை, ஏவுகணைகளும் வரத்தொடங்கின.

இதெல்லாம் நடந்தால் ஊரில் யார்தான் நிம்மதியாக இருக்க முடியும்? ஊர்தான் எப்படியிருக்க முடியும்? துப்பாக்கிச் சூடுகளும் அகாலமரணங்களும் தாரளமாக நடந்தன.

இடம்பெயர்ந்தனர் சனங்கள். அழிந்தது ஊர். இயக்கர்களின் காலத்திலிருந்தே அடியடியாக வாழ்ந்து வந்த மக்களும் அறுந்து படாத கால நீட்சியாக இருந்து வந்த ஊரும் சிதைந்த நிலை. காலம் முழுதும் பூத்தும் காய்த்தும் கனிந்தும் நின்ற மரங்களெல்லாம் அழிந்தன. தோட்டங்களில் காட்டுச் செடிகள் முளைத்தன. வயல்களில் முள்ளி முளைத்தது. வீடுகளில் ஷெல்லும் குண்டும் வீழ்ந்தன. கோவில்களில் பூசையில்லை. போர்க்களமாகிய இயக்கச்சியில் ஆனை யிறவுக்கு தண்ணீரை எடுப்பதற்காக இருந்த கிணற்றைத் தவிர, வேறு எதுவுமே மிஞ்சவில்லை. சனங்கள் வாழ்ந்த வரலாற்று நிலத்தில் யுத்தகளம் விரிந்தது. இயக்கச்சியில் தமிழ்ப்படை (விடுதலைப்புலிகள்) நிலை கொண்டது.

பாதுகாப்புக்கு ஏற்ற கேந்திர மையங்களின் கதை உலகம் முழுதும் இப்படித்தான். இந்தக் கேந்திரத்தில் இருக்கும் மக்கள் அடுப்பிலே வைத்த சட்டியின் நிலையில்தான். இந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தை எதிர்கொள்ளும் போதுதான் தெரிகிறது, அந்த நாட்களில் - அந்நியரின் படைகள் இருந்த காலத்திலும் படையெடுப்புக்காலத்திலும் - எங்கள் முன்னோர்கள் எப்படியெல்லாம் பாடுகளைச் சுமந்திருப்பார்கள் என்று.

இதேபோலத்தான் இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் "காப்பிரிகள்" என்ற ஆபிரிக்கப் படையினரை பிரிட்டிஷார் கொண்டு வந்து இயக்கச்சியில் இறக்கியிருந்ததாகவும் அந்தக் "காப்பிரிப்படை"களுக்கு அஞ்சிப் பெண்கள் எல்லாம் வீடுகளை விட்டே வெளியே வர முடியாமல் இருந்ததாகவும் ஆச்சி பல கதைகளைச் சொன்னா. "பாருங்கள், காலம் முழுதும் இப்பிடியே படைகளோடும் பாடுகளோடும் இயக்கச்சிச் சனங்கள் வாழ்ந்து தொலைக்க வேண்டியிருப்பதை."

இயக்கச்சியிலிருந்து சனங்கள் இடம்பெயர்ந்தாலும் போர் ஓயவில்லை. ஆனையிறவுத் தளத்தில் நிலைகொண்டிருந்த படையினரைச் சுற்றிவளைத்துப் புலிகள் தாக்கினார்கள். 1990 இல் ஒரு பெரிய தாக்குதல். பிறகு1991 இல் இன்னொரு பெரிய போர். அந்தப் போரை முறியடிப்பதற்காக இயக்கச்சியின் வடகிழக்கில் உள்ள கட்டைக்காடு கடற்கரையில் படையினர் தரையிறக்கப்பட்டனர். அதுவரையிலும் முற்றுகையிலிருந்த ஆனையிறவுப் படைத்தளத்தை நோக்கிப் படையினர் நகரத்தொடங்க பெரும்போர் மூண்டது. அந்தச் சமருக்கு "ஆகாய கடல் வெளிச் சமர்" என்று பெயரிட்டுப் புலிகள் தாக்குதலை நடத்தினார்கள். 18 நாட்கள் நடந்த கடுமையான சமரின் பின்பு ஆனையிறவுத் தளத்தை கட்டைக்காடு வரை இணைத்தது படைத்தரப்பு. ஒல்லாந்தர், பிரிட்டிஷார் கால படை உபாயத்தைப் பயன்படுத்தி யாழ்ப்பாணக் குடா நாட்டைத் தனிமைப்படுத்தியது படைத்தரப்பு. யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் பிற இடங்களுக்குமான பாதை முழுதாகத் தடைப்பட்டது. அதற்கு முன்னரே பூநகரிப்பாதையையும் படையினர் தடுத்திருந்ததால், இயக்கச்சி வாடியடி, கொம்படி, ஊரியான் என்ற பின் வழிப்பாதையின் கதையும் முடிந்தது. அதற்கு முன் மாற்றுப்பாதையாக இந்தப் பாதையையே சனங்கள் பயன்படுத்தினார்கள். அப்போது கொம்படிப் பாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நகரத்தின் சாலையைப் போல சனங்களால் நிறைந்தி ருந்தது. அப்படிப்பயன்படுத்தும்போது, புல்லாவெளி, மண்டலாய்ப் பக்கமெல்லாம் ஒரே சனப் புழக்கமாயிருந்தன. இல்லையென்றால் புல்லாவெளியில் பெருநாள் காலங்களிலும் மண்டலாயில் திருவிழாக்காலங்களிலும் மட்டுமே சனநட மாட்டத்தைக் காணலாம்.

*1991* இல் ஆனையிறவுப் படை முகாம் பென்னாம் பெரிய படைத்தளமாக மாறியது. அதற்குப்பிறகு, இயக்கச்சியில் வாழமுடியவில்லை. பிறகு *2000* ஆம் ஆண்டு புலிகள் மீண்டும் பெரியதொரு படைநடவடிக்கையைச் செய்து ஆனையிற வையும் இயக்கச்சியையும் அதனோடிணைந்த பகுதிகளையும் மீட்டார்கள். சனங்களும் மெல்ல மெல்ல ஊருக்கு வந்தனர். அழிந்த ஊரைக் கண்டு மலைத்தனர். அழுது புலம்பினால் மட்டும் ஆகுமா? மீண்டும் புழுதியிலும் வெயிலிலும் கோடையிலும் மாரியிலும் அலைந்து உழைத்தனர். புலிகள் மிகப் பெரிய பயிற்சித்தளமொன்றைப் புல்லாவெளிக்கும் மண்டலாய்க்கும் இடையில் உருவாக்கினர். சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்தில் இயக்கச்சி சற்றுச் செழித்தது. ஆனாலும் அது நீடிக்கவில்லை. *2008* இல் மீண்டும் போர் வெடிக்க, இடப்பெயர்வு. வன்னியின் இறுதிப்போர் அது. முகமாலையில் இருந்த படையினர் அங்கிருந்து வெளியேறி, கிளிநொச்சியில் நிலைகொண்டிருந்த மன்னார் வவுனியாப் படையினருடன் கைகோர்ப்பதற்காக முன்னேறினர். முப்பது ஆண்டுகளாக உக்கிர போர் நடந்த இயக்கச்சி-ஆனையிறவுப் பகுதியில் துப்பாக்கி வெடியோசைகளே இல்லாமல் படைகள் நகர்ந்தன. ஆனையிறவை மீட்பதற்காக என்று *4000* போராளிகள் வரையில் பலியாகியிருக்கிறார்கள். ஆனையிற வைப் பாதுகாப்பதற்காக *1000* படையினருக்கு மேல் பலியாகியிருக்கிறார்கள். இப்பொழுது? விதி எப்பிடி யெல்லாம் விளையாடும் என்பதை அப்போது பார்த்தேன். பிறகு ஆண்டாண்டு காலமாக நீக்கமற்றிருந்த சனங்கள் ஊர்நீங்கக் காடுறைந்தது ஊரில். விதிவலியதா?

போர் முடிய, மீண்டும் சனங்கள் இயக்கச்சிக்கு வந்தனர். அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள் குடியேற்றம் என்று சொன்னார்கள் பலரும். ஆனால், அது ஒரு மீள்நடுகையே. எல்லாமே அழிந்த ஊரில் ஒரு மீள்நடுகை. அது ஒரு கொடிய நாள். ஆனால், ஊருக்குத் திரும்பி வந்தவர்கள் தங்குவதற்கோ, சமைப்பதற்கோ, உறங்குவதற்கோ வீடுகளிருக்கவில்லை. சனங்கள் நட்டு வளர்த்த மரங்களும் இல்லை. ஊட்டி வளர்த்த பிராணிகளுமில்லை. தங்களின் ஊரிலே அந்நியரைப்போல, வந்தேறுகுடிகளைப்போல நடுத்தெருவில் தத்தளித்துக் கொண்டு நின்றனர் எல்லோரும். சமைப்பதற்கு பொருத்தமான பாத்திரங்களோ, புழங்கு பொருட்களோ கூட இல்லை. தலைமுறை தலைமுறையாக முன்னோர்கள் சேமித்து வைத்திருந்த முதுசொங்களில் ஒன்று கூட இல்லாத வாழ்க்கை.

யுத்தப் பிசாசு சாதாரணமான ஒன்றல்ல. அது சனங்களை மட்டும் தின்னவோ அலைக்கழிக்கவோ இல்லை. அவர் களுடைய ஆதார வாழ்க்கையையே சிதைத்தது. ஆனால், மிச்சமாக எது இருந்ததோ இல்லையோ அதை வைத்து வாழ்க்கையை ஆரம்பிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால், மீள்குடியேற்றம் தொடங்கிய அன்றுதான் நல்ல நாளும். மறுபடியும் எல்லோரும் ஊர் திரும்பினரென்றால்... அது மகிழ்ச்சியன்றி வேறென்ன?

ஊருக்கு வந்தவர்கள் மீண்டும் மெல்ல மெல்ல ஊரைக் கட்டியெழுப்பத் தொடங்கினார்கள். அல்லது சனங்கள் வர ஊரும் வந்தது. கடைகளும் தெருக்களும் வந்தன. ஒருபோதுமே இல்லாதிருந்த மின்சாரமும் வந்தது. அழிந்த வீடுகளையும் விட - ஓலைக்குடிசைக்குப் பதிலாக அதிமான வீடுகள் வந்தன. பயிர்கள் வளர்ந்தன. ஆடுகளும் மாடுகளும் வந்தன. அதை மேய்த்துக் கொண்டு நிற்கும் வாழ்க்கையும் வந்தது. கோயில்களெல்லாம் புத்தெழுச்சியாகக் கட்டப்பட்டு பூசையும் தேவாரமும் நடக்கிறது.

இத்தனைக்குப் பின்னும் இயக்கச்சியின் பழைய முகம் முழுதாக மாறாதிருக்கிறது. கிராமத்தின் சாயல் நீங்கவில்லை. ஆமாம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கச்சி என்னும் இராணுவக் கேந்திரம் கூட இன்னும் மாறாமல் வலுவானதாகவே உள்ளது. வரலாற்றின் வழி நெடுக தன்னுடலில் குருதியையும் கந்தகத்தையும் சுமந்த ஒரு முதிய கிராமம் இன்னும் தத்தளிப்பின் மத்தியில்தான் வாழும் விதியா?

வல்லியக்கன் கோயிலை வரலாறு காணுமா?

*00*

இயக்கச்சி பற்றிய மேலும் சில குறிப்புகள்:

1. கண்டி யாழ்ப்பாணம் வீதியில் உள்ள பெரியதொரு திருப்பமாக இருக்கும் இயக்கச்சிச் சந்தியில் வைத்துத்தான் **1987**இல் விஜயகுமாரணதுங்கவையும் ஒஸி அபயகுண சேராவையும் புலிகளின் யாழ்ப்பாணத்தளபதி கிட்டுவும் சகாக்களும் வரவேற்றனர்.

2. இயக்கச்சியிலிருந்தே ஆனையிறவு உப்பளத்திற்கும் வாடி வீட்டிற்கும் ஆனையிறவிலிருந்த மக்களுக்கும் குடிநீர் விநியோகம் நடந்தது.

3. யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் நுழையும்போது முதலில் வரவேற்கும் கிராமம் இயக்கச்சி. குடாநாட்டிலிருந்து வெளியேறுவோருக்கு விடையளிப்பதும் இயக்கச்சியே.

4. ஒரு காலம் யாழ்ப்பாணக்குடாநாட்டுக்கு ஊரடங்குச் சட்டம் என்றால் இயக்கச்சியும் அதில் சிக்கும். கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஊரடங்குச் சட்டமென்றாலும் அதில் இயக்கச்சியும அடங்கும்.

5. இரண்டாம் உலகயுத்தத்தில் காப்பிலிகள் என்ற அபரிக்கப்படைகள் கொஞ்சக் காலம் இயக்கச்சியில் நிலை கொண்டிருந்தன.

6. இயக்கச்சியை ஊடறுத்து யாழ்ப்பாணம் கண்டி நெடுஞ்சாலை (ஏ9) செல்கிறது. வடக்கையும் தெற்கையும் மட்டுமல்ல, யாழ்ப்பாணக்குடாநாட்டையும் நாட்டின் ஏனைய பகுதிகளையும் இணைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நல்ல தண்ணீர்க் கிணறுகள் இயக்கச்சியின் பெரும் சொத்து. இந்தக் கிணறுகளில் இருந்தே ஆனையிறவு, தட்டுவன் கொட்டி, குறிஞ் சாத் தீவு உப்பளம் போன்றவற்றுக்கு நீர் விநியோகம் நடந்தது.

8. இயக்கச்சியில் முன்னர் இயக்கர்களின் குடியிருப்பு இருந்ததாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

9. இயக்கச்சியில் இருந்த பெரிய தென்னந் தோப்புகள் அத்தனையும் யாழ்ப்பாணத்தவருடையவை. இந்தத் தோட்டங்களில் இயக்கச்சி வாசிகள் கூலியாக வேலை செய்தனர்.

2014- ஜனவரி

*00*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி

## மொட்டைக் கறுப்பனுக்கு வந்த சோதனை

பூநகரி மொட்டைக் கறுப்பன் அரிசி "என்று பரிஸிலும் ரொறென்ரோவிலும் சூரிச்சிலும் லண்டனிலும் இந்திய அரிசியை விற்கிறார்கள்" என்று சொல்லிக் கவலைப்படுகிறார் ஒரு புலம்பெயர் பூநகரிவாசி. வெளிநாடுகளில் மட்டுமல்ல, உள்ளூரில் வாழ்கின்ற பூநகரி வாசிகளே "பூநகரி அரிசி" என்ற பேரில் வேறு இடத்தின் அரிசியைத்தான் வாங்க வேண்டி யிருக்கு. அந்த அளவுக்கு வலுத்திருக்கிறது மோசடி. "உலகில் நடக்கும் ஆயிரமாயிரம் பென்னாம் பெரிய மோசடிகளில் இது எம்மாத்திரம்?" என்று நீங்கள் கேட்கலாம். ஒவ் வொன்றையும் உணர்வதைப் பொறுத்தே அதன் லாப நட்டங்கள் இருக்கும். க்ஷபூநகரி மொட்டைக்கறுப்பன் அரிசியை அறிந்தவர்களுக்கு அதைப்போலி செய்வதைச் சகிக்க முடியாது. ஒரு காலம் பூநகரி மொட்டைக்கறுப்பன் என்றால் அதற்கென்று தனி மவிசு இருந்தது. தனி ருசியே இதற்குக் காரணம். இப்பொழுது கலப்படம். கலப்படம் என்றாலும் பரவாயில்லை. மொட்டைக்கறுப்பனே இல்லாத ஒன்றை "மொட்டைக்கறுப்பன்" என்று சுத்தமாகப் பொய்சொல்லி விற்கிறார்கள். பலருக்கு அசல் அரிசியைத் தெரியாத நிலை வேறு. எல்லாவற்றுக்கும் காரணம் பூநகரி மொட்டைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பனைத் தேவையான அளவுக்கு விளைவிக்க முடிய வில்லை என்பதே.

மொட்டைக்கறுப்பன், பச்சைப்பெருமாள் என்ற இரண்டு வகை நெல்லினங்கள் அதிகமாகப் பூநகரியில் செய்கை பண்ணப்பட்டன. பாரம்பரிய இனங்கள். உவர் கலந்த களித்தறையில் - மண்டைக்கல்லாறு, கலவலப்பு ஆறு, குடமுருட்டி ஆறு போன்ற ஆறுகள் கொண்டு வந்து சேர்த்த வண்டல் மண்ணில், மானாவாரிக்கு அவை நன்றாக விளைந்தன. இரணைமடுக்குளம் கட்டப்பட்டு, கிளிநொச்சியில் நெற்செய்கை செய்யப்படுவதற்கு முன், யாழ்ப்பாணத்தின் அரிசித்தேவையைப் பூநகரிதான் பூர்த்தி செய்தது. யாழ்ப்பாணத்திலுள்ள பலருக்கும் அந்த நாட்களில் பூகரியில் காணிகள் - வயல்கள் - இருந்தன. (காணி இருந்தால் கலியாண உறவு தானாக வந்து விடும்). இதனால் பூநகரி மொட்டைக்கறுப்பனும் பச்சைப்பெருமாளும் யாழ்ப்பாணத் தாரிடம் மிகப் பிரசித்தம். யாழ்ப்பாணத்துக்கான அரிசி விநியோகத்தைக் கிளிநொச்சி எடுத்திருந்தாலும் பூநகரி மொட்டைக்கறுப்பன், பச்சைப்பெருமாளின் மவிசு குறைய வில்லை. இப்பொழுது பாசிமணிச் சம்பாவைத் தேடி வாங்குவதைப்போல அன்று கொண்டாட்டங்களுக்கெல்லாம் பூநகரி மொட்டைக்கறுப்பனையே வாங்கினார்கள். இதனால், புதிது புதிதாக ஏராளம் நெல்லினங்கள் வந்தாலும் இந்த இனங்களைப் "பூநகரியார்" கைவிடவில்லை. பூநகரிக்கு அது ஒரு தனி அடையாளம், தனிச்சிறப்பு என்று விதைத்தும் அறுத்தும் விளைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், இந்தச் சிறப்புக்குச் சோதனை வந்தது. முதற்சோதனை, மண்டைக் கண்ணாறு, கலவலப்பு ஆறு, குடமுருட்டி ஆறு போன்ற ஆறுகளை வழிமறித்து வன்னேரிக்குளமும் அக்கராயன் குளமும் கட்டப்பட்டதோடு பூநகரி வறளத் தொடங்கியது. அடுத்த சோதனை யுத்தம்.

*1980* களில் இலங்கையின் வடக்குக் கிழக்கில் உருவாகிய "யுத்தப் புயல்" பூநகரியையும் தாக்கியது. யாழ்ப்பாணத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பதற்காக பூநகரியில் 1656 இல் ஒல்லாந்தர் கட்டிய கோட்டை ஒன்றிருந்தது. (இப்பொழுது அது சிதைந்த நிலையில் உள்ளது). இப்படிப் பாதுகாப்புக் கோட்டை இருந்தால் அதன் பொருள், அது ஒரு இராணுவக் கேந்திரம் என்பதே. யுத்தம் என்றால் பாதுகாப்புக் கேந்திரங்களே அதன் மையம். இப்படிக் கேந்திரங்கள் இருந்தால், கிராமங்களுக்கும் ஊர்களுக்கும் சனங்களுக்கும் வளங்களுக்கும் சோதனைதான். அப்படித்தான் நடந்தது பூநகரியிலும்.

ஒல்லாந்துக் கோட்டை என்றும் வாடியடி என்றும் ஊரவர்கள் சொல்லிக் கொண்டிருந்த - நீண்டகாலமாக எந்தப் படைகளும் இல்லாதிருந்த - அந்தக் கோட்டையில் 1981 இல் வந்து குந்தினர் படையினர். தொடக்கத்தில் பெரிய அளவில் பிரச்சினைகளிருக்கவில்லை. ஆனால், நாட்டில் நிலைமை பிழைக்கத் தொடங்க, பூநகரிக்கோட்டையிலும் நிலைமைகள் பிழைத்தன. 1986 இல் புலிகள் அங்கிருந்த படையினரைக் கலைப்பதற்காக அல்லது அழிப்பதற்காக என்று ஒரு பெருந்தாக்குதலைத் தொடுத்தார்கள். ஆனாலும் நினைத்த மாதிரிக் காரியங்கள் நடக்கவில்லை. கோட்டையின் மீது புலிகள் பாயப் படைகள் பூநகரி நாலாம்கட்டையில் இருந்த புதிய பொலிஸ் நிலையக் கட்டித்திற்குப் பின்வாங்கி, நிலைகொண்டனர். 1987 இல் இந்திய (அமைதி) ப்படையினர் வந்தபோது கோட்டை அவர்கள் வசமாயிற்று. ஆனாலும் ஊர்களில் சனங்கள் இருந்தனர். வயல்களில் வெள்ளாமை விளைந்தது. ஆனாலும் இதெல்லாம் நீடிக்கவில்லை. 1990 இல் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்குமிடையில் மீண்டும்சண்டை தொடங்க ஆனையிறவுப் பாதையைப் படையினர் மூடினர். ஆனையிறவுப்பாதைக்குப் பதிலாக பூநகரி (கேரதீவு சங்குப்பிட்டிப்பாதை) பதிற்பாதையாகியது. ஆனால், இதுவும் நீடிக்கவில்லை. 1991 இல் "வலம்புரி நடவடிக்கை" மூலமாக மீண்டும் படையினர் பூநகரியைக் கைப்பற்றினர். படையினர் பூநகரிக்கு வந்ததோடு இந்தப் பாதையின் கதையும் முடிந்தது. பிறகு புலிகளும் சனங்களுமாக இயக்கச்சி ஊடாக கொம்படிக்கும் ஊரியானுக்கும் ஒரு பாதையை ஆனையிறவுக்குப் பின்பக்கமாகத் திறந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரிக்குப் படையினர் வந்ததோடு பூநகரியின் துயரம் தொடங்கியது. வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பிரதேசம் போர் நிலமானது. பூநகரிக் கோட்டையில் நிலைகொண்டிருந்த படையினரை முற்றுகையிட்டனர் போராளிகள். விளைவு முடிவில்லாச் சண்டை. சனங்கள் பெயர வெறிச்சோடின ஊர்கள். பூநகரியின் அடையாளங்கள் அத்தனையும் தொலைந்தன. மொட்டைக்கறுப்பனும் பச்சைப்பெருமாளும் விளையாமற்போனது. அகதி வாழ்க்கையில் மொட்டைக் கறுப்பன் மட்டுமல்ல, சாதாரண அரிசிக்கே வக்கில்லாத நிலை. பச்சைப்பெருமாளுக்குப் பதிலாக அம்மாப்பச்சை அரிசிக்கே அலைய வேண்டிய விதி விளைந்தது.

பூநகரியிலிருந்து பெயர்ந்தவர்கள் அப்படியே தெற்கே நகர்ந்து செம்மண்குன்றிலும் முட்கொம்பனிலும் ஜெயபுரத்திலும் குடியேறினார்கள். விவசாயிகள் சைக்கிளில் மண்ணெண்ணெய் கட்டி விற்றார்கள். விறகு வெட்டினார்கள். சில்லறைக் கடை போட்டார்கள். பலர் என்ன வேலை செய்கிறோம் என்று தெரியாமலே நாளுக்கொன்றாகக் கிடைக்கும் வேலைகளைச் செய்தார்கள். பூநகரியில் மொட்டைக்கறுப்பனுக்குப் பதிலாக சாவு அமர்க்களமாக விளைந்தது. பூநகரிக்கோட்டையில் நிலைகொண்டிருந்த படையினர் சுற்றிவரத் தாக்குதல்களை நடத்தினர். கோட்டையில் இருந்த படையினரை இலக்கு வைத்துப் போராளிகள் தாக்கினர். இப்படி நடந்தால் சாவு விளையாமல் வேறு என்னதான் விளையும்? இயற்கையாகவே பெருவெளியாக இருக்கும் பூநகரி சனங்களும் ஆடு, மாடுகளும் இல்லாமல் இன்னும் வெறிச்சிட்டிருந்தது. கேரதீவு சங்குப் பிட்டிப் பாதை மூடுண்டது. அது யாழ்ப்பாணத்திலிருந்து நாவற்குழி வழியாக பூநகரிக்கு வந்து, பிறகு தெற்கே மன்னார் செல்லும் ஏ. 32 சாலை. பெருந்தெரு. ஒரு காலம் இந்த வழியால்தான் திருக்கேதீஸ்வரத்துக்கு யாத்திரை சென்றார்கள். நான்கூட மன்னாரில் வேலை செய்த நாட்களில் (1981 இல்) இந்த வழியால் பயணித்திருக்கிறேன். இப்போதையைப்போல இந்தப் பாதை அன்று இருக்கவில்லை. அப்பொழுது, உயர்ந்த காட்டின் மத்தியில் ஒடுங்கிச் செல்லும் ஒரு சிறிய பாதையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. கேரதீவு சங்குப்பிட்டிப் பாலம் அன்று கிடையாது. பூநகரியிலிருந்து யாழ்ப்பாணம் போக வேணுமென்றால், சங்குப்பிட்டி வரைக்கும்போய், அங்கிருந்து "பாதை" என்ற மிதவை மூலமாக கேரதீவுக்குச் செல்ல வேண்டும். அப்படித்தான் கேரதீவிலிருந்து சங்குப்பிட்டிக்கு பயணித்துப் பூநகரிக்கு வரலாம்.

ஏ.32 பாதை தடையான பிறகு பயணங்கள் இல்லை. ஆனால், 1994 இல் யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளுக்கும் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்துக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையில் இந்தப் பாதையைத் திறக்கும்படி புலிகள் கோரிக்கை வைத்தனர். அந்தக் கோரிக்கை பிறகு நிபந்தனையாகியது. சந்திரிகா அரசாங்கமோ புலிகளின் கோரிக்கையையும் ஏற்கவில்லை. நிபந்தனையையும் ஏற்கவில்லை. விளைவாகப் போர் நிறுத்தம் முறிந்தது. போர் நிறுத்த முறிவு எல்லா இடங்களிலும் தலைகளை உருட்டியதைப்போல பூநகரியிலும் உருட்டியது. இதனால், மண்ணித்தலைச் சிவன் கோவிலுக்கு யாரும் போகமுடியவில்லை. அது சோழர்காலக் கோயில். சோழர்கள் இலங்கை மீது செல்வாக்குச் செலுத்தியகாலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கோயில் அது என்கின்றார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம். பூநகரியில் சோழர்களின் செல்வாக்கு ஒரு காலம் மிகப் பலமாக இருந்துள்ளது. மண்ணித்தலை தொடக்கம் பூநகரி நல்லூர் வரையில் உதிரிகளாகக் கண்டெடுக்கப்பட்ட சிற்பங்களும் நாணயங்களும் இதைச் சொல்கின்றன. இதைப் பற்றி ப. புஸ்பரட்ணம் தனியாக இரண்டு புத்தகங்களே எழுதியிருக்கிறார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில் படிக்கிற மாணவர்கள் சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுதெல்லாம் இந்தப் பகுதிகளுக்கு வந்து நாணயங்களைச் சேகரிப்பதிலும் இடங்களைப் பார்ப்பதிலும் மண்ணித்தலைச் சிவன்கோவிலை ஆராய்வதிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்பொழுதும் அப்படி வந்து போகிறார்கள்.

மண்ணித்தலைச் சிவன்கோவில் ஒன்றும் பெரிய கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல. சின்னஞ்சிறிய சிதைவு மட்டுமே கோயில் என்று சொல்லத்தக்க அளவுக்கு உருப்படியாக மிஞ்சியிருக்கிறது. அதற்குப் பக்கத்தில் ஒரு சிதைந்த தேவாலயமும் உண்டு. இந்தத் தேவாலயத்தின் காலப்பகுதியைப் பற்றி பலவிதமாகச் சொல்கிறார்கள். எதையும் சரியாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. மண்ணித்தலை -கௌதாரிமுனை என இந்தச் சின்னஞ்சிறிய கிராமத்தில் அதிகபட்சமாக 200 குடும்பங் களுக்குள்தான் உள்ளன. கண்ணெட்டும் தொலைவுவரை தென்படுவது மணல்குன்றுகள்தான் அழகான வெள்ளை மணல் குன்றுகள். இந்தப் பிரதேசத்தின். பெரும் செல்வம் அது. சிறு மலைகளைப் போல வெளிமுழுதும் நிரம்பியிருக்கும் இந்த மணல்குன்றுகளை மூன்று பக்கமும் சுற்றி சிறு பரவைக்கடல். இதை ஒழுங்கான முறையில் வடிவமைத்தால் அழகிய ஒரு சுற்றுலாத்தலமாகும். "சுற்றுலாப் படகு" வழியாக யாழ்ப் பாணத்திற்கும் மன்னாருக்கும் செல்லும் காலம் ஒன்று வந்தால் நிச்சமாக மண்ணித்தலை, கௌதாரிமுனை கவர்ச்சிமிக்க ஒரு சுற்றுலா மையம். மணல்குன்றுகளின் நடு நடுவே முளைத்திருக்கும் வீடுகள், பனைகள். இடையிடையே புதையவோ அழியவோ போவதாகத் தோன்றும் ஒழுங்கைகள். ஆனால், யுத்தம் என்று வந்து விட்டால் எதுவும் நாம் சொல்வதைப் போல இருப்பதில்லை. மண்ணித்தலை, கௌதாரிமுனையிலும் அப்படித்தான். அங்கே நின்ற ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான பனைகளில் பாதியை அது தின்றது. கௌதாரிமுனை ஒரு தொல்குடியிருப்பு என்ற சாயலே அற்றுப்போகும் அளவுக்கு யுத்தம் அனைத்தையும் சிதைத்தது. யுத்தத்தினால் கௌதாரிமுனை மட்டுமல்ல, பூநகரி வாடியடியைச் சுற்றிய கிராமங்களான மட்டுவில்நாடு, செட்டி யகுறிச்சி, பரமங்கிராய், கறுக்காய்த்தீவு, நாலாம்கட்டை, .... என்று எல்லாமே சிதைந்தன. அல்லது சனங்களில்லாமல் வெறிச்சது.

சனங்களில்லாத இடத்தில்தான் சண்டை உச்சம் என்றொரு காலம் இருந்தது. படையினர் நிலைகொண்டுள்ள அல்லது படை நடமாட்டம் உள்ள பகுதிகளை விட்டுச் சனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகிச் சென்று விடுவதால் அவை சூனியப் பிரதேசங்கள் ஆகிவிடும். அப்படிச் சன நடமாட்டமில்லாத சூனியப்பிர தேசங்களில் சண்டை நடந்ததால் சனங்களுக்குப் பெருமளவு சேதங்கள் குறைவு.

1990 களில்தான் பூநகரியில் சண்டை உச்சம். தொடக்கத்தில் இங்கே, வாடியடி என்று சொல்லப்படும் கோட்டையிலிருந்த படையினரின் மீது புலிகள் தாக்குதலை நடத்தினார்கள். என்றாலும் கோட்டை விழவில்லை. புலிகளும் விடவில்லை. தொடர்ந்து மாறிமாறித்தாக்குதல்கள் நடந்து கொண் டிருந்தன. ஒரு கட்டத்தில் இயக்கச்சிப் பாதையும் மூடப்பட, யாழ்ப்பாணத்துக்கும் வன்னிக்குமிடையிலான போக்கு வரத்தே இல்லாமற் போனது. இந்த நேரத்தில்தான் புலிகள் கிளாலி -பூநகரிக் கடல் வழிப்பாதையைத் திறந்தனர். இது பாதையல்ல. கொலைக்களம். கடல்வழியாகச் சின்னஞ்சிறிய படகுகளில் பயணிப்பது என்றால் ஆபத்தில்லாமல் வேறு எப்படியிருக்கும்? அதிலும் இயந்திரம் பொருத்தப்பட்ட ஒரு படகில் ஆறு அல்லது ஏழு, எட்டுப்படகுகள் என்று பிணைக்கப்பட்ட "தொடுவை" களில் பயணிப்பதென்றால்? இந்தத் தொடுவைகள் கடலில் தத்தளிக்குமே தவிர, நகராது. இந்த எட்டுப் படகுகளுக்குமான இயந்திரத்தின் குதிரைவலு எவ்வளவு தெரியுமா? எட்டு மட்டுமே. எரிபொருட் தட்டுப்பாடு காரணமாக தனித்தனியாக ஒவ்வொரு படகுக்கும் இயந்திரங்களைப் பொருத்த முடியாது என்பதால் இந்த இழுபறி. இப்படி எட்டுக் குதிரை வலு இயந்திரத்தோடு ஏழு, எட்டுப்படகுகளைப் பிணைத்துக்கொண்டு கடலில் தத்தளித்துப் பயணிக்கும்போதுதான் இலங்கைக் கடற் படையினர் படகுகளையும் பயணிகளையும் வழிமறிப்பார்கள். ஏதோ சோதனை நடவடிக்கைக்காக நடக்கும் வழிமறிப்பல்ல அது. தடைசெய்யப்பட்ட பாதையின் வழியாக பயணிப்பது குற்றம் என்பதற்காக நடக்கும் வழி மறிப்பு. இந்த வழிமறிப்பு என்றைக்கும் இரத்தம் சிந்தாமல் நடந்ததில்லை. போதாக் குறைக்கு விமானத்தாக்குதல்கள், வான்வெளித்தாக்குதல்கள் வேறு. இதனால், இந்தக் கடனீரேரி சிவந்து செந்நிறமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் நடந்தாலும் பயணங்கள் நடந்து கொண்டிருந்தன. வேறு வழியில்லை என்றால், நெருப்பையும் தின்னத்தான் வேணும் என்றமாதிரி இந்தப் பாதையைத் தவிர்க்க முடியாத நிலையில் சாவோடு போராடியே சனங்கள் போய் வந்தனர். நான்கூட இந்த அபாயத்தின் வழியாக பத்துப்பன்னிரண்டு தடவைகள் பயணித்திருக்கிறேன். என்றால், அந்த நாட்களில் பத்துப்பன்னிரண்டு தடவைகள் செத்துப் பிழைத்திருக்கிறேன். ஒரு கட்டத்தில் இந்தப் பயணமும் நெருக்கடிக்குள்ளாகும் நிலை தோன்றியது. பூநகரிப்பிரதேசத்தில் உள்ள நாகதேவன் துறையில் கடற்படை ஒரு படைத்தளத்தை நிறுவி, இந்தக் கடல்வழிப்பயணத்தைத் தடுக்க முயன்றது. அது வரையிலும் இராணுவத்தினர் மட்டுமே நிலைகொண்டிருந்த பூநகரியில் கடற்படையினரும் சேர்ந்து கொண்டனர். ஒரு காலம் (சோழர்காலத்தில்) பூநகரிக்கான துறைமுகமாக விளங்கிய நாகவேதன்துறை படைகளின் துறையானது. தினமும் புலி களுக்கும் இலங்கைக் கடற்படைக்கும் இடையில் கடுமையான மோதல்கள் நடந்தன. தினமும் கொலைகளும் பலிகளும் நிகழ்ந்தன. ஒருகட்டத்தில் - ***1993 11.11*** இல் - பூநகரிப் படைத்தளத்தின் மீது புலிகள் பாய்ந்தனர். "தவளைப் பாய்ச்சல்" என்று இந்த நடவடிக்கைக்குப் புலிகளால் பெயர் சூட்டப்பட்டிருந்தது. இந்த நடவடிக்கையில் அவர்கள் படையினரின் ராணுவத்தின் கனரக "ராங்" ஒன்றையும் கடற் படையிடமிருந்து அதிவேகப்படகுகளையும் கைப்பற்றியி ருந்தனர். இது புலிகளை படைக்கல ரீதியிலும் உளவியல் ரீதியாகவும் பலப்படுத்தியது. பிறகு, கடற்படையிடம் கைப்பற்றிய படகை வைத்தே கடலில் பாதுகாப்பு ஏற்பாட் டைச் செய்தார்கள். என்றாலும் தொடுவைப் பயணம் தான். ஆபத்துத்தான். ஆனால், குறைந்த ஆபத்து.

இப்படி கடல்வழியாக தொடுவையில் வருவோர் பூநகரி - நல்லூரில் இறங்கி (அப்பொழுது ஆலங்கேணி - நல்லூரில் துறை ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது) உவர் வெளியால் பயணித்து, நல்லூருக்கு வந்து, பிறகு பரந்தனுக்கோ, முட்கொம்பன் வழியாக அக்கராயனுக்கோ போவர். இதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட காலத்துக்கு நீடிக்கவில்லை. யுத்தம் எல்லா நிலைப்புள்ளிகளையும் நிரந்தரங்களையும் சிதறடித்துக் கொண்டிருந்தது. இல்லாவிட்டால் மாற்றயமைத்துக் கொண்டோ கலைத்துக்கொண்டோ இருந்தது.

1996 ஏப்ரலில் யாழ்ப்பாணக்குடாநாடு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் வந்த பிறகு, குடாநாட்டுக்கும் வன்னிப் பகுதிக்குமான பயணங்கள் முடிவுக்கு வந்தன. பூநகரியும் சனமின்றி வடிந்தது. காய்ந்துலர்ந்த வெளியில் காற்றுத் தனித்து வீசியது. மற்றும்படி வயல்களும் காடும் சிறுகடலுமாக அமைந்த பண்டைய ஊர்கள் ஆளரவமற்றுத் தனித்தன. கடலோரத்தில் புலிகள் மட்டும் காவலரண்களை அமைத்திருந்தார்கள். சிறுபரவைக்கடல் மீன்களைப் பிடிக்கவும் ருசிக்கவும் ஆட்களில்லாமல் சில ஆண்டுகள் கழிந்தன. பூர்வீகக் குடியிருப்புகளின் சொந்தக்காரரெல்லாம் ஊரூராய் அலைந்து கொண்டிருந்தார்கள்.

யுத்தம் எல்லாவற்றையும் தீர்மானிக்கும் ஒன்றாக இருந்தபோது சனங்கள் எதையும் தீர்மானிக்க முடியாதிருந்தார்கள். இதுதான் யுத்தத்தின் விதி. இதுதான் போரின் வலு. போரை வெல்ல முடியாத சனங்கள் போரினால் தோற்கடிக்கப் பட்டுக் கொண்டேயிருந்தனர். சொந்த நாட்டுக்காகப் போராடிய மக்கள் சொந்த ஊர்களிலேயே இருக்க முடியாத நிலை. சொந்த ஊரில் மட்டுமல்ல, புகலிடம்தேடி வேறு ஊர்களிலும் கூட இருக்க முடியாத வாழ்க்கை. ஒவ்வொரு தனிமனிதரின் உரிமைகளுக்காகவும் குரல் வைக்கிற உலகம் ஊர்களை விட்டும் வாழிடங்களை விட்டும் அலைந்து கொண்டிருப் போரைக் கண்டும் பேசாதிருந்தது. யுத்தம் உச்சக் கட்டத்தை எட்டி 2008, 2009 இல் இறுதித்தாண்டவம் முடிந்தது.

மீண்டும் சனங்கள் போர் நடந்த நிலத்துக்கு தங்கள் சொந்த ஊர்களுக்கு 2009 இன் இறுதி மாதங்களில் திரும்பிவந்தனர். கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப்பிரதேசத்தில்தான் முதல் மீள் குடியேற்றம் நடந்தது. ஆனால் அது முழங்காவிலில். பிறகுதான் பூநகரியில் மீள்குடியேற்றம் ஆரம்பமானது. மீள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்றத்துக்குச் சவாலாக இருந்தது, கண்ணிவெடிகளே. பூநகரியில் ஏராளம் கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டிருந்தன. நெல் விதைப்பு நடக்காது விட்டாலும் கண்ணிவெடிகளும் மிதிவெடிகளும் தாராளமாக விதைக்கப்பட்டிருந்தன. இந்தக் கண்ணிகளை அகற்ற அகற்ற அந்தந்தப் பகுதிகளில் மீள் குடியேற்றம் நடந்தது. மீள் குடியேற்றம் நடக்க நடக்க ஊர்களில் மீண்டும் சனங்களின் காலடிகள் பட்டன. ஆனால் சனங்கள் ஊருக்கு வந்திருந்தாலும் அவர்களிடம் எதுவுமே இருக்கவில்லை. ஆயிரக்கணக்கான மாடுகளும் ஆடுகளும் மேயும் வெளிகளில் ஒரு ஆடும் இல்லை. ஒரு மாடும் இல்லை. ஏன் யாருடைய வீட்டிலும் நாய் கூட இல்லை. வெளியில் விரிந்திருக்கும் வானத்தை ஏந்தி நிற்பதாகத் தோன்றும் பனைகளில் பாதியும் இல்லை. வேற்றூர்களில் இருந்து வந்த வேற்றாளர்களைப்போலவே அவர்கள் தங்கள் புதிய வாழ்வைத் தொடங்க வேண்டியிருந்தது.

பிறகென்ன? சனங்கள் மெல்ல மெல்ல தங்கள் "மண்பட்டணத்தை"க் கட்டத்தொடங்கினார்கள். மனிதர்கள் வல்லமை படைத்தவர்கள். எதையும் மீள உருவாக்கவும் புதிதாக உண்டாக்கவும் வல்லவர்கள். பூநகரி மனிதர்களும் தங்கள் மூதாதையரின் சுவடுகளை அழியவிடாமல் மீண்டும் அதைப் புதுப்பித்தனர். மெல்ல மெல்ல ஆடுகளும் மாடுகளும் ஊர்களுக்கு வரத்தொடங்கின. வயல்களை விளைக்க விளைந்தார்கள். ஆனால், எதுவும் அத்தனை சுலபமாக இருக்கவில்லை. மீண்டும் விதைப்பதற்கு அவர்களுடைய அருமையான "மொட்டைக்கறுப்பனும் பச்சைப்பெருமாளும்" இல்லை. அந்த நெல்லைத்தேடி அவர்கள் சாவகச்சேரிக்கும் மறவன்புலவுக்கும் போனார்கள். காரைநகரில் தேடினார்கள். மூடைக்கணக்காக லொறி லொறியாக மொட்டைக் கறுப்பனையும் பச்சைப்பெருமாளையும் ஏற்றி அனுப்பிய விவசாயிகள் கிலோக்கணக்கில் விலைபேசி அதை வாங்கி வந்தார்கள். காலம்தான் என்னமாதிரி விளையாடியது பார்த்தீர்களா?

பூநகரி மெல்ல மெல்லத் துளிர்க்கத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரிக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் தொடுக்கப் படாமல் நீண்டகாலமாகவே இருந்த காலம் வரலாற்றில் முதற்தடவையாக தொடுக்கப்பட்டது. இந்தப் பாலத்தைப் போட்டதுடன் பூநகரியின் முகமே மாறிவிட்டது. அப்படியே பூநகரியையும் பரந்தனையும் யாழ்ப்பாணத்தையும் மன்னாரை யும் இணைக்கும் வீதிகளும் புதிதாகப் புனர மைக்கப்பட்டன. பரந்தன் வீதியில் முந்தியிருந்த ஆஸ்பத்திரி பாதுகாப்பு மையமாகியது. புதிய மருத்துவமனை யாழ்ப்பாணம் வீதிக்கு மாறியது. சந்தையும் தெருக்களும் பள்ளிக்கூடங்களும் புத்தம் புதியதாகின. மின்சாரம் ஊர்களை ஒளிர வைத்தது. தொலைத்தொடர்புக் கோபுரங்கள் முளைத்து வெளியை ஆட்சி செய்கின்றன. ஆனால், ஒல்லாந்துக் கோட்டை மட்டும் அப்படிச் சிதைந்தபடியே கைவிடப்பட்டிருக்கிறது. இந்தக் கோட்டையை மீண்டும் அதே பழைய நிலையில் கட்டு விப்பதற்கு, பூநகரியின் தொன்மையை அழிய விடாமல் பாதுகாப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்று தகவல். மண்ணித்தலைச் சிவன்கோவிலையும் அங்கிருக்கும் பாழடைந்த தேவாலயத்தையும் புனரமைப்பதற்கும் முயற்சி கள் நடந்தால் சிறப்பு.

சனங்கள் புழங்கப் புழங்கத்தான் ஊர்களும் பட்டினமும் சிறக்கும். பள்ளிக்குடாவில் உள்ள மீன்பிடித்துறையில் அலைகளோடு பேசிக்கொண்டிருக்கும் படகுகளில் பகலிலும் இரவிலும் மீனுக்கும் இறாலுக்கும் கடல் அட்டைக்குமாக போய் வருகிறார்கள். அட்டைக்குளிப்பு ஒரு நல்ல தொழிலாக மாற வேணும் என்று பல விதமாகவெல்லாம் முயற்சி செய்து பார்க்கிறார்கள். பூநகரியில் பச்சை காணவேணும். அங்கே நீடித்துப் படர்ந்திருக்கும் வரட்சியைப் போக்க வேணும் என்று மாளாப்புக் குளத்தைக் கட்டும் முயற்சிகளும் நடக்கின்றன. அது வெற்றியடைந்தால் பூநகரியின் தண்ணீர்ப்பஞ்சம் தீர்ந்து விடும். இந்த மாதிரிப் பலதும் பத்தும் நடக்கிறது.

பூநகரியில் பல நூற்றாண்டுகளுக்கு முன், ஒரு ராஜ்ஜியம் இருந்திருக்கிறது. அதற்கான அடையாளச் சின்னங்கள் அங்குமிங்குமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழர்காலத்தில் பூநகரி ராஜ்ஜியம் செழித்திருக்கலாம் என்று வரலாற்றாய்வாளர்கள் சொல்கிறார்கள். பன்னெடுங் காலத்திலிருந்தே மக்கள் குடியிருப்புகளும் விளைநிலங்களும் இருந்து வருகின்றன. தொல்குடியிருப்பு என்றவகையிலேயே ஊர்களும் உள்ளன. தொழில் ரீதியாக, சமூக ரீதியாக ஒருகாலம் அப்படி அமைந்திருக்கலாம். இடைக்குறிச்சி, மறவர் குறிச்சி, செட்டியகுறிச்சி, கொல்ல குறிச்சி...அரசபுரம், கறுக்காய்த்தீவு, தம்பிராய், ஞானிமடம், நாகதேவன்துறை, அத்தாய், நல்லூர், ஆலங்கேணி... என. இது எப்படி வந்தது என்று தெரிய வில்லை. சில பெயர்கள் அழகும் அருமையும். சில அப்படி யல்ல. என்றாலும் காலத்துக்குப் பொருந்தாதவையையும் உள்ளன இவற்றை இப்படியே இன்னும் வைத்தி ருக்கத்தான் போகிறோமா?

2014-மார்ச்

*00*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்டை

## விசித்திரமான உலகமும் மனிதர்களும்

இது வேட்டைக்கெதிரான யுகம். வேட்டைக்கெதிரான சட்டங்களும் விதிகளும் இன்று உலகம் முழுதும் உருவாகி விட்டன. மனிதர்களைப் பாதுகாப்பதற்கிருக்கும் சட்டங்களை விட விலங்குகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் இன்று அதிகம். மனிதர்களைப் பாதுகாப்பதற்கிருக்கும் அமைப்பு களை விட மிருகங்களைப் பாதுகாப்பதற்கான அமைப்புகள் அதிகமாக உள்ளன. மனித வதையைத் தடுப்பதற்கான சட்டங்களைவிட மிருக வதையைத் தடுக்கும் சட்டங்கள் வலுவானவை. சூழல் பாதுகாப்புப் பற்றிய அக்கறைகளும் உயிரினங்களைக் காக்கவேண்டும் என்ற தவிர்க்க முடியாத தேவைகளும் வேட்டைக்கு ஆப்பு வைத்துள்ளன. உலகம் வேறு மாதிரி உருவாகி வருகிறது. இது வேடிக்கையாக இருக்கலாம். வேட்டையாடியே வாழ்க்கையை நடத்திய மனித குலம் இப்பொழுது வேட்டையாடுவது குற்றம் என்று சொல்கிறது. ஆனால், இப்படித்தானிருக்கிறது உலகம். உலகம் இப்படியிருக்கிறது என்றால், நாங்கள் அப்படியிருக் கிறோம் என்றே அர்த்தம். நாங்கள் அப்படியாகியிருக்கிறோம் என்பதை விட உலகத்தை அப்படி ஆக்கி வைத்திருக்கிறோம். இயற்கை வளங்களின் மீது கட்டுப்பாடற்ற முறையில் கை வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடியை நிறைத்த மனிதர்களின் எல்லையற்ற ஏகபோகத்தின் விளைவு இது.

எனவே இந்த ஏகபோகத்தை எப்படியாவது கட்டுப்படுத்த வேண்டும் என்றால் நாமே சட்டங்களை விதிக்க வேண்டியிருக்கிறது. நாமே விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டியுள்ளது. உலகம் இந்த மாதிரி சட்டங்களாலும் விதிகளாலும் வேகமாக மாறிக் கொண்டு எங்கோ போகிறது. ஆனாலும் மனிதரின் ருசியும் பழைய நினைவுகளும் அந்த வேகத்தில் மாறி விடுவதுமில்லை, மறைந்தது விடுவதுமில்லை. மனிதரின் ஆதி நினைவுகளில் வேட்டை ஒன்று. வேட்டையாடியே மனிதர்கள் வாழ ஆரம்பித்தார்கள்ளூ வாழ்ந்தார்கள். இந்த வேட்டை ஆர்வம் மனித வேட்டை வரை நீண்டு வளர்ந்தது வரலாறு. அது வேறு கதை. அடிப்படையில் மனிதர்களும் இயற்கையின் ஓரம்சம் என்பதால், விலங்கினத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், இந்த வேட்டை ஆர்வம் அவர்களிடத்திலே அதிகம். எந்தப் பெரிய நகரங்களில் வாழ்ந்தாலும், எந்தப் பெரிய வசதிகளோடு வாழக்கூடியதாக இருந்தாலும் வேட்டையாடும் மனம் உறங்குவதில்லை.

சில ஆண்டுகளுக்கு முன், மான் வேட்டையில் சிக்கிய (சல்மான்கான்) சல்மானைப்பற்றி அறிந்திருப்பீர்கள். மிகப் பெரிய வி.ஐ.பி. ஆனால், வேட்டையில் சிக்கினார். விளைவு ஐந்து ஆண்டுகள் சிறைவாசம். இந்த மாதிரி காடுகளுக்கு அண்மையாக உள்ள சிறைச்சாலைகளில் ஏராளம் வேட்டையாடிகள் சிக்கிச் சிறையில் ஆண்டுகளை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நாங்கள் வேட்டையைப் பற்றி இங்கே பேசுகிறோம். இது வேட்டையாடியதைப் பற்றிய பேச்சா? அல்லது வேட்டையாடுவதற்கான பேச்சா? நிச்சயமாக வேட்டையாடியதைப் பற்றிய பேச்சே.

உலகம் முழுதும் உள்ள மனிதர்களைப் போல தமிழர்களும் வேட்டையாடியிருக்கிறார்கள். அந்தப் பண்பாடுகளில் வேட்டை ஒரு கலையாக இருந்ததைப் போல தமிழர்களின் பண்பாட்டிலும் வேட்டை ஒரு பண்பாட்டம்சம். ஒரு கலை. மன்னர்கள் பொழுது போக்குவதற்காக வேட்டைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனதாகப் படித்திருக்கிறோம். அரச நாடகங்களில், திரைப்படங்களில், எல்லாம் வேட்டைக்காட்சிகளைப் பார்த்திருக்கிறோம். எம்.ஜி. ஆரின் "வேட்டைக்காரன்" படம் இந்தக் கணத்தில் உங்களுக்கு நினைவுக்கு வரலாம். அல்லது சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் வரும் வேட்டைக்காட்சி நினைவில் வரலாம். நான் கூட "வேட்டை" என்றொரு கதையை எழுதியிருக்கிறேன். செங்கை ஆழியான் எழுதிய "யானை" வேட்டையின் கதையே.

இந்த மாதிரி இமாஜினேசனாக நம் மனதில் படிந்துள்ள வேட்டைகளை விட நிஜ வேட்டை அனுபவம் ஏராளமாக நமக்குண்டு. வன்னி என்றால் வேட்டையாடும் களம் என்று ஒரு காலம் இருந்தது. வன்னியின் தொழில்களிலும் கலைகளிலும் வேட்டை ஒன்று. ஒன்றென்றால் சாதாரணமான ஒன்றல்ல. ருசியான ஒன்று. முக்கியமான ஒன்று. வாழ்வாதாரங்களில் ஒன்று. வாழ்க்கையின் அடையாளங்களில் ஒன்று.

நானும் ஒரு காலம் வேட்டையாடியாக இருந்திருக்கிறேன். அதனால், வேட்டையாடிகளோடு வாழும்படியும் பழகும்படியும் ஆனது. அது காட்டு வாழ்க்கை. காட்டு வாழ்க்கையென்றாலும் கவலையில்லாத வாழ்க்கை. ருசியான வாழ்க்கையில் கவலை எதுவும் தெரிவதில்லை. ஆனாலும் வேட்டை ஒரு தொழில் என்று வரும்போது அந்த வரும் படியில் வாழ்க்கை அமையும்போது, வாழ்க்கைக்காக வேட்டையைத் தொழிலாகச் செய்யும்போது கவலைகளும் கஸ்ரங்களும் வந்து விடுகின்றன. அந்த வகையாகவே வன்னியும் வேட்டையும் உள்ளது.

காடுடையது வன்னி. காடிருந்தால்.... மானிருக்கும். மரையிருக்கும். மர அணிலிருக்கும். பன்றியும் பறவைகளுமிருக்கும். உடும்பிருக்கும். உக்கிளானும் முயலுமிருக்கும். இவையெல்லாம் இருந்தால்..... வேட்டையுமிருக்கும். அந்த வேட்டையின் கதையே இது.

*00*

வன்னியில் வேட்டை ஒரு புதினமில்லை. அது வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றேன். வாழ்க்கையோடு இணைந்து விடுவதெல்லாம் வழமையாகி விடுவதுண்டு. வன்னி வேட்டையும் அந்த வழமைகளில் ஒன்றே. ஆனால், இந்த வழமை வாழ்க்கையோடு இணைந்திருப்பதால், அதற்கான நுண்மைகளும் பொறி முறைகளும் உருவாகிவிடுவதுண்டு. அதுவே கலையாகிறது. அப்படித்தான் வேட்டையும் ஒரு கலையே.

வன்னிக்கிராமங்கள் அல்லது வன்னிக் குடியிருப்புகளின் அமைப்பு முற்றிலும் வேறுபட்டது. முந்திய வன்னிக் கிராமங்கள் காடுகளின் மத்தியில் தொலைவுக்குத் தொலைவு தனித்தனியாக இருக்கும். போக்குவரத்து வசதிகள் குறைவு. இதனால், தங்களுக்குத் தேவையான அத்தனையையும் களஞ் சியப்படுத்தி வைக்க வேண்டும் என்ற நிலை. வேட்டைக்குச் சென்று விலங்குகளை வேட்டையாடி வத்தல் போட்டு வைப்பது கூட இதனால்தான். கத்தரிக்காய், பாவற்காய், பயற்றங்காய் வத்தல்களைக் கூட இப்படிப் போட்டு வைத்துக் கொள்வார்கள். இன்னொரு விசயம், வன்னியின் இந்தத்தனிக் கிராமங்களுக்கு கடற்கரையிலிருந்து மீன் வருவதும் அன்று குறைவு. இல்லை என்றே சொல்லலாம். வெளியூருக்குப் போய் வரும்போதே கருவாட்டை வாங்கி வருவார்கள். ஆகவே, மரக்கறி அடுத்ததாக இறைச்சிதான். இதனால்தான் வன்னியில் வேட்டை ஒரு முக்கியமான விசயமாக இருந்தது.

வன்னியில் வேட்டையையே தங்களின் தொழிலாகக் கொள்ளும் ஆட்கள் காலம் முழுதும் இருந்திருக்கிறார்கள். வெடிகார வைரமுத்து, வேட்டைக்கார செல்லத்தம்பி, பண்டிவெட்டி ஆறுமுகம், மான் கந்தையா, முயல் துரை, உடும்பு ராசர், உக்கிளான் செல்லன், வேட்டைக் கிட்டி என்று வேட்டையே அடையாளமாகி விட்டன. பலர். கிளி நொச்சியில் கூட அப்படியான வேட்டையாடிகள் ஒவ்வொரு ஊர்களிலும் இருந்தனர். பேர் சொல்லக்கூடிய வேட்டை யாடிகள். இந்த வேட்டையாடிகளைப் பற்றிய கதைகளும் ஆயிரக்கணக்கிலுண்டு. அதில் உண்மையுமுண்டு. புனைவு முண்டு. உண்மையும் புனைவும் கலந்ததும் உண்டு. காட்டிலும் வேட்டையிலும் அந்த அளவுக்குச் சாகசங்களைச் செய்தவர கள். "அடுப்பிலே சட்டியை வை" என்று சொல்லிவிட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவக்கோடு காட்டுக்குள் இறங்கினால் இறைச்சியோடு வருவார்கள் என்று சொல்லும் அளவுக்குச் சாகஸக்காரர்கள். இவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் தனித்தனியாகவே எழுதலாம். அதைப் போல பிரதேச ரீதியாக முறைப் படுத்தப்பட்ட தரவுகளுடன் பதிவுகளும் ஆய்வுகளும் செய்யப் படுவது அவசியம்.

விவசாயத்தையோ வேறு தொழில்களையோ செய்து கொண்டு வேட்டையாடியவர்களும் கிளிநொச்சியில் உண்டு. அந்த நாட்களில் விவசாயச் செய்கையில் ஈடுபட்டால் வேட்டையாடியே தீரவேண்டும். அது இன்றையைப் போல அல்ல. காடுகளின் மத்தியில் குடியிருப்புகளும் கமங்களும் தோட்டங்களும் இருந்த காலம். காடுகளின் மத்தியிலிருந்த படியால், காட்டு விலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க வேண்டும். இதற்காகவே அன்று விவசாயிகளுக்கு துப்பாக்கிகளை வழங்கியது அரசு. பெரும்பாலான விவசாயி கள் அன்று துப்பாக்கிகளை வைத்திருந்தார்கள். அன்று விலங்குகள் பாதுகாப்புச் சட்டங்களும் பெரிய அளவில் இல்லை. இருந்தாலும் அதை நடைமுறைப்படுத்தும் அக்கறை யும் இருந்ததில்லை. இந்த மாதிரி ஒரு வாய்ப்போடு கையில் துவக்கை வைத்திருந்தால் பிறகு சொல்ல வேணுமா. ஊரில் வேட்டைக்குப் போகாதவன் விளங்குவானா! என்ற மாதிரி எல்லோரும் வேட்டைக்குப்போனார்கள்.

ஆனாலும் எல்லோராலும் சிறப்பாக வேட்டையாட முடியாது. ஏனென்றால், வேட்டையாடுவது ஒரு கலை. அதன் நுணுக்கங்களைத் தெரிந்தவர்களே அதைச் சிறப்பாக ஆடுகிறார்கள். அதில் ஜெயிக்கிறார்கள்.

வேட்டையையே தங்களின் வாழ்க்கையாகக் கொண்டவர்கள், காட்டை நன்றாக அறிந்தவர்கள். "காடறிந்தவனுக்கே வேட்டைப் பாக்கியம்" என்றொரு பழமொழி வேட்டைக் காரரைப்பற்றி உண்டு. காட்டை அறிந்தால்தான் அதில் எங்கே குளம் இருக்கிறது? எங்கே மோட்டைகள் இருக்கின்றன? எங்கே ஆறிருக்கிறது? எந்தப் பகுதிகளில் என்னென்ன மரங்கள் இருக்கின்றன. எந்தக் காலத்தில் எந்தெந்த மரங்கள் பழுக்கும்? எந்தப் பழங்களுக்காக எந்தவகையான மிருகங்கள் வரும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை எந்த வழியால் வரும்? என்ற விவரமெல்லாம் தெரியும். அப்படி விவரங்கள் தெரிந்தால்தான் அதற்குத் தோதாக வேட்டைக்குத் தயாராகலாம். காடறிந்தவன் சில சந்தர்ப்பங்களில் வழிகாட்டியாகி விடுவதுமுண்டு. சில சந்தர்ப்பங்களில் வேறு இடங்களிலிருந்து குறிபார்த்துச் சுடக்கூடியவர்; வேட்டையாடக்கூடியவர் வருவார். ஆனால். அவருக்கு இந்தக் காடு புதிதாக இருக்கும். அவர் பழகிய காடு வேறு. இது வேறு. என்றால், இந்தக் காட்டை அறிந்தவர் வழிகாட்டியாகி அவரை வழிப்படுத்துவார்.

விவசாயத்துக்குக் காவல் இருக்கும்போது பயிர்களை அழிக்க வரும் மான், மரை, பன்றி, காட்டெருமை, முயல் போன்றவற்றை வேட்டையாடுவதுண்டு. வயற்கரையில் அமைக்கப்படும் மறைவுகளிலிருந்து அல்லது வயலில் அமைக்கப்பட்டிருக்கும் பரண்களில் இருந்து முன்னே வரும் விலங்குகளைச் சுடுவர். சில வேளை பயிரைத் தின்ன வரும் மிருகங்கள் வருகின்ற வழியில் தடம் வைத்து அவற்றைப் பிடிப்பதும் உண்டு. சிலர் மிருகங்கள் வரும் வழியில் பொறிகளை வைப்பார்கள்.

விவசாயச் செய்கை முடிந்து ஓய்வாக இருக்கும் காலங்களில் பெரும்பாலான விவசாயிகள் வேட்டைக்குப் போவார்கள். குழுக்களாக வேட்டைக்குப் போவதுமுண்டு. அப்படிக் குழுக்களாகப் போகின்றவர்கள் தங்கு வேட்டையில் நான்கு ஐந்து நாட்கள் அல்லது அதற்கும் கூடுதலான நாட்கள் காட்டில் தங்கி நின்று வேட்டையாடித் திரும்புவர். இப்படிக் காட்டில் நின்று வேட்டையாடுவதற்காகப் போகும்போது சமையல் அடுக்குகள், துவக்குகள், (இதிலும் பல வகையுண்டு. இடியன் என்று சொல்லப்படும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள், பிரேஸில், பிரிட்டன் போன்ற நாடுகளின் தயாரிப்புகளான துப்பாக்கிகள் என்று பல வகை), தோட்டாக்கள் (இதிலும் அப்படித்தான், பலவகையுண்டு. **10** ஆம் நம்பர், **12** ஆம் நம்பர், **16** ஆம் நம்பர் என. முயல்சுடுவதற்குப் பயன்படுத்தும் தோட்டாவை பன்றியைச் சுடுவதற்கோ காட்டெருமையைச் சுடுவதற்கோ மரையைச் சுடுவதற்கோ பயன்படுத்த முடியாது. முயல், காட்டுக்கோழி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்க்காகம், பெருஞ்சொண்டன் போன்றவற்றைச் கூடுவதற்கு 04 ஆம் நம்பர் தோட்டா), ரோச் லைற்கள், வேட்டைக் கத்திகள், (இது பல அளவுகளில் பல வகையாக இருக்கும்), வேட்டைக்கோடாலி, மண்வெட்டி, மனித வாடையைத் தடுக்கக் கூடிய எண்ணெய்கள் எனப் பல ஏற்பாடுகளோடு செல்வர். இந்தக் குழுவில் காடு தெரிந்தவர், குறிபார்த்துச் சுடக்கூடியவர்கள், வேட்டையாடிய விலங்குகளை உரித்துப் பாகம் பண்ணி, வத்தல் போடுவதற்காகப் பதப்படுத்தக் கூடியவர்கள் என்று பலர் இருப்பதுண்டு. இப்படிப் பலருமிருந்தால்தான் தங்கு வேட்டை செய்யலாம். சிலர் தாங்கள் வேட்டைக்குப் போகாமல் தங்களுடைய துப்பாக்கி களைக் கொடுத்து விடுவதுமுண்டு. அதற்காக "துப்பாக்கிக்கு ஒரு பங்கு" என்ற மாதிரி ஒரு கணக்கில் இறைச்சி கூலியாக வந்து சேரும்.

தங்கு வேட்டைக்குப் போகும்போது, ஒரு சிறிய படையணி போவதைப் போலிருக்கும். பெரும்பாலும் கால்நடையாகவே காட்டிற்குச் செல்வதுண்டு. பின்னாட்களில் சிலர் உழவு இயந்திரங்களில் சென்றுமிருக்கிறார்கள். சினமாக்களில் வருவதைப்போல, ஜீப்பில், சென்று வேட்டையாடுவது வன்னியில் குறைவு. இயக்கங்களின் காலத்தில்தான் அப்படியான வேட்டைகள் நடந்தன. தங்கு வேட்டையில் போனால், நீர்நிலைகள் இருக்கும் இடத்திலிருந்து சற்றுத் தொலைவில் - அதிக தூரம் என்றுமில்லாமல் கிட்டவாக என்றுமில்லாமல் வாடியை அமைப்பார்கள். காட்டுச் சூழலுக்கு ஏற்றமாதிரியே வாடி இருக்கும். விலங்குகளுக்கு அசுமாத்தம் - அதாவது மனித நடமாட்டம் தெரியக் கூடாது. கண்டபடி எங்கும் திரிய முடியாது. காற்றின் எதிர்த்திசை யிலேயே வாடியை அமைக்க வேணும். அப்பொழுதுதான் விலங்குகளுக்கு மனித வாடை விழாது. மனித வாடையை விலங்குகள் உணர்ந்தால் அவை அந்தப் பகுதியை விட்டுக் கலைந்து சென்று விடும். மிருகங்கள் கலைந்து சென்றால் வேட்டையை விட்டுத் திரும்ப வேண்டியதுதான். அல்லது வேறு காட்டுக்குப் போக வேணும். இதைத் தான் முன்னரே சொன்னேன், வேட்டை ஒரு கலை என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கு வேட்டையில் தங்கியிருப்பது ஓரிடம். வேட்டை யாடுவது இன்னொரு இடத்தில். சில வேளை குழுக்களாகப் பிரிந்து சென்று இரண்டு மூன்று களத்தில் வேட்டையாடுவது முண்டு. நீர்நிலைகளுக்குத் தண்ணீர் குடிக்க வரும் விலங்குக ளைக் குறி வைத்து அதற்குத் தோதாக மறைவில் தங்கியிருந்து வேட்டையாடுவர் சிலர். சிலரோ, மரங்களில் பரண் அமைத்து, அதிலே இருந்து வேட்டையாடுவர்.

மறைவில் தங்கியிருப்பதற்கு சிலர் பங்கர் வெட்டுவதைப் போல குழிகளை வெட்டி, அந்த மண் வெளியே தெரியாதவாறு அதை இலைகுழைகளால் மறைத்து, அதற்குள்ளிருந்து குறிபார்ப்பர். சிலர், முன் பக்கத்திற்கு மட்டும் மணல் அரணை அமைத்து அதை மறைத்துக் குறிபார்ப்பதுண்டு.

தங்கு வேட்டையில் பெரும்பாலும் இறைச்சியைப் பதனி டுவதே வத்தல் போடுவதே முக்கியமானது. இறைச்சியை நார் நாராகப் பாகம் பண்ணி, அதைப் பரணில் அல்லது கம்பியில் தொங்க விட்டுக் கீழே நெருப்பை மூட்டிவிடுவர். இறைச்சி அந்த வெக்கையில் பதமாகி வத்தலுக்குத் தோதாக வரும். இந்த வத்தலுடன் வேட்டை முடிந்து திரும்பும் போது கிடைக்கும் உடன் இறைச்சியையும் எடுத்துக் கொண்டு வீடு திரும்புவார்கள்.

வன்னியில் மறிப்பு வேட்டை, கலைப்பு வேட்டை, பரண் வேட்டை, மறைப்பு வேட்டை, பொறி வேட்டை, தங்கு வேட்டை என்ற பல முறைகள் உண்டு. உண்டு என்று இப்பொழுது சொல்ல முடியாது. முன்பு அப்படி இருந்தது. அதைப்போல மான் வேட்டை, மரை வேட்டை, உடும்பு வேட்டை, முயல்வேட்டை என்றும் வேட்டைகள் இருந்தன.

"மறிப்பு வேட்டை" என்பது விலங்குகள் தனியாகவோ கூட்ட மாகவோ வரும்போது அவற்றை மறித்து வேட்டையாடுவது. இதற்காக சிலர் உழவு இயந்திரத்தையும் பயன்படுத்துவ துண்டு. இந்தக் காலப் பகுதியில் எந்த நேரத்தில் எந்த வழியால் மிருகங்களின் நடமாட்டம், போக்குவரத்து இருக்கும் என்று நன்றாக அவதானித்து விட்டு மறிப்பு வேட்டைக்குச் செல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலைப்பு வேட்டை" என்பது, பத்துப் பதினைந்து அல்லது அதற்கும் அதிகமானவர்கள் சேர்ந்து, வேட்டை நாய்களுடன் காட்டில் இறங்கி ஒரு பக்கத்தால் வெடி கொழுத்தி, ஆரவாரமாகச் சத்தமிட்டுக் கொண்டு செல்வர். இந்த ஆரவாரச் சத்தத்தினால் இன்னொரு பக்கத்தில் - விலங்குகள் வெருண்டோடிச் செல்லும். எதிர்த்திசையில் நான்கு ஐந்து பேர் துப்பாக்கிகளுடன் காத்து நிற்பர். அங்கே ஓடிவரும் விலங்கு களைக் குறிவைத்துச் சுடுவர். இதில் சிலவேளைகளில் ஐந்து ஆறு விலங்குகள் கூட ஒரே நாளில் விழும். கலைப்பு வேட்டை ஊர்களிலும் நடக்கும். ஊர்களில் உள்ள பற்றை பறுகுக் காடுகளில் முயல்களை வேட்டையாடுவதற்கும் இந்த மாதிரிக் கலைப்பார்கள். யாழ்ப்பாணத்தில் இது மாரி காலத்தில் அதிகமாக நடக்கும்.

பொறி வேட்டை காடுகளில் அல்லது வேலிகளில் விலங்குகள் வந்து போகும் வழிகளை அவதானித்து, அதிலே கண்ணி களையும் பொறிகளையும் வைப்பது. முயலுக்கும் பன்றிக்கும் தடம் வைப்பவர்களும் உண்டு. முயலுக்குச் சிறிய கம்பிகளில் வளையங்களைப் பின்னி வைப்பர். பெரிய விலங்குகளுக்கு கேபிள் கம்பிகளில் தடம் வைப்பதும் உண்டு. விசைப் பொறிகளை வைப்பதும் உண்டு. விசைப்பொறி அபாயகரம ானது. கூடியவரையில் ஆட்கள் போய் வராத வழிகளைப் பார்த்தே இந்தப் பொறியை வைப்பர். ஆனாலும் சில வேளை இந்த விசைப் பொறியில் சிக்கியவர்களுமுண்டு.

மறைப்பு வேட்டை பெரும்பாலும் நீர்நிலைகளை அண்மித்தே நடப்பதுண்டு. நீர் குடிக்க வரும் விலங்குகளை இலக்கு வைத்தே இது நடக்கும். ஆனாலும் தண்ணீர் குடிக்கும்போது விலங்குகளைச் சுடுவதைப் பெரும்பாலானவர்கள் செய்வ தில்லை. மிருகத்தைக் கொல்வது என்றாலும் அதற்கும் ஒரு அறம் - தர்மம் - என்று பார்க்க வேணும் என்ற நம்பிக்கை. தண்ணீர் குடிக்கும்போது கொல்வது அறமில்லை என்ற நம்பிக்கை வேட்டைக்காரரிடம் பலமாக உண்டு.

இவைபோக, முயல்வேட்டை, உடம்பு வேட்டை என வேட்டை நாய்களுடன் ஊரின் ஓரங்களில் வேட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாடுவதும் உண்டு. இதை ஒரு பொழுது போக்கு வேட்டை என்றே சொல்ல வேண்டும். விடலைப் பருவத்தில் உள்ளவர்களே அதிகமாக இந்த வேட்டையில் ஈடுபடுவார்கள். ஓடும் வல்லமை அவர்களிடம்தானே இருக்கிறது!

பெருங்காடுகளில் வேட்டை ஒரு வகை. சிறு காடுகளில் இன்னொரு வகை. பொட்டல் வெளிகளில் அது வேறு. வயலில், குளக்கரையில், ஆற்றோரங்களில் என்று வன்னி முழுதுமே வேட்டைக்களங்கள்தான். சிலசமயங்களில் வளவின் வேலியிலேயே வேட்டையாடலாம்.

பெருங்காடும் காட்டோரக் கிராமங்களும் அல்லது காட்டின் மையக்குடியிருப்புகளும் வயலும் வேளாண்மையுமான வாழ்க்கைச் சூழல்தான் வன்னியின் பொது அடையாளம். ஆனாலும் பளைப் பிரதேசம் இதிலிருந்து சற்று விலகியது. அங்கே பெருங்காடில்லை. சிறுகாட்டில் மான், முயல், பன்றி, முள்ளுப்பன்றி, உடும்பு, உக்கிளான், மரஅணில், காட்டுக் கோழி என்று சிறு விலங்களே வேட்டையாடப்படுவதுண்டு.

விலங்குகளை விட பறவைகள் வேட்டையாடப்படுவதும் உண்டு. நீளச்சொண்டன், ஆலா, செங்கழுத்தன், நிலம்பதுங்கி, காடை, கவுதாரி, காட்டுக்கோழி, கூழைக்கிடா.... என்று இந்த வேட்டை நடக்கும். சிலர் புறாக்களுக்குக் கண்ணி வைத்துப் பிடிப்பதுமுண்டு. எங்கள் ஊரில் (இயக்கச்சியில்) முன்பு கோனார் என்றொருவர் இருந்தார். கண்ணி வைத்துப் புறாக்களைப் பிடிப்பதில் வலு விண்ணன். மெல்லிய இழை கொண்ட கயிற்றினால் பின்னப்பட்ட வலைகளே இந்தக் கண்ணிகள். விசைக்கண்ணிகளும் உண்டு. காட்டுக் கோழியையும் அப்படிப் பிடிப்பார். ஆனால், புறாக்களைப் போல, காட்டுக்கோழி ஒன்றும் பொலிவதில்லை.

மான் வேட்டையில் தோல் மிஞ்சும் என்று சொல்வார்கள். மான் இறைச்சி இரண்டு நாட்களில் முடிந்து விடும். ஆனால், மான் தோல் நீண்டகாலத்திற்கு இருக்கும். முன்னர் மான்தோல் இல்லாத வீடுகளே இல்லையெனலாம். ஒவ்வொரு வீட்டிலும் விருந்தாளிகளை வரவேற்பதற்கு மான்தோல்களைத் திண்ணைக்குந்தில் விரிப்பார்கள். மான்கொம்புகளும் அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தான். அலங்காரத்துக்காக வீடுகளில் மாட்டி வைத்திருப் பார்கள். இப்பொழுது மான்தோலையும் மான் கொம்பு களையும் வீட்டில் வைத்திருப்பதற்குத் தனியான லைசென்ஸ் தேவை. இதற்கெல்லாம் எங்கே அலைவது என்று யாரும் இதை யெல்லாம் வைத்துக் கொள்வதேயில்லை. அப்படியிருந் தாலும் இவற்றின் விலை ரொம்ப உயரத்துக்குப் போய் விட்டது.

என்ன செய்வது? மான் வேட்டையாடி சிறைமானாகிய சல்மான்கானின் நினைவுதான் மீண்டும் வருகிறது. உலகம் அப்படி மாறி விட்டது. வேட்டையில் ஆரம்பித்த மனித சமூகம் வேட்டைக்கு எதிராகவே மாறியிருக்கிறது.

விசித்திர மானதே இந்த உலகமும் மனிதர்களும்.

2014-மார்ச்

00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து இலக்கிய சூழலில் பன்மைத்துவ ஆளுமையாகக் கருணாகரன் தடம் பதிக்கிறார். மறுதலிக்க முடியாதபடி வாழ முடியாமல் வாழ்ந்த காலங்களையும் கடக்க முடியாமல் கடந்த காலங்களையும் யதார்த்தத்தைச் சிதைக்காமல் அதனதன் வலியுடனும் வீச்சுடன் தனக்கே உரித்தான மொழியில் இந்தக் கட்டுரைத் தொகுப்பில் பதிவாக்கியுள்ளார்.

–யாத்ரிகன்





ISBN978-955-4900-06-6
9789554900066

கரைச்சி
கலாசாரப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org